
# ஆழ்வார்களின் வழிபாட்டு மரபு

தி. ரமா



# ஆழ்வார்களின் வழிபாட்டு மரபு

(முதல் தொகுதி)

**தி. ரமா** எம்.ஏ., எம்.ஃபில்;
கோயிற் கலைப்பட்டயம்
தமிழ் விரிவுரையாளர்
தனலெட்சுமி சீனிவாசன் கலை அறிவியல்
மகளிர் கல்லூரி
பெரம்பலூர்

**தியாகராசா பதிப்பகம்**
1317, வள்ளுவர் நகர் மெயின் வீதி (கடைசி),
காரைக்குடி - 630 002.


# Biblio Graphical Data

| | | |
|---|---|---|
| Title | : | **ALVARGALIN VALIPATTU MARAPU** |
| Author | : | **T. Rama** M.A., M.Phil., |
| Publisher | : | **Thiagaraja Pathippagam**<br>No: 1317, Valluvar Nagar Main St,<br>Karaikudi-630 002. |
| Publication No. | : | 4 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Size of the Book | : | 1/8 Crown |
| No. of Pages | : | 144 |
| Price | : | Rs. **40/-** |
| Subject | : | Religions Poetry |
| Copy Right | : | Author© |
| Designed & Printed By | : | **Sivaa Graphics**, Ch-94.<br>Ph: 9282152070 |



The author of the book is alone liable for any legal action at her own risk and responciblity in case of disputes or criticism.

*This book is published with*
*the finacial assistance of*
***Tirumala Tirupathi Devastanam's***
*under their scheme*
*'Aid to publish religious books'*



திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருளுகண்டாய்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| | அன்புகலந்த அணிந்துரை | 5 |
| | அணிந்துரை | 9 |
| | முன்னுரை | 12 |
| | காணிக்கை | 15 |
| | அறிமுகவுரை (ஆங்கிலம்) | 16 |
| | ஆழ்வார் அருளிச் செயல்களின் சிறப்பு | 19 |
| | வழிபாடு | 30 |
| 1. | பெரியாழ்வார் பாசுரங்களின் வழிபாட்டு மரபு | 34 |
| 2. | ஆண்டாளின் வழிபாட்டு மரபு | 77 |
| 3. | திருமழிசையாழ்வார்காட்டும் வழிபாட்டு மரபு | 96 |
| 4. | தொண்டரடிப்பொடியாழ்வார் காட்டும் வழிபாட்டு மரபுகள் | 110 |
| 5. | திருப்பாணாழ்வார் வழிபாட்டு மரபு | 134 |
| | அன்றும் இன்றும் | 141 |

தமிழ்மாமறை மரபுக்கவி மன்னர்

## சக்திசரணன் அவர்கள் வழங்கிய

# அன்பு கலந்த அணிந்துரை

'ஆழ்வார்கள் வழிபாட்டு மரபு' என்ற நூலைக் கண்ணுற்றேன்; முழுமையும் படித்தேன்; களிப்பெய்தினேன். இஃது ஒரு சிறந்த நூல். தமிழ் மரபு வழிவந்த தமிழ் மாணாக்கி ஆழ்வார்களின் திருப்பாசுரங்களை ஓதி உணர்ந்து வழிபாட்டு மரபுகளை அடையாளம் கண்டு முறைப்படுத்தி எழுதியிருப்பது ஆய்வு நெறிமுறைக்கு நல்ல சான்றாகும். திருமால் வழிபாடு தமிழகத்தில் தொன்று தொட்டு நடைபெற்று வருகிறது; அத்தொன் மரபு இன்றும் வாழ்ந்து வளர்ந்து நிலை பெற்றுள்ளது.

தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலில் 'மாயோன் மேய காடுறை யுலகம்' என்று ஆசிரியர் மாயோனை முதற்கண் எண்ணுகிறார். அவர் திருமாலுக்கு முதன்மை கொடுத்திருப்பது திருமாலின் மேன்மையைக் காட்டுகிறது. 'காரும் மாலையும் முல்லை' என்பர். திணைக்குரியோர் பெயரைச் சொல்லும் போது ஆயர் என்று திருமாலடியாரை உரைப்பர். எல்லா வகையாலும் தொல்காப்பியர் திருமாலுக்கு முதன்மை கொடுத்து இலக்கணம் கூறுகிறார். மாயோன் என்றாலும் மால் என்றாலும் ஒருவனையே குறிக்கும். தான் எல்லாவற்றையும் மயங்கச் செய்பவன் மால்; தான் எல்லாவற்றுள்ளும் மயங்கி நிற்பவன் மாயோன். மாயோன் வழிபாடு தமிழகத்தில் இடையறவு படாது தொடர்ந்து வருகின்றது.

பரிபாடல் திருமால் பற்றிப் புகழ்ந்து பாடுகின்றது. தமிழகத்தில் ஆதிசேடன் கோயில் இருந்ததைப் பரிபாடலால் அறிய முடிகிறது. சிலப்பதிகாரம் திருவரங்கம், திருவேங்கடம், அழகர் மலை என்ற திவ்விய தேசங்களைப் போற்றிப் புகழ்கிறது. கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரையும் மதுரைக்குள் நுழையும் முன் காணுகின்ற மாங்காட்டு மறையோன், திருமால் பெருமையை மாங்காட்டாழ்வாராகவே எடுத்துரைக்கின் றான். சிலப்பதிகாரத்திலுள்ள ஆய்ச்சியர் குரவை திருமாலைப் போற்றும் மிகச் சீரிய பகுதியாகும். மூவேந்தர் தலை நகரங்களிலும் திருமால் கோயில்களும் திருமால் வழிபாடும் நடைபெற்றமையை இளங்கோவடிகள் புனை கின்றார்.

வைணவப் பேராற்று வெள்ளம் மூவேந்தர் திருநாடுகளிலும் ஓடிப்பாய்ந்தது; தொண்டை நாட்டிலும் நடுநாட்டிலும் முதலாழ்வார் மூவர் தோன்றியருளினர். சோழநாட்டில் தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருப்பாணாழ்வாரும் திருமங்கையாழ்வாரும் பிறந்தருளி னர். பாண்டியநாட்டுக்குப் பெரியாழ்வாரும் ஆண்டாளும் சடகோபரும் தோன்றி வைணவ சித்தாந்தத்தை நிலை நிறுத்தினர். சேரநாட்டில் குலசேகரப் பெருமான் தோன்றி வைணவப் பயிரை வளர்த்தார். இவர்கள் ஆழ்கடலில் அரவணையில் துயின்ற பெருமானைப் போற்றிப் பாடுகின்ற பாசுரங்களில் எம்பெருமானை வழிபடுகின்ற வழிபாட்டு மரபுகளையும் இயல்பாகச் சுட்டிப் போயிருக் கின்றனர். அருந்தமிழ் பாடிய ஆழ்வார்கள், வழிபாட்டை யும் சடங்குகளையும் பாட வேண்டும் என்ற நோக்கத்தில் பாடாது எம்பெருமான் எழுந்தருளிய திவ்விய தேசங்களை யும் எம்பெருமானையும் அனுபவித்து அனுபவித்துப் பாடி போயினர். ஒவ்வொருவரும் அவரவர் விரும்பிய நோக்கத் திற் கேற்பக் கடலில் மூழ்கி எழுவது போல நூலாசிரியர்

செல்வி தி.ரமா வழிபாட்டு மரபுகளைக் காணப் பாசுரக் கடலில் மூழ்கியுள்ளார்.

பகவானுடைய கல்யாணகுணக் கடலிலே ஆழ்ந்து நாம் பெற்ற இன்பத்தை உலகுய்யத் திவ்ய பிரபந்தமாக அளித்தவர்கள் ஆழ்வார்கள். அங்ஙனம் நோக்கின் ஆராவமுதமாகிய திவ்ய பிரபந்தமாகிய கடலிலே ஆழ்ந்து முத்தெடுத்துக் கோத்தளித்தவர், இந்நூலாசிரியர், இக் காலத்திலுள்ள பெரும்பாலான ஆய்வு நூல்களோடு இந்நூலை ஒப்பிட்டால் பரமாணுவுக்கும் பர்வதத்திற்கும் உள்ள வேறுபாடு விளங்கும். கடலோரத்தில் சிப்பி எடுத்து வருவோரைப் போலன்றி ஆழ்கடலில் சென்று சிறந்த முத்தெடுத்துத் தொகுத்து அளித்துள்ளார் இந்நூலாசிரியர். அங்குத் திரட்டிய கருத்து முத்துக்களைக் கோவையாக்கி அழகுபடுத்தித் தமிழன்னைக்கு ஆசிரியர் அணிவித்திருக் கிறார். இந்நூல் தெளிவாகவும் ஒழுங்காகவும் வரையறுத்துக் கருத்துகளை விளக்குகிறது.

பிரபந்தங்களில் ஒவ்வொன்றும் ஒவ்வொரு ஏற்ற முடையது. கோதா உபநிஷதம் என்று போற்றப்படும் திருப்பாவை, காத்தியாயினி விரதத்தைப்பற்றி விளக்கு கிறது. வாயினால் பாடி மனத்தினால் சிந்தித்துத் தூமலர் தூவித் தொழுதல் வழிபாடு எனப்படும். நாச்சியார் திருமொழி காமன் நோன்பை உணர்த்துகிறது. பெரியாழ் வாரின் பல்லாண்டு இறைவன் உடுத்துக் களைந்த ஆடை, உண் கலத்தில் ஏந்திய உணவு, பூசும் சந்தனம் ஆகியவற்றை விவரிக்கிறது. தொண்டர் குலத்துள்ளீர் வந்தடி தொழுது ஆயிரம் நாமம் சொல்லிப் பல்லாண்டு கூறும்படி வழிகாட்டுகிறது. பெரியாழ்வார் திருமொழி என்ன என்ன பூக்களைப் பயன்படுத்தலாமென்று விளக்குகிறது. பிரம்ம சூத்திரமாகப் போற்றப்படும் திருநெடுந் தாண்டகத்தில் பல்வேறு திருப்பதிகளின் நாமங்கள் வந்துள்ளன. இது போல ஒவ்வொரு பிரபந்தத் திற்கும் ஓர் ஏற்றம் நம் முன்னோர்களால் கூறப்படுகிறது.

அத்துணை நூல்களையும் ஆராய்ந்து முத்தெடுத்துக் கொடுத்த பெருமை இந்நூலாசிரியர்க்குரியது.

நூல், தனித்தமிழாகவும் ஒருமை பன்மை மயக்க மின்றியும் எழுவாய் பயனிலையொடும் அமைந்த நன்னடையாகும். நற்றமிழ் நன்னடை கை வந்த செல்வி ரமா அவர்களின் ஆய்வுப் பார்வை, சமய இலக்கியங் களைக் காண்பது பாராட்டத்தக்கது. ஆழ்வார் பாசுரங் களைப் பற்றிப் பல நூல்கள் பலராலும் எழுதப் பெற்றால் தான், வைணவ இலக்கியங்கள் எல்லா இடங்களிலும் எல்லா நிலையினரிடமும் பரவும்.

இந்நூலாசிரியர் பன்னிரு ஆழ்வார்களின் வழிபாட்டு மரபுகளையும் ஆராய்ந்தெழுதியுள்ளார். அவற்றை முன்னரே படித்துப் பார்த்தேன்; பிழையற்ற கருத்துக்கள்; வியாக்கினங்களிலிருந்து மேற்கோள்; திருக்கோயில் நடைமுறையிலிருந்து சான்றுகள்; நெறியான சிந்தனை; முறையான கருத்தோட்டம். இந்நூல் செவ்வனே எழுதப் பெற்ற நூல். அதற்காக நூலாசிரியரைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

'ஆட்டுவித்தால் யார் ஒருவர் ஆடாதாரே' என்ற மொழிக்கேற்ப, இந்நூல் தோன்றுவதற்குக் காரண பூதரான முனைவர். டி. சொக்கலிங்கம் (முன்னாள் துறைத் தலைவர், அழகப்பா பல்கலைக்கழகம்) அவர்களுக்கு அசேஷ வைணவ வுலகம் நன்றி பாராட்டக் கடமைப் பட்டுள்ளது. நூலாசிரியர் சமய இலக்கியங்களை விருப்பத் துடன் பயின்று பல நூல்களை எழுதிட வேண்டுகின்றேன். பல்லாண்டு வளமுடன் வாழ்க.

காரைக்குடி
20.08.04

சக்திசரணன்

கலைப்புல முதன்மையர்,
பேராசிரியர் & தலைவர் தமிழியல் துறை
பாரதியார் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்
முனைவர் **இரா. சந்திரசேகரன்** வழங்கிய

# அணிந்துரை

தமிழ் இலக்கியம் காலந்தோறும் தன்னைப் புதுப்பித்துக் கொண்டு புதுப்பித்துக் கொண்டு இளமைத்திறம் மாறாத உற்சாகத்துள்ளலுடன் தான் இயங்கிக் கொண்டு வந்திருக்கிறது. ஒவ்வொரு கால கட்டத்திலும், அவ்வக் காலத்தின் சமூகத்தின் தேவைக்கேற்ற பாடு பொருளை, ஏற்ற அழுத்தமான குரலில், பொருத்தமான ஊடக வடிவமைப்பில் விளைவித்துக் கொண்டுள்ளது. காதலுடன் கனிந்தது ஒரு காலம்; வீரத்தின் வெளிப்பாடாய் ஒரு காலம்; அற நெறிப்பாட்டின் அறை கூவலாய் ஒரு காலம்; உலகளாவிய தோழமையுடன் ஒரு காலம்; உரிமைக்கான குரல் எழுப்பி ஒரு காலம்; ஆனால் எல்லாக் காலங்களிலும், எல்லாக் குரல்களிலும் ஒரு பொது நோக்கம் இருந்தது. அது - மானுட மேம்பாடு; மனிதனைச் சீரமைக்கிற, மனிதரை மேம்படுத்துகிற ஒரு சீரார்ந்த இலக்குதான் எல்லாக் காலங்களிலும் ஆற்றல் மையமாக இருந்தது. அப்படி ஒரு காலத்தில் உயர்ந்தொலித்த ஒரு உணர்ச்சிக் குரல் தான் பக்திக் குரல். திருமால் நெறியையும் சிவநெறியையும் பற்றி வாழ்தலை இலக்கிய அடியவர்கள் வைணவமாகவும் சைவமாகவும் தத்தம் கோட்பாடுகளை அமைத்துக் கொண்டு தமிழில் திருமுறைகளாகவும் திவ்யபிரபந்த பாசுரங்களாகவும் கரைந்து கரைந்து பக்திநெறிகளைப்

பரப்பினர். தமிழில் பக்தி உணர்ச்சி செழிக்கச் செழிக்க அவர்கள் பாடியருளிய பாடல்கள் தமிழர் வரலாற்றில் - பண்பாட்டில் - பக்தி சார்ந்த அறநெறிகளை விதைத்தன.

ஆழ்வார்களின் வழிபாட்டு மரபுகளைப்பற்றி செல்வி தி.ரமா இந்த நூலில் ஆராய முயன்றுள்ளார். அவரே தன்னடக்கமாகச் சொல்லுவது போல "ஆசைபற்றி அறையலுற்று இந்த நூலில் சில கருத்துக்களைக் கூற முனைந்துள்ள இந்த முயற்சி, உண்மையில் மிகப் போற்றுதலுக்குரிய முயற்சி. தமிழிலக்கியத்தில் தளராத ஈடுபாடும், புலமைநாட்டமும் கொண்டவர் செல்வி தி.ரமா தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பவர்; பல்வேறு கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் படித்தளித்தவர், பல்வேறு இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகள் வெளியிட்டவர். இவ்வளவு இளைய வயதில் இவ்வளவு செயற்பாடுகளுடன் இயங்கிக் கொண்டிருக்கும் செல்வி தி.ரமா வாழ்த்துதலுக் கும் போற்றுதலுக்கும் உரியவர். அவர்தம் செயல்பாடு களின் இன்னொரு சீரிய, செழுமையான, பயன் விளைவாக ஒளிர்கிறது இந்த நூல்.

ஆழ்வார்களின் அருளிச் செயல்களின் சிறப்பு என்னும் முன்னுரைப்பகுதியில், அருளிச்செயல்கள் பற்றிய ஒரு தெளிவான, நிறைவான அறிமுகத்தைச் செய்துள்ளார். பாடல்களின் அமைப்பு முறை, யாப்புமுறை, உள்ளடக்கம் குறித்து மிகச்சுருக்கமாக, ஆனால் மிகத் தெளிவாக நூலாசிரியர் எடுத்துக் காட்டியுள்ளார். தொடர்ந்து இயல் வாரியாகப் பெரியாழ்வார், ஆண்டாள், திருமழிசை யாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருப்பாணாழ் வார் ஆகியோருடைய வழிபாட்டு மரபுகளை, அவரவர் களின் தனித் தன்மைகளுடன் எடுத்து விளக்கிக் காட்டி யுள்ளார். பாடல்களின் விளக்கமாக மட்டும் அமையாமல், பாசுரங்களின் அடிப்படையில், ஆழ்வார்களின் தனித்த

சிறப்பியல்களைக் கண்டறிந்து வெளிப்படுத்தியிருப்பது செல்வி. ரமா அவர்களின் பரந்த புலமையையும், ஆய்வுப் பயிற்சியையும் காட்டுகிறது.

இந்த நூலின் சிறப்பிடம் பெறும் வகையில், இறுதிப் பகுதியான "அன்றும் இன்றும்" அமைந்துள்ளது. பழைய வைணவ மரபுகள், காலங்கள் தாண்டி இன்றும் நடைமுறைப் படுத்தப்படும் செய்திகளை ஆய்வாளர் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறார். திருவரங்கத்தில் வெந்நீரில் திருமஞ்சனம் நடைபெறுகிறது. திருமெய்யம் திருமால், மெய்யர் என்று அழைக்கப்படுவது, ஆழ்வார் பாசுரங்களில் ஒளிபடும் மரபு பேசப்படுகிறது. திருவேங்கட மலையில் திரு ஆராதனத்துடன் குடை கொண்டு செல்லப்படும் மரபு, கும்மாயம் போன்ற ஆராதனப் பொருட்கள் போன்ற பல செய்திகளை நூலாசிரியர் தம் நுண்மாண் நுழை புலமையால் எடுத்துக் காட்டுகிறார்.

செல்வி ரமா அவர்களின் இந்த நூல் மிக எளிமையான ஆனால் மிகத் திருத்தமான மொழி நடையில், நேர்த்தியான கருத்தாடல் அமைப்பில் மிக அழகாக உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கிய, பண்பாட்டு மரபுகள் தொடர்பான ஆய்வுக் களத்தில் இது பெரிய கொடை. சிறப்பான பங்களிப்பு, தமிழிலக்கிய, பண்பாட்டு ஆய்வில் ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் செல்வி தி.ரமா அவர்களை வாழ்த்திப் பாராட்டுவர். இது போல நூறு நூறு நூல்கள் வழங்கும்படியாக அவர் வளர்க; புலமைத்திறத் தோடும், செயல் வீச்சோடும் அவர் உயர்க;

அன்புடன்

முனைவர் இரா.சந்திரசேகரன்

# முன்னுரை

## ஆய்வு முயற்சி

தமிழர்களின் கல்வித் திறத்தையும் கலைத்திறத்தையும் வளர்த்தவை; தமிழ்நாட்டுச் சமயங்களே; திருமாலையும் சிவனையும் முழுமுதலாகக் கொண்ட வைணவமும் சைவமும் தமிழகத்தை வாழவைத்தவை; தமிழரை வளர்த்தவை. சமயங்களால் தமிழகம் எய்திய பயன்களும் பேறுகளும் எண்ணில் அடங்காதவை. வைணவச் சான்றோர்களாகிய ஆழ்வார் பெருமக்கள் அருளிச் செய்த பாசுரங்கள் இனியவை; எளியவை; ஓதுவாருக்கு நன்மை விளைவிப்பவை. அந்தப்பாசுரக் கடலிலே மூழ்கித்திளைத்து உண்மை கண்டவர்கள் மிகப்பெரிய அறிஞர்கள், புலமையாளர்கள், அனுபவசாலிகள்; அவர்கள் தேடிக்கண்டு முகந்து உலகிற்குக் கொடை செய்தவை என்றும் கிடைத்தற்கரிய பெருஞ்செல்வங்கள். கவிச்சக்கரவர்த்தி கம்பன் சொன்னது போல ஆழ்வார் பாசுரங்களில் சிலவற்றை நோக்கிச் சில கருத்துகளை ஆசைபற்றி அறையலுற்று இந்த ஆய்வு நூலை உங்கள் பார்வைக்குக் கொண்டு வருகிறேன்.

## ஆய்வுத்தேடல்

நாலாயிர திவ்விய பிரபந்தம் ஓதி உணரும் அகவையும் எனக்கில்லை. சமயச்சார்பும் இல்லை. தமிழ் இலக்கியங் களைப் பயின்ற தமிழ்ப் புலமையே என்னுடைய மூலதனம். அதை முதலாக வைத்துப் பாசுரச் செல்வத்தைப் பன்முறை ஓதி நன்முத்துகளைக் கண்டேன். கோயில் பற்றி ஆய்வு மேற்கொண்ட பொழுது திருக்கோயில் வழிபாடு பற்றிய சிந்தனை ஓடியது. நூல்களை ஓதும் போது வழிபாடு பற்றிய குறிப்புகள் நூல்களில் காணப்படுகின்றனவா? என்று

தேடுகின்ற ஆய்வுத்தேடல் இருந்தது. அதனால் நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் ஆழ்வார்கள் வழிபாட்டு மரபுகளாகக் கூறுகின்றவற்றைத் தனித்துத் தொகுத்து நோக்கினேன்.

ஆழ்வார்கள் ஒவ்வொருவரின் பாசுரங்களால் ஒவ்வொருவரின் சிந்தனைகளையும் தொகுத்துக் கருத்துகளை வரையறுத்துக் கொண்டேன். பாசுரங்களில் மனத்தான் வணங்கும் வழிபாடே பெரிதும் வலியுறுத்தப்பட்டது. புகையும் பூவும் பலியும் இடுகின்ற வழிபாடும் பாசுரங்களில் புலப்பட்டது. இரண்டு வகையான வழிபாட்டையும் ஆழ்வார் பாடல்கள் மக்களுக்கு உணர்த்துகின்றன.

## தமிழைப் போற்றும் வைணவம்

வைணவத்திருக் கோயில்களில் ஆழ்வார் பாசுரங்களுக்குப் பெரும் முதன்மைத் தரப்படுகிறது. பிரபந்தத்தை அரையர் சேவையாகவும் இராப்பத்து என்றும் பகல்பத்து என்றும் ஓதுகின்ற வழக்கம் திருக்கோயில்களில்இன்றுமுண்டு. கோயில்களில் நடைபெறுகின்ற பூசை மரபுகளையும் உரிமைகளையும் விளக்குகின்ற நூல்கள் வைணவத்தில் உள்ளன. திருவரங்கத்திற்குக் 'கோயில் ஒழுகும்' திருப்பதிக்குத் 'திருமலை ஒழுகும்' உள்ளன. இவையன்றித் திருக்கோயில் ஆராதனம் நடைபெறும் போது பின்பற்றக்கூடிய மரபுகளையும் ஓதும் பாசுரங்களையும் 'திருவாராதனக் கிரமம்' எடுத்துரைக்கிறது. இவற்றால் திருக்கோயில்களிலே தமிழுக்கு இருந்த தகுதியும் வழிபாட்டு மரபுகளும் தெரிய வருகின்றன. இந்த மரபுகளைத் திருக்கோயில்களின் நடைமுறையொடு ஒப்பிட்டு ஆராய்ந்தால் மேலும் பல உண்மைகள் கிட்டும். இந்த ஆராய்ச்சி தமிழுக்கும் கோயில் கலைக்கும் வேண்டற்பாலது.

கோயிற்கலை பயின்ற முயற்சியின் வெளிப்பாடாக என் ஆய்வுக் காலத்தின் இடைப் பிறவரலாக ஐந்து ஆழ்வார்களைப் பற்றிய கட்டுரைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. ஏனையன இரண்டாம் தொகுதியாக வெளியிடுதற்கு

அணியம் செய்யப்பட்டுள்ளன. பொருள் நிலை கருதியே இந்த ஆய்வை இருதொகுதிகளாக்கியுள்ளேன்.

## அறிஞர் துணை

இக்கட்டுரைகளைக் கையெழுத்துப்படியிலேயே படித்துப் பார்த்து வேண்டிய திருத்தங்கள் கூறிய பெரியார் கவிஞர் சக்திசரணன் (ஸ்ரீரங்கம்) அவர்களை நன்றி பாராட்டி வணங்குவதன்றி வேறு கைம்மாறு யாது செய்யவுள்ளது. இவற்றைப் பல்வேறு பணிகளுக்கிடையே படித்து நோக்கிய இன்னொருவர் அழகப்பா பல்கலைக்கழகக் கணிணித் துறை இயக்குநர் பேராசிரியர் இரகுநாதன் அவர்கள் தமிழ் அன்பர்; சிறந்த புலமையாளர்; தமிழ் நூல்களைத் தொகுப்பதில் பேரார்வம் உடையவர்; அவர்களுக்கும் என்னுடைய அன்பு விரவிய வணக்கங்கள்.

இக்கட்டுரையை எழுதத்தூண்டிய பேராசிரியர் முனைவர் தே. சொக்கலிங்கம் அவர்களுக்கு நன்றி. ஆய்வுக்கும் நூலாக்கத்துக்கும் தேவையான நூல்களைத் தந்துதவும் அழகப்பா பல்கலைக் கழக நூலகத்திற்கும் அவண் பணிபுரியும் அலுவலர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்கு கிறேன். இதனைச் சிறந்த முறையில் நூலாக்கித் தந்த சிவா கிராபிக்ஸ் நிறுவனத்தாருக்கும் இதயம் நிறைந்த நன்றி. 'ஆழ்வார்களின் வழிபாட்டு மரபு' பற்றிய கட்டுரைகள் தமிழ்ப்பொழில், தமிழ்மாருதம், போன்ற இதழ்களில் வெளி வந்தன. அவற்றை வெளியிட்ட அந்த இதழ்களின் ஆசிரியர் களுக்கு நன்றி உரியது.

இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய பேராசிரியர் முனைவர் இரா. சந்திரசேகரன் அவர்களின் அளவிலா அன்புக்கும் அருளுக்கும் நன்றி சொல்வதற்குச் சொற்கள் இல்லை; அப்பெரியார் பல் நலம் பெற்று வாழ இறைவனை வேண்டுகின்றேன்.

பெரம்பலூர் **தி. ரமா**
01.09.2004

# காணிக்கை

அழகப்பா பல்கலைக்கழக முதல் துணை வேந்தராக
விளங்கித்தமிழுக்கும் கோயிற் கலைக்கும்
சிறந்த தொண்டாற்றிய கல்வியரசி
செல்வத்திருமகள் – தமிழ்ப்புலமைச் செல்வி

கலையன்னை
**டாக்டர்(திருமதி) ராதாதியாகராஜன்**
அவர்களுக்கு

'ஆழ்வார்கள் வழிபாட்டு மரபை'க்
காணிக்கையாக்குகிறேன்



"துப்புடை யாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவர் என்றே
ஒப்பிலேன் ஆகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்த மையால்
எய்ப்பென்னை வந்து நலியும் போதங்
கேதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே"

# ALWAR PADALKALIL VAILPATTU MARAPU

Alvars are South Indian sri vaisnava Mystics; A systematic philosophy of mysticism was developed by them in their Hymns. No account of Indian mysticism would be complete without knowing something about these.

The Poetry of the south Indian Alvars has not studied as fully as its merits. Their text played a very important role in the shaping of the religious life of the people of south.

The Alvars seem to have flourished between the 2nd century A.D. and 8th century A.D. The Alvar philosophy is deeply indepted to the Vedic and Puranic scriptures and is seeping with the mtho – mysticism characteristic of the latter. The Alwars were also conversant with the agamas (Panjaratra) which provided them with the concrete worship of the icons.

This is the first part of the Alwar Valipattu Marapu. It deals with five Alwarkal ie Periyalwar, Andal, Thirumalisai Alwar, Thonodradipodi Alwar, Thiruppan Alwar. Every chapter, I discuss the religious rituals which is prevailed in vaishnava temples. The holy saints, proclmates not only the temple rituals and customs, but also they said personal worship Anmartha and Paratha Pooja's were mentioned by holy people. Thus this manuscript researches only prayer customs and temple rituals.

In this volume, the life history of Alwars were not discussed due to the page limit; I took interest only in the customs of temple worship; but the holy saints mentioned personal worship also.

Periyalvar is the poet of divine child. It is Krishna's childish pranks that he sings, perhasps as His loving mother in all the details of child's life in the nursery, where the background is the mythology of Krishna. Periya alwar, is the only Alwar who has sung Thiruppallandu; (Blessed many years) This song is now being daily recited in all the temples.

Goda is well – known as the only woman Alwar of Sri Vasihnavism. Goda is also known as Andal. She is said to be a foundling daughter of Periyalwar. Andal's songs are the lover songs of a woman pinling for her lord, God. She describes the ritual of a penance, a worship and a prayer to Manmate

Thirumalicai alwar is the fourth Alwar. He was a great scholar referring often to philosophical conceptions in his poems. Apart from his venba Antati he had composed. Thirucantaviruttam sung to the tune of four equal measures in a long monosyllable, a disyllables and again a monosyllable. The work is full of rhythmic beauty, perhaps because of the new device thus introduced.

Thonodar – adip – podi (vipanàrayana) became one of the most romantic Alwar because he fell from virture and was redeemed by the grace of god. He earned the title 'Enjoyer of the dust of the holy feet of the devotees of God.' When he attained the love of God fully, through serving the devotees of God. He composed two important works. The first one is called the Garland (Thirumalai) of forty – five hymns. The second work is called the 'Song of the morning' (Thirup – palli – yelucci)

The alvar reveals an excessive faith in the power of the name of the Lord when he says that even the asuras, Who torture other and are cruel, will be freed from sin by uttering His name. There can hardly be any change of Nature without seeing the name of God. Surely the Alvar also is aware of the

fact that one should attain the Transcendent God, beyond the realms of the celestials.

The second composition of the Thondar-adip-podi is called Thiruppalliyellucci, When opening the door of the sanctum sanctoium, to sing the songs announcing the dawn of sunrise. The godhead reposing in sleep is awakened and the arrival of the gods and men to worship him early is the morning. Three times are prescribed for worship of god, namely the morning, noon and evening. These are sandhya (meeting) times. God is the ever-awake one whilst every one is asleep. Indeed it is certainly a type of anthropomorphism to sing about morning, of god (aradhana). It is our morning that we announce to god offering ourselves to service of him.

Tiruppan alvar was a saint belonging to the caste of untouchables (pan camas). He has sung only ten verses. These ten verses are Just the expression of the revelation of the form of god granted to him as he entered or rather was taken into the sanctum sanctorium of Sri Ranganatha's temple at Sri Rangam.

Alvar has song only ten verses describing graphically his vision of the image at srirangam, its eyes, its mouth, its chest, its navel, its dress and, its feet, all so beautiful and so captivating to his heart, so life – like and divine. It is his vision which he projects forth.

The mystic experience of merging in the Divine or the ultimate, witnessed both in the case of Pan Alvar and Andal, is one of greatest significance.

In this first Volume author goes through the works of Alvar and the collected all the source and wrote the articles. This book deals with only temple rituals and personal worship. There is no literary criticism. The present work undertakes to elucidate the contribution made by these (five) Alwars.

# ஆழ்வார் அருளிச் செயல்களின் சிறப்பு

## தொகுப்பின் பெயர்

பன்னிரு ஆழ்வார்களும் திருமாலின் சிறப்பினையும் பெருமையினையும் குறித்துப்பாடிய பாசுரங்களே நாலாயிர திவ்வியப் பிரபந்தம். இதனைத் தொகுத்தவர் நாதமுனி, நாலாயிரம் பாசுரங்கள் இருப்பதால் இதனை ஆன்றோர் நாலாயிரப் பிரபந்தம் என்று போற்றினர். திருமாலின் திவ்விய குணங்களில் ஆழ்ந்துள்ள ஆழ்வார்கள் இத் தொகுப்பிலுள்ளவற்றைத் திருவருட் பாசுரங்களாகப் பாடியமையாலும் இவை தெய்வத்தொடர்புடை மையாலும் திவ்வியப்பிரபந்தம் என்று இத்தொகுப்பு பெயர் பெறுகிறது. திவ்விய - தொடர்புடைய, பிரபந்தம் - நூல் என்று பொருள் கொள்வர். திருமாலின் கல்யாண குணங்களில் ஈடுபட்டு அழுந்தியவர்களே ஆழ்வார்கள் என்றும், இறைவனின் வடிவழகில் ஈடுபட்டு அழுந்தினவர்கள் ஆழ்வார்கள் என்றும் இவர்கள் மக்கள்படும் துயரைக் கண்டு பொறாமல் அத்துயரத்தில் அழுந்தினர் ஆதலினும் ஆழ்வார்கள் என்றும் போற்றப் பெற்றனர். எனவே இறைவனுடைய கல்யாண குணங்களிலும் வடிவழகிலும் ஈடுபட்ட காரணத்தால் சுவாநுபவமும் பிறர் துயரம் கண்டு உள்ளம் தாங்காத காரணத்தால்

பரோபதேசமுமான இருநிலைகளும் இவர்கட்கு மாறி மாறித் தோன்றலாயிற்று. இவ்விருநிலைகளின் செயல்களே நாலாயிர திவ்வியப் பிரபந்தம் என்னும் தமிழ்மறை.

## முதலாழ்வாரும் பெரியாழ்வாரும்

பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாசுரங்களே நாலாயிர திவ்வியப் பிரபந்தம். இவற்றில் பொய்கை யாழ்வார் முதல் திருவந்தாதியையும் (100), பூதத்தாழ்வார் இரண்டாம் திருவந்தாதியையும் (100), பேயாழ்வார் மூன்றாந்திருவந்தாதியையும் பாடினர். இவர்களே முதலாழ்வார் மூவர். இவ்மூவருக்கும் திருக் கோவிலூரில் உள்ள இடைக்கழியில் திருமால் காட்சி (திருக்கோவிலூரில் உலகளந்த பெருமாள் சந்நிதி) கிடைத்தது. இக்காட்சியின் பயனாகப் பிறந்தவை மூன்று அந்தாதிகள். இவர்களுடைய பிறப்புப்பற்றியும் உலகவாழ்க்கை பற்றியும் அறியப் போதிய ஆவணங் கள் இல்லை. இவர்கள் மூவரும் நூறு நூறாகப் பாடிய முந்நூறு அந்தாதியான பாக்களும் வெண்பாயாப்பின. **திருமழிசையாழ்வார் பாடியன நான்முகன்** திருவந் தாதி (96) திருச்சந்தவிருத்தம். இந்நூலாசிரியரை யாப்பருங்கல விருத்தியுரைஆசிரியர் குடமூக்கிற்பகவர் என்றும் திருச்சந்த விருத்தத்தை வாசுதேவனார் சிந்தம் என்றும் அறைகுவர். இரண்டு நூல்களும் தத்துவப் பொருளை மிகுதியாகப் பேசுகின்றன. இந்நூலாசிரி யரின் செய்யுள் நடைமிடுக்கானஓசையுடையது.

பெரியாழ்வார், பெரியாழ்வார் திருமொழியையும் (473) திருப்பல்லாண்டையும் பாடினார். ஆண்டாள் திருப்பாவை (30) நாச்சியார் திருமொழி இரண்டையும் பாடினார். பெரியாழ்வாரின் இயற்பெயர் விஷ்ணு சித்தர். இவர் வாழ்ந்த காலம் ஒன்பதாம் நூற்றாண்டு. இவருடைய பாடல்கள் திவ்வியப் பிரபந்தம் முதலா யிரத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. இவர் தன்னுடைய

*பாசுரங்களில் தன்பெயரைப் புதுவைக்கோன் பட்டர் பிரான், வேயர்தங்குலத்துதித்த விட்டுசித்தன், தென் புதுவைக்கோன் பட்டர்பிரான், வேயர்தங்குலத்துதித்த விட்டுசித்தன், தென்புதுவைப்பட்டன் என்றெல்லாம் குறிப்பர். இவர் முதலில் பாடிய பல்லாண்டு வைணவர் களால் நாள்தோறும் ஓதப்பட்டு வருகிறது. இவர் கண்ணனைச் சிறுகுழந்தையாகக் கருதிப் பல வகையாகப் பாடியது பிற்காலத்தில் பிள்ளைத் தமிழ் இலக்கியவகை தோன்ற முன்னோடியாக இருந்தது. திருமாலைப் பல்லாண்டு வாழ வாழ்த்தி அவன் பிறப்பு முதலாக இறையருள் புரியும் இளைஞன் ஆவதுவரை ஒவ்வொருபகுதியாக அனுபவித்து அனுபவித்துப் பாடியிருக்கிறார். இதனால் இத்தொகுப்பில் இவர் பாசுரங்கள் முதற்கண் தொகுக்கப் பெற்றிருக்கின்றன.*

## கோதையும் மங்கையும்

*இவரின் வளர்ப்புமகள் ஆண்டாள் என்றும் கோதை என்றும் போற்றப்படுவாள். இறைவனைக் காண வேண்டும், கண்டு அவனுக்கு உவந்து அடிமை செய்ய வேண்டும் என்ற ஆர்வம் பெருகி உள்ளடங்காமல் பாடப்பட்டவையே திருப்பாவை. இதனை உபநிடத சாரம் என்பர். திருமாலை இப்பொழுதே சேர வேண்டும் என்று எழுந்தகாதல் உள்ளடங்காமல் வெளிப்பட்ட காதல் வெள்ளமே நாச்சியார் திருமொழி. பெரியவாச்சான் பிள்ளை,*

> ஸம்ஸாரத்திலே உறங்குகிறவர்களை எழுப்பி
> எம்பெருமான் தானே தன்னைக் காட்டக்
> கண்டார்கள் ஆழ்வார்கள் ஆண்டாள் தானே
> சென்று எம்பெருமானை எழுப்பித்தன் குறையை
> அறிவித்தாள் ஆகையால் அவர்களிலும் இவள்
> விலக்சணை"

*என்று இவள் சிறப்பையும் பெருமையையும் கூறுகிறார்.*

திருமங்கையாழ்வார் ஆலிநாட்டைச் சார்ந்த திருக்குறையலூரில் குறுநில மன்னராக விளங்கினார். இவர் இயற்பெயர் நீலன், நீலநிறமாக இவர் இருந்த தால் இப்பெயர் பெற்றார். இவ்வாழ்வார் தன்னை ஆலிநாடன், அரட்டமுக்கி அடையார்சீயம், கொங்கு மலர்க் குழலியர் வேள், மங்கை வேந்தன், கொற்ற வேற்பரகாலன், கலியன் என்ற பெயர்களைத் தன்னுடைய பாசுரத்தில் குறிக்கிறார். இவர் பெரிய திருமொழி (1084) திருக்குறுந் தாண்டகம் (20) திருநெடுந் தாண்டகம் (30) திருவெழுகூற்றிருக்கை (1) சிறிய திருமடல் (1) பெரியதிருமடல் (1) ஆகியவற்றைப் பாடி யுள்ளார். இவர்பாடிய ஆறுபிரபந்தங்களும் வேதத்திற்கு ஆறு அங்கங்களாக விளங்குவன. இவர் பேரருளும் தமிழ்ப் புலமையும் கவிபாடும் திறமும் பெற்றவர். பழையகாதல் இலக்கிய மரபுகளைப் பின் பற்றிப் பல பாடல்களைப் பாடினார். இவர் தம்மை நாயகி யாகவும் திருமாலை நாயகனாகவும் கொண்டும் பாடும் போது காதல் கை கூடப் பெறாமல் ஏங்கும் பெண் மடலேற முயல்வதாகப் பாடியுள்ளார். இவ்வாறு செய்யும் முயற்சி தமிழ்ப் பண்பாட்டில் ஆண்களுக்கே உரியது. பெண்களுக்கு இல்லை. ஆனால் சிறிய பெரிய திருமடல்கள் இரண்டிலும் பெண்மடல் ஏறும் முயற்சி பேசப்படுகிறது. இப்பண்பாட்டுப் பிறழ்ச்சி வடநெறி என்று ஆழ்வாரால் கூறப்படுகிறது. தோற்றவர்கள் தோல்வியாகிய பறையடிக்க ஆடுவதொருகூத்து, பொங் கத்தம் பொங்கோ. தலைகீழாய் ஆடும் குணாலைக் கூத்துப் போலத் தோற்றார் தோல்விக்காகக் குழமணி தூரம் (10.2.1, 10.5.1) என்ற கூத்தாடுவர். மகளிர் விளையாடும் சாழல், தும்பியை அழைத்தல். குயில் கூவுதல், பல்லி ஒலித்தல் ஆகிய நாட்டுப்புற மரபு களைத் தழுவியும் திருமங்கையாழ்வார் பாடல்கள் புனைந்திருக்கிறார்.

## அடிப்பொடியும் பாணரும்

தொண்டரடிப் பொடியாழ்வார் சோழநாட்டு மண்டங்குடியில் பிறந்தவர். இவரது இயற்பெயர் விப்பிரநாராயணன். இவர் திருமாலை (45), திருப்பள்ளி யெழுச்சி (10) என்று இரண்டு நூல்கள் பாடினார். இவர் திருவரங்கத்தில் நந்தவனம் அமைத்து மலர்த் தொண்டு புரிந்தார். தேவதாசி ஒருத்தியின் காதலில் ஈடுபட்டு இவர் வாழ்வு பிறழ்ந்தது. பின் இறைவன் அருளால் மனம் திருந்தித் தொண்டில் ஈடுபட்டார். தொண்டர்களிடம் கொண்ட பேரன்பால் தம்மையும் தொண்டரடிப் பொடி எனப்பிறர் போற்ற வாழ்ந்தார். இவர்பாடிய திருப்பள்ளி எழுச்சி திருவரங்கம் கோயிலில் இன்றும் காலையில் ஓதப்பட்டு வருகின்றது. திருப்பாணாழ்வார் அமலனாதிப்பிரானை(10)ப் பாடினார். இவர் சோழநாட்டு உறையூரில் வாழ்ந்தார். பாணர்குலத்தைச்சார்ந்தவர். பாண்பெருமாள் என்ற பெயரும் இவருக்கு உண்டு. திருவரங்கப் பெருமான் மீது பாடிய பாசுரங்களை யாழ்மீட்டிப் பாடினார். திருமால் இவர் பெருமையை உணர்ந்து யோக சாரங்கமுனிவரை ஏவிப்பாண் பெருமாளைத் தோளில் சுமந்து வரப்பணித்தார், அவரும் அவ்வாறே அழைத்துவந்தார். பாண்பெருமாள் பாதாதி கேசமாகப் பெருமாளை அனுபவித்த அனுபவமே அமலனாதிப் பிரான் என்னும் பிரபந்தம். வேர்சுடுமவன் மண்பற்றுக் கழற்றாதாப் போலே, அத்திருமேனியோடே அங்கீகரித் தருள ஆழ்வாரும் அனைவரும்காண அரங்கன் அடியிணையில் சென்று சேர்ந்தார்.

## குலசேகரனும் சடகோபரும்

சேரநாட்டை அரசு புரிந்தவர் குலசேகராழ்வார். இவர் தன்னைக் கொல்லிகாவலன் என்றும் கூடல் நாயகன் என்றும் கோழிக்கோன் என்றும் கூறிக் கொள்வர். இவர்பாடியது பெருமாள் திருமொழி (105)

இராமாவதாரத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர். ஒருபத்து முழுமையும் இராமாயணக் கதையைச் சுருக்கிப் பாடினார். திருமால் கோயில் படியாய்க் கிடந்து அவன் பவளவாய் காண வேண்டினார். இதனால் இறைவன் ஆலயங்களின் கோயிலில் உள்வாயிற்படி குலசேகரன் படி என்று வழங்கப்பெறுகிறது.

தமிழகத்தின் தென்கோடியில் பிறந்தவர் சடகோபர் என்ற நம்மாழ்வார். இராமநுசசித்தாந்தம், இந்த ஞானச் செல்வத்தின் பயனாக விளைந்தது. அதனால் இவரை வைஷ்ணவ குலபதி என்றும் இவருடைய அருளிச் செயல்களைத் தமிழ் மறை என்று போற்று வதும் இவரைத் தொழுகுலமாக வைத்து நித்தமும் வழிபடுவதும் வைணவர்க்கெல்லாம் உரிய பொதுக் கடமையாகும். இவரின் ஞானப் பெருக்கு கங்கை நாடுகளிலும் பரவியது. நான்கு வேதங்களில் ருக்வேத சாரம் திருவிருத்தம் (100), யசுர் வேதசாரம் திருவாசிரியம் (70) அதர்வணவேத சாரம் பெரிய திருவந்தாதி (87) சாமவேதசாரம் திருவாய்மொழி (1102) என்று நான்கு வேதங்களின் சாரமாக இவர்நூல்கள் மிளிர்கின்றன. சடகோபர், மாறன், காரிமாறன், பாராங்குசன் என்பன இவருக்குரிய வேறு பெயர்கள், இருப்பினும் எல்லா ஆழ்வார்களிலும் இவர் தலைமை யும் பெருமையும் பெற்றமையால் இப்பெரியார் நம்மாழ்வார் என்று போற்றப் பெற்றார். ஏனைய ஆழ்வார்களை அவயவம் என்றும் நம்மாழ்வாரை அவயவி என்றும் உரைப்பர். இவர் வைணவத்திற்கு முதல்தாய்.

இவர்பாடிய பாசுரங்கள் அனைத்தும் மயர்வற மதிநலம் அருளின இறையருளால் தம்மைக் கருவி யாகக் கொண்டு பாடியன என்பர். பண்ணார் பாடல் இன்கவிகள் யானாய்த் தன்னைத் தான்பாடி தென்னா என்னும் என் அம்மான் (10.7.6) என்பது காணத்தக்கது. திருவாய் மொழியில் உயர்ந்த தத்துவப்பாடல்கள்

*இருப்பதுபோலக் காதல்துறைப்பாடல்களும் உள்ளன. உண்ணும் சோறு, பருகும்நீர், தின்னும் வெற்றிலை முதலிய எல்லாம் கண்ணனாகிய பெருமானே; அவன் அருளால் பெறும் இன்பங்களே என்று கண்ணீர்மல்கி உருகவேண்டும் என்பது நம்மாழ்வார் நெறி.*

மதுரகவி

*திருக்கோளூரில் மதுரகவியாழ்வார் தோன்றினார். செவிக்கினிய செஞ்சொற்கவிகளைப் பாட வல்லவ ராதலின் மதுரகவி எனப்பட்டார். நம்மாழ்வாரை அடைந்து உபதேசம் பெற்றார். இவர் கண்ணிநுண் சிறுதாம்பு (10) என்னும் நூலைத்தம் ஆசாரியனாகிய நம்மாழ்வார் மீது பாடினார்.*

தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவின் இன்னிசை பாடித்திரிவனே

*என்று தன் ஆசானைப் போற்றினார்.*

பாசுரக் கணக்கு

*ஆழ்வார்கள் பாடிய பாசுரங்கள் மொத்தம் 3776. அப்பிள்ளார் என்பார் திருமங்கை மன்னன் பாடிய இரண்டு திருமடல்களையும் தனி எண்ணிக்கையாகக் கொண்டு பிரபந்தத்தில் சேர்த்தார். இவற்றில் மடல் பாசுரங்களில் ஒருகண்ணியை (இரண்டு பாசுரங்கள்) ஒரு பாசுரமாகக் கொண்டு சிறியதிருமடல் 77 பாசுரம் என்றும் பெரியதிருமடல் 148 பாசுரம் என்றும் கொண்டு மொத்தப் பாசுரம் 226 என்றும் கொண்டார். இச்செய்தியைத் திருமங்கை மன்னன் வாழித்திருநாமம்*

இலங்கு எழுகூற்றிருக்கைமடல் ஈந்தான் வாழியே
இம்மூன்றில் இருநூற்று இருபத்து ஏழ் ஈந்தான் வாழியே

*என்று போற்றுகிறது. இவற்றில் இரண்டுமடல்கள் 226 என்றும் திருவெழுகூற்றிருக்கை ஒன்று என்றும் கொண்டு 227 என்றும் கணக்கிடப்படுகிறது.*

*அப்பிள்ளார் இராமநுசநூற்றந்தாதியைச் சேர்க்காது நாலாயிரம் என்று எண்ணிக்கை கொண்டார். இவருடைய பிரபந்தசாரத்தில் இரண்டுமடல்களின் எண்ணிக்கையை,*

சிறிய திருமடற்பாட்டு முப்பத்தெட்டு இரண்டும்
சீர்பெரிய மடலினிற் பாட்டு எழுபத்தெட்டும்

*என்று 118 பாசுரங்களாகக் கொண்டார்.*

## கண்டுதொகுத்தல்

*ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த நாதமுனிகள் மறைந்திருந்த திவ்விய பிரபந்தங்களைக் கண்டு பிடித்துத் தொகுத்தார். இத்தொகுப்பை இரண்டு பாவகையாகப் பிரித்தார். அவை ஒன்று இயற்பா, மற்றொன்று இசைப்பா. இவற்றுள் இசை அடிப்படை யாக அமைந்த பகுதி, முதலாயிரம், பெரிய திருமொழி, திருவாய்மொழி என்பன. நாதமுனிகள்தான் தொகுத்த திருநாளிலே இம்மூன்று பகுதிகளையும் தேவகானத் திலே ஏறிட்டுச் சேவித்தார் என்று கோயிலொழுகு கூறுகிறது. இவற்றிற்குப் பண் தாளங்களும் அமைந் திருந்தன. மேலே கூறிய மூன்று பகுதியில் திருவாய் மொழிப்பாசுரங்கள் முழுமைக்கும் மட்டும் தான் பண்தாளங்கள் உள்ளன. இதனைத் திருவாய்மொழி 'பண் ஆர்பாடல் இன்கவிகள்' (3961) என்று கூறுகிறது.*

## மற்றொரு வகைப்பகுப்பு

*திவ்விய பிரபந்தத்தை முதலாயிரம், பெரியதிரு மொழி, திருவாய்மொழி, இயற்பா என்று நான்கு பிரிவாகவும் வகுத்தனர். இப்பிரபந்தத்தில் மொத்தம் இருபத்துநான்கு நூல்கள் உள்ளன. அவற்றுள் பதினான்கு நூல்கள் இசைப்பா அடிப்படையின. மீதமுள்ள பத்து நூல்களும் இயற்பாவகையின. மேலே கூறிய நான்கு பிரிவுகளில் என்ன நூல்கள் இடம்*

## பகுப்பு முறை

| வ.எண் | முதலாயிரம் | பெரியதிருமொழி | இயற்பா | திருவாய்மொழி |
|---|---|---|---|---|
| 1. | திருப்பல்லாண்டு | பெரியதிருமொழி | முதல்திருவந்தாதி | |
| 2. | பெரியாழ்வார் திருமொழி | திருக்குறுந்தாண்டகம் | இரண்டாம் திருவந்தாதி | திருவாய்மொழி |
| 3. | திருப்பாவை | திருநெடுந்தாண்டகம் | மூன்றாம் திருவந்தாதி | |
| 4. | நாச்சியார் திருமொழி | | நான்முகன் திருவந்தாதி | |
| 5. | பெருமாள் திருமொழி | | திருவிருத்தம் | |
| 6. | திருச்சந்தவிருத்தம் | | திருவாசிரியம் | |
| 7. | திருமாலை | | பெரிய திருவந்தாதி | |
| 8. | திருப்பள்ளி எழுச்சி | | திருவெழுகூற்றிருக்கை | |
| 9. | அமலனாதிபிரான் | | சிறிய திருமடல் | |
| 10. | கண்ணிநுண்சிறுத்தாம்பு | | பெரியதிருமடல் | |

*பெற்றுள்ளன என்பதனைக் கீழ்வரும் அட்டவணை யால் பெறலாம்.*

*நாதமுனிகள் நாலாயிரதிவ்விய பிரபந்தத்தை ஆழ்வார்களின் அவதாரகால முறைப்படி தொகுக்க வில்லை. மேலே கூறிய நூலைப் பாசுரங்களின் பொருட் சிறப்புக்கும் அவர் அமைத்துக் கொண்ட மரபுக்கும் ஏற்பத் தொகுத்துக் கொண்டார். இவ்வமைப்பு முறையைப்பின் வந்தோரும் ஏற்றுக் கொண்டனர். மங்கலம் கருதிப் பெரியாழ்வார் திருமொழி முதற்கண் வைக்கப்பட்டது. அதன்பின் எல்லா நூல்களும் நிரல்படுத்தப்பட்டன. இராமநுச நூற்றந்தாதியை இவர் காலத்துக்குப்பின் வந்தோர் பிரபந்தத்தின் இறுதியில் சேர்த்துக்கொண்டனர்.*

## பிரபந்தமும் திருக்கோயிலும்

*திவ்விய பிரபந்தங்களின் சிறப்பையும் பெருமை யையும் போற்றுவதற்கு ஆண்டு தோறும் வைணவ ஆலயங்களில் அத்தியயன உற்சவம் நடைபெறுகிறது. இந்நிகழ்ச்சியில் அரையர்கள் இறைவன் திருமுன்பு பிரபந்தங்களைப் பாடுவார்கள். அவற்றோடு பாசுரங் களுக்குத்தக அபிநயமும் வியாக்கியானங்களும் செய்வர். வடமொழி வேதத்தில் அத்தியயன, அநநத்திய யன காலங்கள் உள்ளதுபோலத் தமிழ்வேதத்திற்கும் உண்டு.*

## பிரபந்தச்சிறப்பு

*திவ்விய பிரபந்தத்தில் மூன்றுவகையான பாவங் கள் காணப்படுகின்றன. அவை தாஸ்யம், வாத்ஸல்யம், மதுரம் என்பன. ஆண்டாள் பகவானை நாயகனாக வும் பெரியாழ்வார் தம்மை யசோதையாகவும் பகவானைக்கண்ணனாகவும் கொண்டு பாடியிருக்கி றார். திவ்வியபிரபந்தத்தின் இரண்டு கண்களாகப்*

போற்றப் பெறுவது திருநெடுந்தாண்டகம் (திருமங்கை யாழ்வார்) திருப்பாவை (ஆண்டாள்).

திருவாய்மொழி, இறைநிலை, உயிர்நிலை இறையை அடையும் நெறி, ஊழ்வினை, வாழ்வினை என்னும் ஐம்பெரும் பொருள்களை விளம்புகிறது. இதனை வடமொழியில் அர்த்தபஞ்சகம் என்பர். திவ்விய பிரபந்தத்தில் இந்த ஐம்பெரும் பொருள்களே காணப் படுகின்றன. இப்பிரபந்தத்திலிருந்து பெறப்படும் செய்தி

பரத்துவம் - திருவுடன் விளங்கும் நாராயணன்

உபாயம் - இறைவன் தாள்கள்

நற்பயன் - பிரியாது இறைவனுக்கு அடிமைசெய்தல்

நாராயணனான பரம்பொருளுக்குக் கல்யாண குணமும் மங்களவடிவமும் உண்டு. அவனுடைய குணங்களில் உலகஉயிர்கள் அனைத்தையும் ஆட் கொண்டுள்ள அருள் முக்கியமானது. பக்தி, ஞானம் இரண்டும் கலந்த சாதனமே சிறந்தது, இதுபிரபத்தியில் தானாகவே முடிவுபெறும் என்பதாம்.

நாலாயிர திவ்வியபிரபந்தப் பாசுரங்களில் வெண்பா, விருத்தம், போன்ற யாப்புவகை மிகுதி. இவை மட்டுமல்லாது ஆசிரியம், கலித்துறை, நெடுந் தாண்டகம், குறுந்தாண்டகம், எழுகூற்றிருக்கை போன்ற யாப்பினங்களும் உள்ளன. பிள்ளைக்கவி, அந்தாதி, மடல் போன்ற பிரபந்த வகைகளும் இருக்கின்றன. முதல் இரண்டு ஆயிரத்தில் அந்தாதிப் பாடல்கள் இல்லை. இயற்பாவின் (மூன்றாவது ஆயிரம்) பகுதி நம்மாழ்வாரின் திருவாய்மொழி, இப்பாடல்கள் தமிழில் உள்ள அந்தாதிப் பாடல்களில் கூடுதல் எண்ணிக்கையானவை திருவாய்மொழி, தலைசிறந்தது.

# வழிபாடு

மெய்யாலும் மனத்தாலும் வணங்குவது வழிபாடு, வழிபாடு என்ற சொல், பாடு என்ற தொழிற்பெயர் விகுதி பெற்றமைந்துள்ளது. இறைவனைக் கண்டு அடியவர்கள் மனம் உருகி மனம் வழிந்து அவன்முன்னேதான் எளியன் என்றுருகி நின்று தொழுவது வழிபாடு எனப்படும். உடலை வணக்கி வணங்கலால் இதனை வணங்கல் என்பர். இறைவன் உணர்த்திய வழியில் அல்லது இறைத் தொண்டன் உணர்த்திய வழியில் அடியார் இறைவனை நினைத்தும் போற்றியும் கொண்டாடியும் வழிபடுவர். வணங்கல் என்பது இறைவனை இறைவனுக்கு முன்னால் தன்னுடைய அனைத்து உறுப்புகளையும் அறிவுநிலையையும் வளைத்துப் பணிந்து அவன் அடிகளில் சேர்வது. இஃது அடியவனுடைய பணிவை ஆண்டவனிடத்தில் காட்டுவதாகும். வழக்கில், வழிபடு தல், வணங்குதல் ஆகிய சொற்கள் ஒருபொருளுடையவனாகப் போற்றப் பட்டாலும் அந்தச் சொற்களுக்கு வெவ்வேறு பொருள் உண்டு. உலகியல் வழக்கில் வணங்குதல், வழிபடுதல், போற்றுதல், கும்பிடுதல் போன்ற சொற்கள் அனைத்தும் ஒருபொருள் உடையன.

வழிபாடு என்பது தெய்வங்களைத் திருமஞ்சனம் ஆட்டி மலர் சூட்டித்திருவாரதனம் படைத்துக்கும்பிடுவதாகும். இந்த வழிபாடு இன்று எல்லாத் திருக்கோயிலிலும் நடைபெறுகின்றது. இது கூட்டுவழிபாடு தனிஒருவன் தான் விரும்புகின்ற தெய்வங்களை

நிறுத்திப்பூசை செய்து வழிபடுதல் தனிவழிபாடாகும். ஆன்மார்த்த பூசை தான் உயர்ந்த வழிபாடு என்றும் பிறன் ஒருவன் அடியார்க்காகச் செய்யும் பூசை பரார்த்த பூசை என்றும் குறிப்பர். ஆன்மார்த்த வழிபாடு முடிந்த பின்னரே பரார்த்த வழிபாடு செய்ய வேண்டும். இப்போதும் திருமேனி தீண்டும் சிவனடியார் ஆன்மார்த்த பூஜை முடிந்த பின்பே பரார்த்த பூசை செய்வர்.

ஆழ்வார்கள் தங்கள் பாசுரங்களில் தாங்களே வழிபாடு செய்வதாகப்பாடுகின்றனர், அவ்வாறு அவர்கள் பாடுவது ஆன்மார்த்த வழிபாடாக அமையும். மற்றவர்க்காக அவர்கள் எந்த வழிபாடும் செய்ய வில்லை, என்றாலும் கூடமற்றவர்கள் நன்மை பெற வேண்டும் என்ற நோக்கில் அவர்கள் திருமாலைப் பாடுவன பொது நோக்கின. இவ்வாறு அவர்கள் வழிபாட்டைப் பற்றிப்பேசும் போது இறைவனுக்கு வழிபாட்டில் மலர்களை இடுவதும் மாலைகளை அணிவிப்பதும் ஆகியவற்றைக் குறிக்கின்றனர். ஆழ் வார்களின் பாசுரங்களில் திருவேங்கட மலையில் நடைபெறுகின்ற மரபுகளைப் பலபாசுரங்கள் பேசுகின் றன. பலதிவ்விய தேசங்களில் நடைபெறுவன சொல்லப்படவில்லை. இதனால் ஆழ்வார்கள் அனை வரும் திருவேங்கடம் சென்று திருவேங்கட முடை யானை வழிப்பட்டிருக்கின்றனர் என்று கருத இடம் உண்டு. திருவேங்கடம் மலைப்பகுதியாகவும் இயற்கை எழில் கொஞ்சும் இடமாகவும் இருந்தமை யால் ஞானி களான ஆழ்வார்களுக்கு மோனத்தவம் செய்வதற்கு இம்மலை மிகுந்த வாய்ப்புடையதாக விளங்கியிருக் கிறது, இதனால்தான் ஆழ்வார் பாசுரங் களில் திருவேங்கட மலையில் நடைபெறும் வழி பாட்டுக் குறிப்புகள் சொல்லப்படுகின்றன.

ஆழ்வார்கள், கோயில் என்றும் கோயில் வாயில் என்றும் கோயில்தொடர்பான சொற்களைப்

பாசுரங்களிலே பயன்படுத்துகின்றனர். இதனால் ஆழ்வார்கள் காலத்தில் கோயில் பற்றிய கருத்துகளும் கோயில் உண்டாகிவிட்டமையும் கோயில் வழி பாட்டுத்தலமாக விளங்கியமையும் அறியப் பெறு கின்றன. ஆனால் ஆழ்வார்கள் எந்தக் கோயில்களிலும் நடைபெறுகின்ற பூசைமுறையை அல்லது வழிபாட்டு முறையைக் கூறவில்லை. திருமாலுக்கு அணிவித்த ஆடை மலர்கள் ஆராதனம் ஆகியவற்றை அவன் எச்சிலாக்கிய பின் அடியாருக்குக் கொடுப்பதாகப் பெரியாழ்வார் பாடுகிறார். இதிலும் இது கோயிலில் நடப்பது என்று கூறவில்லை. ஆராதனம் பற்றிய குறிப்புகள் பெரியாழ்வார் ஆண்டாள் பாசுரங்களில் தான் மிகுதியாகக் காணப்படுகின்றன. ஆனால் திருக்கோயிலில் திருவிளக்கு எரிவதை எல்லா ஆழ்வார் களும் பேசுகின்றனர்.

வழிபாட்டில் தீபம்காட்டல், மணி அடித்தல் போன்ற இக்காலச் சடங்குகள் இங்கு ஆழ்வார்களால் சொல்லப்படவில்லை. கருவிகள் கொண்டு இன்னிசை எழுப்பல், நடனமாடல் ஆகியவற்றை ஆழ்வார்களில் சிலரே சுட்டுகின்றனர்.

கோயில் என்ற சொல்லை ஆழ்வார்கள் பயன் படுத்துவது போலத்தெய்வம் என்ற சொல்லையும் பயன்படுத்துகின்றனர். ஆண்டாள் பாசுரங்களில் அவள் நோன்பு மேற்கொள்ளுகிறபோது பெயரெழுதி என்ற தொடர் வருகிறது. இதனால் வழிபாட்டில் தெய்வப் பெயரை எழுதி வைத்து வழிபட்டனர் என்று கருத நேரிடுகிறது. இதனைத் தெய்வ வடிவங்களை ஓவியமாக வரைந்து வணங்கினார்கள் என்று கொள்வதற்கும் வாய்ப்புஉண்டு. இவற்றை வணங்கியது போல உருவங்களை அமைத்தும் ஆழ்வார்கள் வணங்கியிருக்க வேண்டும், ஆழ்வார்கள் திவ்விய தேசம் என்று பாடியிருப்பன எல்லாம் தெய்வ உருவங்கள் அமைக்கப்பட்ட வழிபாட்டு இடங்களை

உணர்த்துகின்றன. அவர்கள் எந்த இடத்திலும் தெய்வ வடிவத்தை நினை என்று குறிப்பிடவில்லை. அவர்கள் தெய்வம் வேறு சிலை வேறு என்று கருதவில்லை; திருமால் பல அவதாரம் எடுத்தமையாலும் அவை இந்த வழிபாட்டில் இன்றியமையாதனவாகின்றன. இதனால் தான் பிள்ளைகளுக்குப் பெயர் வைக்கும் போது மானிடப் பெயர்களைச் சூட்டாது இறைவன் பெயர்களைச் சூட்டுங்கள் என்று பெரியாழ்வார் அறிவுறுத்துகிறார். இறைவன் திருப்பெயரைப் பொருளறிந்து சொல்ல வேண்டாம், பக்தியோடு சொல்ல வேண்டாம், அடியார்கள் ஆண்டவன் பெயரைச் சொன்னாலே போதும் அவர்களுக்கு உய்தி உண்டு, என்பது தெய்வத்திருநாமச் சிறப்பைக் காட்டுவதாகும். திருமால் தானே வந்து அவர்களுக்கு அருள் செய்வான். அதனால் இறைவன் திருப்பெயரைச் சொல்லுங்கள் என்று ஆழ்வார்கள் அருளிச் செய்கின்றனர். திரு மாலுக்குத் தேங்காய் உடைத்து வழிபாடு செய்ததாகப் பாசுரங்களில் சான்று இல்லை. எல்லாவகையான மலர்களும் கண்ணனுக்கு இடப்படுகின்றன. ஆண்டாள் பெரியாழ்வார் பாசுரங்களில் மலர்கள் பற்றிய குறிப்புக் காணப்படு கின்றது. பெரியாழ்வார் ஒருபத்து முழுமையும் எட்டு மலர்களைப் புனைகின் றார். புன்னை, மரிக்கொழுந்து, கார்க் கோடகப்பூ, மல்லிகை போன்ற எட்டுமலர்கள் அணிவித்தல், இடுதல் ஆகியவற்றில் இன்றும் அன்றும் வேற்றுமை இல்லை. வழிபாட்டில் திருக்கோயில் அர்ச்சகர்கள் இருந்தாகவோ அவர்கள் வடமொழியில் அர்ச்சனைச் செய்ததாகவோ தெரியவில்லை.

# பெரியாழ்வார் பாசுரங்களின் வழிபாட்டு மரபு

## ஆழ்வாரும் குழந்தையும்

பாண்டிய நாடு முத்தும் முத்தமிழும் பெற்றதனால் பொலிவுற்று விளங்கும் தமிழ்த்திருநாடாகும். பாண்டிய நாட்டு வில்லிப்புத்தூரில் வாழ்ந்த முன்குடுமிச் சோழிய பிராமணர் குலத்தில் விட்டுணு சித்தர் பிறந்தார்; இவர் திருமாலுக்குப் பல்லாண்டு பாடியதால் பெரியாழ்வார் எனப் பெற்றார். இறைவனிடம் ஆழமான பக்தி கொண்ட ஒருவனை ஞானிகளில் எல்லாம் உயர்ந்த ஞானியாகத் திருமால் பக்தி ஆக்கிவிடும் என்பதை இவர் வாழ்வு காட்டுகிறது. இவருடைய பாசுரங்கள், நாலாயிர திவ்வியப்பிரபந்தத் தொகுப்பில் முதற்கண் வைக்கப் பெற்றிருக்கின்றன. இவர் கண்ணன் குழந்தையாகப் பிறந்ததிலிருந்து சிறுகச் சிறுக வளர்ந்து கன்னியர் காமுறும் காளையாக வளரும் வரை வளருதலை அனுபவித்துப் பாக்களில் பாடியிருக்கிறார். குழவி மனிதனாக வளரும் ஒரு தொடர்ச்சியான வளர்ச்சியை இவர் திருமொழி, பருவம் பருவமாகப் புனைகின்றது.

பெரியாழ்வார் கண்ணனை மையப்படுத்திப் பாசுரங்களை ஆக்கியிருக்கிறார். அப்பாசுரங்களில் கண்ணனுடைய சிறுபிள்ளைக் குறும்புகளையும் சூடும் மலர்களையும் அவன் தின்னும் தின்பண்டங்களையும் ஆங்காங்கே பின்னிப்பாப்புனைந்திருக்கிறார். இடையிடையே வழிபாட்டு மரபையும் இவர் பாசுரங்களில் பாடியிருக்கிறார்.

## முதல்வன் திருமாலே

*ஆழ்வார்களுக்கும் அடியார்களுக்கும் திருமாலே தெய்வம்; அவனே முழுமுதற் கடவுள், அவர்கள் சிவனும் நான்முகனும் திருமாலை வணங்குவதாகவும் அவனைக் காணக் காத்திருப்பதாகவும் பாக்களில் புனைகின்றார். எம்பெருமானைச் சிவனும் பிரமனும் வழிபடுகின்றனர்.*

"நீரேறு செஞ்சடை நீலகண்டனும்
நான்முகனும், முறையால்
சீரேறு வாசகஞ் செய்யநின்ற திருமாலை" **(332)**

*என்பதால் சிவனும் நான்முகப் பிரமனும் சிறந்த சொற்களைக் கொண்டு துதிப்பர் என்பது தெளிவாகும். திருமாலின் முதன்மையைப் பெரியாழ்வார் இவ்வாறு நிலைநாட்டுகிறார். 'முன்னை அமரர் முதல்தனி வித்தினை' (162) என்றும் 'மூவர் காரியமுந்திருத்து முதல்வனை' (359) என்றும் திருமாலை மூவரினும் முதல்வன் என்றும் அவனுடைய தலைமைத் தன்மையை நிலைநாட்டுகிறார். வைணவசமயம் பிற சமயக் கடவுளரை ஏற்றுக்கொண்டாலும் எல்லாக் கடவுளரிலும் உயர்ந்தோன் தலைமையுடையவன் திருமாலே என்றுரைப்பதன் மூலமாகவும் முதல் வனாகவும் விளங்கும் திருமாலையே அனைவரும் வழிபட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.*

## திருமாலை நினையுங்கள்

*திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கும் அப்பெரு மானை நினையாதவர்கள் அவன் பெயரைச் சொல்லாதவர்கள் பாக்கியம் பெறாதவர்களே என்பது பெரியாழ்வாரின் துணிவு.*

"நாவகாரியம் சொல்லிலாதவர்
நாடொறும் விருந்தோம்புவார்
தேவகாரியம் செய்து வேதம்
பயின்று வாழ்திருக் கோட்டியூர்

மூவர்காரிய மும்திருத்தும்
முதல்வனைச் சிந்தியாத, அப்
பாவகாரிக ளைப் படைத்தவன்
எங்ஙனம் படைத் தான் கொலோ?" (360)

*இப்பாசுரம் திருக்கோட்டியூர் மக்களின் வைணவ உறைப்பைக் காட்டுகிறது. திருக்கோட்டியூர்ச் செல்வனைச் சிந்தித்து வழிபடாதவர்களைப் பாவஞ் செய்தவர்கள் என்றும் இவர்களைத் திருமாலுக்குக் கட்டுப்பட்ட நான்முகன் ஏன் படைத்தான் என்றும் மனம்நொந்து ஆழ்வார் வினவுகிறார்.*

*படைத்தவன் ஏன் படைத்தான் என்று வினவிய ஆழ்வார், இந்தப் பாவகாரி, பெற்றவளுக்கு நோய் கொடுக்கவே பிறந்தான் என்று விடையிறுக்கிறார். "தூமணி வண்ணனைத் தொழாதவர்/ பெற்றதாயர் வயிற்றினைப் பெருநோய் செய்வான் பிறந்தார்களே" (360) என்று உரைப்பர். இன்னொரு பாசுரத்தில் 'நேமி சேர்தடங்கையினானை நினைப்பிலா வலி நெஞ்சுடை/ பூமிபாரங்கள் உண்ணுஞ் சோற்றினை வாங்கிப் புல்லைத் திணிமினே' (364) என்பர். ஆழ்வார், இந்த மக்களுக்குத் திருமால் நினைப்பில்லையே என்ற சீற்றத்தில் திருவள்ளுவர் 'நிலக்குப் பொறை' என்றாற் போல் இவர்களை மக்கள் என்னாது அஃறிணை போலப் 'பூமிபாரங்கள்' என்றார். முன்பு உண்ணும் வாயை இகழ்ந்தவர், இங்குத் தின்னும் பொருளைப் பிடுங்கி எறிந்து விட்டு அந்த வாயில் புல்லைத் திணியுங்கள் என்று இடித்துரைக்கிறார். மனிதனை விலங்கு ஆக்குகிறார். இவ்வாறு ஆழ்வார் திருமாலை நெஞ்சிலிருத்தி வணங்குமாறு வலியுறுத்துகின்றார். இதனை வேறிடத்துப் பெரியாழ்வார் வெளிப்படை யாகத் 'தொண்டர்கள் நெஞ்சிலுறைவாய்' (2:7) என்பர். இக்கருத்தை வெவ்வேறு வகையாக இவரும் ஏனைய ஆழ்வார்களும் அருளிச் செய்திருக்கின்றனர். அடியார்கள் திருமாலை வணங்கினாலும் அவன் அருள் இருந்தால்தான் அவனை வணங்க முடியும்*

*என்ற நம்பிக்கை இவர்களுக்கு வாய்த்திருந்தது. பெரியாழ்வார் எம்பெருமான் தன்னை உரிமைப் படுத்திக் கொண்டதாகக் காட்டுகிறார். "உருப்பொலிந்த நாவினேனை உனக்குரித்தாக் கினையே" (469) என்றும் 'உனக்கு இடமாய் இருக்க என்னை உனக்கு உரித்தாக்கினையே' (471) என்றும் ஆழ்வார் பாடுவர்; இவற்றால் திருமால் வலியவந்து தன்னை ஆட் கொண்டதாக ஆழ்வார் பாடுகின்றார். அவர்*

"உன்னைக் கொண்டென் நாவகம் பால்
மாற்றின்றி உரைத்துக் கொண்டேன்
உன்னைக் கொண் டென்னுள் வைத்தேன்
என்னையும் உன்னிலிட் டேன்" (467)

*என்று பாடுகிறார். "நன்றாக உன்னை அன்றியிலேன் கண்டாய் நாரணனே; நீ என்னை அன்றியிலை" என்ற படிப் பெரியாழ்வார் அவன் அருளால் அவனை வணங்குவதாகக் காட்டுகிறார்.*

## அவன் அருளால் அவனை வணங்குக

*திருமாலை வழிபட அவனே அருள் செய்தல் வேண்டும்; அவன் அருளின்றி அவனை வணங்கமுடியாது; ஆகையால் பெரியாழ்வார் எம்பிரானிடம் 'நண்ணிநானுன்னை நாடொறும் ஏத்தும் நன்மையே அருள் செய்' (440) என்றும் அடுத்து "எம்பிரான் என்னை ஆளுடைத் தேனே (441)" என்று முரைப்பர். திருமாலின் திருவருளாலேயே அவனை அடைய முடியும் என்பதைப் பாசுரங்கள் பேசுகின்றன. 'இராப்பக லோது வித்து என்னைப் பயிற்றிப் பணிசெய்யக் கொண்டான்' (445) என்பர்.*

"எந்தாள் எம்பெரு மான்உன்ற னக்கடி
யோம்என் றெழுத்துப் பட்ட
அந்நாளேஅடி யோங்கள டிக்குடில்
வீடுபெற்றுய்ந்தது காண்" (10)

திருமாலுக்குத் தொண்டன் என்று எழுதப் பட்டபோதே அவனைக் காக்கவும் ஊக்கவும் எம்பெருமானுக்கு உரிமை உண்டாகிவிடுகிறது. இவ்வாறு, தானும் திருமாலின் உடைமை என்று ஆழ்வார் காட்டுகிறார்.

அடியார் திருமாலுக்குச் செய்யுங் குற்றங்கள் திருமகளுக்குப் பொல்லாங்காகத் தோற்றலாம்; ஆனால் அவை திருமாலுக்குக் குணமாகும். தன்னடியார் பற்றித் திருமகள் ஏதேனும் குற்றம் கூறினால் திருமால் அதனை மறுத்து ஒன்றும் எதிர்த்துப் பேச வேண்டியதில்லை என்பானாம். இது பெரியாழ்வார் கண்ட இல்லறக்காட்சி, இனிய தெய்வீகக் காட்சி; அடியாரின் அன்புக்காட்சி.

"தன்னடியார் திறத்தகத்துத் தாமரை
யாளாகிலும் சிதகுரைக்குமேல்
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்று செய்தார் என்பர் போலும்" (413)

என்ற பாசுரப்பகுதி இங்கு நினைக்கற்பாலது; மனைவி சொன்னாலும் மன்னன் ஏற்கமாட்டான். அவன் அந்தளவுக்குத் தன்னடியார் மீது நம்பிக்கை கொண்டிருக்கின்றான்.

## கோயிலும் தெய்வமும்

திருமாலைப் பணிவதில் ஆர்வம் காட்டும் பெரியாழ்வார் அவன் எழுந்தருளிய இடத்தைக் கோயில் என்று கூறிப் பாடுதலைக் காணமுடிகிறது. 'கோயிற் பொறி' (7) என்றும் 'கோயிற் பிள்ளாய்' (205) என்றும் ஆழ்வார் கோயில் என்ற சொல்லைக் கையாளுவர். இவர் கோயில் என்ற சொல்லை வைணவக் கோயில் என்ற பொருளிலும் திருவரங்கம் என்ற பொருளிலும் பயன்படுத்துவர். இவர் திருவரங்கத்தைப் பாடும்போது 'வானோர் வாழச்

செருவுடைய திசைக்கருமந்திருத்தி வந்து லகாண்ட திருமால் கோயில்' (412) என்றும் 'மணவாளர் மன்னு கோயில்' (415) என்றும் இன்னும் பல பாசுரங்களில் (416—420, 422, 448) கோயில் என்றும் குறிப்பர். இதனால் பெரியாழ்வார் காலத்தில் திருக்கோயில் இருந்தமையை அறியமுடிகிறது. கோயிலைச் சொல்லாது சில பாசுரங்களில் அத்திவ்வியதேச மதிளை மட்டும் இவர் சுட்டுவர். பெரியாழ்வார் 'கன்னிநன்மாமதிள் சூழ்தரு பூம்பொழில் காவிரித்தென்னரங்கம்' (245) என்று மதிளழகைச் சுட்டியும் புனைகுவர். திருவரங்கத்திற்கு மதில் அழகு என்பதாலும் அது கோயிலை உள்ளடக்கியது என்பதாலும் கோயிலைச் சுட்டாது மதிலை மட்டும் சுட்டி ஆழ்வார் பாடுகிறார்.

பெரியாழ்வார் கோயிலையும் கோயிலில் தெய்வம் இருப்பதையும் அதை வணங்குவதையும் புலப்படுத்து கிறார். மனிதன் அந்திமகாலத்துன்பத்திலிருந்து தன்னைக் காத்துக் கொள்ளத் திருமாலை வணங்க வேண்டும் என்பது அவர் காட்டும் வழி.

"மார்வம் என்பதோர் கோயி லமைத்து
மாத வனென்னுந் தெய்வத்தை நாட்டி
ஆர்வ மென்பதோர் பூவிட வல்லார்க்
கரவதண்டத்தில் உய்யலு மாமே" (373)

நெஞ்சம் என்கின்ற ஒரு சந்நிதியை (கோயில்) ஏற்படுத்தி அந்தச் சந்நிதியுள் மாதவன் என்ற தெய்வத்தை எழுந்தருளப் பண்ணி அத்தெய்வத்தைக் குறித்துப் பத்தி என்கின்ற பூவை இட வல்லார்க்கு எமதூதர்களால் வரும் துன்பம் இல்லை. இவர் உள்ளமே கோயில் என்ற அடிப்படையைக் கொண்டு பேசுகிறார். இதனால் திருக்கோயில் அமைப்பும் அக்கருவறையில் திருமாலை எழுந்தருளுவிக்கும் மரபும் அறியப் பெறும். இவை கோயில் வழிபாட்டுக்கு மிக வேண்டத்தக்கவை.

*திருமாலைத் திருப்பதி ஒன்றிலே மட்டுமிருப்பதாக அடியார்கள் கருதினாலும் பெரியாழ்வார் 'கொங்குங் குடந்தையும் கோட்டியும் பேரும்/ எங்குந் திரிந்து விளையாடும் என்மகன்' (173) என்று தாய் கூற்றாகக் கூறுவர். திருமால் பல திருப்பதிகளிலும் எழுந்தருளி அருள்புரிவான் என்பதை இவர் உணர்த்துகிறார். இதனை இன்னொரு பாசுரத்திலும் (399) இவர் சுட்டுவர். இதனால் திருக்கோயில் என்றும் திவ்விய தேசம் என்றும் தனித்தனியே பிரித்துப் பேசாது இரண்டையும் ஒன்றாகக் கருதியே ஆழ்வார் பாடு கிறார். இதன் காரணமாக வழிபாட்டில் திருக்கோயில் திவ்யதேசம் என்பன தனியிடம் பெறுகின்றன.*

### தெய்வமென்றுணர்தல்

*திருமால் மனிதனாகப் பிறந்து மக்களைப் போல வாழ்ந்தான். குழந்தைக் கண்ணனை நீராட்டும் யசோதை அவன் வாயுள் வையகங்கண்டாள். அவள் கண்ணனை 'ஆயர்புத்திரன் அல்லன்* **அருந்தெய்வம்'** *(19) என்று அறைகிறாள். கண்ணனை மகனாகப் பெற்றிருந்தாலும் யசோதை அவனைத் தெய்வமாகக் கருதித் 'தெய்வத் தலைவனைப் போக்கினேன்' (238) என்று வருந்தித் தெய்வமாகக் கூறுகிறாள். இவ்வாறு தெய்வமாகிய கண்ணனைக் குழந்தையாகக் கண்டு விட்டு அவன் தெய்வம் என்பதைப் பாசுரங்களில் உணர்த்துகின்றார். இன்னும் கூடுதலாக அவனைத் தெய்வங்களுக்கும் தலைமையுடையவனாகவும் நவில்கிறார். மானிட உடலுக்கும் நோய்களுக்கும் மிக நெருங்கிய உறவு உண்டு. ஆனால் தன்னுடலோ திருமால் எழுந்தருளிய பட்டினமாகத் திவ்விய தேசமாக விளங்குகிறது என்று ஆழ்வார் நினைக்கிறார். ஆதலின் நோய்களை அழைத்துப் புறங்காட்டி ஓடிடப் புகலுகிறார்.*

*தன்னுடலையே கோயிலாகக் கொண்டு பாசுரத்தை அவர் இயற்றியுள்ளார்.*

"மங்கிய வல்வினை நோய்காள்!
உமக்கு மோர் வல்வினை கண்டீர்:
இங்குப் புகேன்மின் புகேன்மின்
எளிதன்று கண்டீர் புகேன்மின்
சிங்கப் பிரானவ னெம்மான்
சேருந் திருக்கோயில் கண்டீர்:
பங்கப் படாதுய்யப் போமின்
பண்டன்று பட்டினங் காப்பே" (446)

*தன்னைத் தேடிவரும் நோய்களை விளித்து 'நோய்களே நீங்கள் இனி என்னை நாடி வாராதீர்; என்னுடலும் உள்ளமும் சிங்கப்பிரான் வீற்றிருக்கும் திருக்கோயிலாகும்' என்றுரைக்கின்றார். இவ்வாறு தன் உடலைக் கோயிலாக்குகிறார். இதனாலும் கோயிலைப் பற்றியும் கோயிலில் எழுந்தருளிய இறைவனைப் பற்றியும் அறியமுடிகின்றது. திருமாலை உள்ளத்தில் அமைத்துக் கொள்வதால் மானிட உடல் பெறும் சிறப்பை மிக நயமாக ஆழ்வார்காட்டுகிறார்.*

## அத்தாணி மண்டபக் காட்சி

*கோயிலைப் பற்றிப் பாடுவது போல அவன் அத்தாணி மண்டபத்தில் வீற்றிருந்து அடியார்க்கு அருள் செய்வதாகவும் ஆழ்வார் அறைகுவர். திருமால், தொண்டர்கள் சேவை சாதிப்பதற்கு ஏற்ப அத்தாணி மண்டபத்தில் வீற்றிருக்கின்றான். இதனை 'அண்டத் தமரர்கள் சூழ வத்தாணியுள்ளங்கு இருந்தாய் (190) என்பர் பெரியாழ்வார். இன்றும் திருமால் திருக் கோயில்களில் திருமால் அத்தாணி மண்டபத்தில் எழுந்தருளியே அடியார்க்குத் தரிசனம் அளித்துவரும் பழக்கமுள்ளது.*

## திசை நோக்கிய காரணம்

*திருவரங்கச் சிறப்பைப் பெரியாழ்வார் பல பாசுரங் களில் எடுத்துரைக்கிறார். அவனுடைய தோற்றத்தை*

*மிகுதியாக அவர் புனையவில்லை. எனினும் திருவரங் கப்பெருமான் திருமுக மண்டலம் இலங்கையை நோக்கியிருப்பதை*

"மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்கண்வைத்த
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளா வாரே" (413)

*என்று பாடுகிறார். திருமால் வீடணனுக்காக அவன் வாழும் இலங்கையை நோக்கியமைமையைக் காட்டிப் புனைகிறார். இதனாலும் பெரியாழ்வார் காலத்தில் திருக்கோயில் இருந்தமை தெளிவுறப் புலனாகும். திருமாலின் திருமுக மண்டலம் நோக்கிய திசையை இவருரைப்பது சுட்டத்தக்க ஒன்றாகும்.*

அடியார் கிடக்கும் கோயில்

*திருக்கோயிலில் அடியார்கள் பலரும் ஆண்டவன் தரிசனம் பெற்று அங்கே கிடக்கின்றனர். எல்லாக் காலத்தும் 'நமோ நாராயணா' என்ற நாமத்தை உச்சரித்துத் திருமால் கோயிலில் கிடக்கும் வைணவன் என்று தன்னைச் சொல்லுவது தான் பெருமையாகும்; அஃதே ஆழ்வார்க்கும் வலிமையாகும்; மிடுக்காகும்.*

"உன்னுமாறுன்னை ஒன்றுமறியேன்
ஓவாதே நமோ நாரணா என்பன்
வன்மையாவது உன்கோயிலில் வாழும்
வைட்டணவன் என்னும் வன்மை கண்டாயே" (435)

*இக்குறிப்பால் திருமாலுக்குக் கோயிலிருந்தமையை யும் அவண் இருந்த அடியார்கள் வைணவர் என்று அழைக்கப்பட்டமையையும் அறிந்து கொள்ள முடிகிறது. இன்னொரு பாசுரத்தில் உன் கோயிலைக் காக்கவல்ல அடியவனாக என்னை அமைத்தருள வேண்டும் என்ற கருத்தில் 'மாமணி வண்ணா; மறுபிறவி தவிரத் திருத்தி உன் கோயில் கடைப்புகப்*

பெய்' (458) என்று பாடுகின்றார். இதன் கண் கோயிலின் உறுப்பாகிய கடையைப் பெரியாழ்வார் பேசுகின்றார்.

## திருநாமத்தைச் சொல்லி உய்க

கோயில், தெய்வம் என்று எல்லாம் இருந்தாலும் அடியார்க்கு அளவிலா மகிழ்ச்சி தருவது திருமாலின் திருநாமத்தை உரைப்பதே ஆகும். அப்பெயரைச் சொல்ல அடியார்களின் சோர்வு மறையும்; சிக்கலுக்குத் தீர்வு தோன்றும். திருமாலைப் பல பெயர்கள் சொல்லி வணங்குதல் இயற்கை. திருமால் பெயர்களின் திருப்பெயராகவும் மந்திரமாகவும் விளங்குவது நாராயண நாமமே. நாள்தோறும் இறைவன் திருநாமங்களைச் சொல்லுகிறவர் பெரும் பயனெய்துவர். திருமால் பெயரைச் சொல்ல இந்தக் காலம் தான் உரியது என்று வரையறுத்துக் கொள்ள வேண்டியதில்லை. சிலர் துன்பம் வரும்போதுதான் 'நாராயணா' என்று அழைப்பர்; அல்லது உயிர்போகும் நேரத்தில்தான் அவனை அழைப்பர். உயிர்போகும் காலத்தில் திருமாலின் திருநாமத்தைச் சொல்லி அழைக்க உடலில் வலிமை இருக்காது. அப்போது நோயின் கொடுமை அழுத்துமே அன்றி நாராயண நாமத்தை நினைக்கத் தோன்றாது. ஆகலின் உடலும் உள்ளமும் நலமாக இருக்கும் போதே நாராயண நாமத்தைச் சொல்ல வேண்டும். என்று பெரியாழ்வார் வழிகாட்டுகிறார். தெய்வப் பெயரை இடைவிடாது உரைப்பதே வழிபாட்டில் முதலாவதும் முதன்மை யானதுமாகும். காட்டில் வேடுவனாய்த் திரிந்த வான்மீ கி இராமநாமத்தைச் சொல்லி உய்ந்தது ஈண்டு ஒப்பு நோக்கற் பாலது.

இதயமாகிய கோயிலைக்கட்டி, அங்குப் பகவானை நிலை நிறுத்தி ஆர்வமாகிய மலரையிட்டு வணங்குவது அடியார்களின் கடமை. இறைவன் திருப்பெயரைச்

*சொல்லித் தொண்டர் உய்தி பெறுதலைப் பெரியாழ் வார் தம்முடைய பாசுரங்களில் மிகுதியாக வலியுறுத்தி யிருக்கிறார். பெரியாழ்வார் ஒருவரே 'திருமாலின் திருப்பெயரைச் சொல்லுக; பிள்ளைகளுக்கு அவன் பெயரைச் சூட்டுக' என்று வலியுறுத்துகிறார்.*

*திருப்பல்லாண்டில் பெரியாழ்வார் திருமாலின் திருநாமத்தைச் சொல்லுவதை*

"நாடு நகரமும் நன்கறி யநமோ நாராய ணாய வென்று
பாடு மனமுடைப் பத்தருள் ளீர்வந்து பல்லாண்டு
கூறுமினே" (4)

தொண்டக் குலத்திலுள் ளீர்வந் தடிதொழு தாயிரம்
நாமம் சொல்லி
பண்டைக் குலத்தைத் தவிர்த்துப் பல்லாண்டு...
என்மினே (5)

"நல்வகை யால் நமோ நாராயணா வென்று நாமம்
பலபரவி
பல்வகையாலும் பவித்திரனே........" (11)

*என்று மூன்று பாசுரங்களில் அறிவுறுத்துகிறார். 'நமோ நாராயணாய வென்று பரமாத்மனைச் சூழ்ந்திருந்து ஏத்துவார் (12), இவர் நாராயணன் என்று பெயரை மட்டும் உரையாது 'நமோ' என்பதையும் சேர்த்துச் சொல்லுவது வழிபாட்டின் சிறப்பை உணர்த்தும். நாராயண நாமத்தை நாட்டாரும் நகரத்தாரும் அறியுமாறு அடியார்கள் உரைக்கின்றனர். நாராயண நாமமின்றித் திருமாலின் வேறு திருப் பெயர்களையும் சொல்லலாம்; ஆதலால் அவனுக்கு 'ஆயிரம் நாமம்' உண்டு என்பர் ஆழ்வார். திருமாலிருஞ் சோலைமலையிலிருக்கும் வண்டுகள் விடியற் காலத்தில் திருமாலுடைய ஆயிரம் திருநாமங் களைச் சொல்லிப் பாடுகின்றன. இவ்வாறு அஃறிணை உயிர்கள் மீது ஏற்றி ஆழ்வார் உரைக்கின்றார். அப்பகுதி.*

"அறுகால் வரிவண்டுக ளாயிர நாமஞ்சொல்லிச்
சிறுகாலைப் பாடுந்
தென்றிருமாலிருஞ் சோலையே" (345)

*என்பதாகும். மலைப்புனைவைப் புனையும் போது வண்டு முழக்கத்தை நாராயண நாம ஓசையாக ஆழ்வார் கேட்டு அனுபவிக்கிறார்.*

வானகத்து மன்றாடிகள்

*மனிதனுக்குப் பேரச்சத்தைத் தருவது மரணபயம். மரணபயத்தை அடிப்படையாகக் கொண்டு பெரியாழ்வார் திருமாலை வழிபட அறிவுறுத்துகிறார். மனிதன் அஞ்சுவதைக் கொண்டே அவனுக்கு அறிவுறுத்த வேண்டும்.*

"இன்ன வன் இனை யானென்று சொல்லி
எண்ணி உள்ளத் திருளற நோக்கி
மன்ன வன்மது சூதனன் என்பார்
வான கத்துமன் றாடிகள் தாமே" (377)

*திருமாலின் இயல்புகளைச் சொல்லி அவன் பெயராகிய மதுசூதனன் என்ற பெயரைச் சொன்னால் வைகுண்டத்தை அடைவர். அங்குப் பரமபத நாதனுக்குத் தொண்டு செய்யும் நித்திய சூரிகளுடன் தாமே தொண்டு செய்யப் பங்கு கேட்டு மன்றாடுவர். இவ்வாறு மதுசூதனன் என்ற பெயரைச் சொல்லியும் மனத் திருத்தியும் பரமபதம் அடைதலைத் திருமொழி உணர்த்துகிறது. இது திருநாமத்தை நினைப்பதாலும் சொல்லுவதாலும் விளையும் பயனாகும். சொன்னால் சுவர்க்கம் கிடைக்கும் என்பது எளிய முயற்சியால் அரிய பயனாகும். மண்ணுலக அடியார்கள், திரு மாலுக்குத் தொண்டு செய்வதில் உள்ள ஆர்வத்தை இப்பகுதி காட்டுகிறது.*

## விரல்விட்டுரைத்தல்

*தெய்வத்திருநாமங்களைச் சொல்லும்போது எண்ணிக்கைக்காக விரல் விட்டு எண்ணுதல் மக்களியற்கை. இவ்வாறு விரல் விட்டு எண்ணித் திருமால் திருநாமத்தைச் சொல்லாது அந்த விரல்களால் தம் ஊத்தை வாய்க்கு உணவு மட்டும் தேடுகின்றார்கள் என்று இவர் வருந்துகிறார்.*

"திண்ணை சூழ்திருக் கோட்டியூர்த்திரு
மாலவன்திரு நாமங்கள்
எண்ணக் கண்ட விரல்களால் இறைப்
பொழுதுமெண்ணகி லாதுபோய்
உண்ணக் கண்டதம் ஊத்தை வாய்க்குக்
கவள முந்துகின் றார்களே" (362)

*என்று நாரயண நாமம் சொல்லாத வாயின் இழிவை ஆழ்வார் காட்டுகின்றார். உலகில் திருமாலைத் தொழுதற்கே நான்முகன் கைகால் முதலிய உறுப்புகளைப் படைத்திருக்கின்றான். மானிடப் பிறவியே தெய்வத்தை வணங்கி உய்தி பெறுதற்கு அமைந்தது. தெய்வத்திருநாம சங்கீர்த்தனத்துக்குரிய வாயால் தின்று கொழுத்து மீண்டும் மீண்டும் உண்டு உறங்கி ஓய்ந்து போவதில் மனிதனுக்கு எந்தப் பயனுமில்லை. உயர்ந்த நோக்கத்திற்கான வாய், கீழ்ப்பட்ட செயலால் 'ஊத்தை வாயாகி' விடுகிறது. இதனால் அடியார்முன் தம் திருவாயால் திருமாலின் திருநாமத்தைச் சொல்லி வழிபடுக என்பதுணர்த்தப் பெறுகிறது. திருவள்ளுவரும் 'வயிற்றுக்குச் சிறிதீயப்படும்' என்று சொன்னது போல் அரிநாம பஜனைக்கே உடலும் உள்ளமும் என்பர் ஆழ்வார். திருநாமத்தைச் சொல்லும் போது விரல்விட்டு எண்ணுதலும் குறிக்கப்பெறுகிறது.*

## குடிக்கும் நீரும் உடுக்குமுடையும்

*உண்ணும் வாயையும் அள்ளி உண்ணும் கைவிரல்களையும் இழித்துப் பாடியவர், அவர்கள் குடிக்கின்ற*

*நீரையும் உடுக்கின்ற உடையையும் கேவலப் படுத்துகிறார். உரக மெல்லணையானை- நரக நாசனை-நாவிற் கொண்ட ழையாத "மாணிட சாதியர்/ பருகு நீருமுடுக்குங் கூறையும் பாவஞ் செய்தனதாங் கொலோ" (363) என்று பரிதாபப் படுகிறார். மக்கள் உண்ணும் சோறும் பருகுநீரும் உடுக்கும் உடையும் எல்லாம் உண்டும் உடுத்தும் உயிர்வாழ்வது திருமாலை வணங்குவதற்காகவேயன்றி வேறு ஒன்றிற்குமில்லை; ஆதலின் உயிர்வாழும் ஒவ்வொருவரும் திருமாலின் திருநாமத்தைச் சொல்லி அவனை வழிபடவேண்டும் என்பது கருத்து. மானிடன் உண்டு உடுத்து வாழ்வது திருமாலின் திருநாமத்தை ஓதி உய்வதற்கேயாகும்; அத்னை விடுத்து அவர்கள் உண்டு உடுத்து வாழ்வது துய்த்தற்குரிய பொருள் செய்த பாவமாகும். நல்ல பொருளானால் நல்லடியார்க்குப் பயன்படும் என்பது துணிவு. உணவும் உடையும் திருமால் பணி செய்யாத அற்பருக்குப் பயன்பட்டு அவர்களை வாழ வைத்து உயிர்காத்தமையால் அவை பாவத்தைச் செய்தன வாயின. இதனால்தான் பெரியாழ்வார் "கூறை சோறிவை வேண்டுவதில்லை" (436) என்றும் திரு நாமத்தைச் சொல்லுதலே வேண்டும் என்றும் உரைத்துள்ளார். மக்கள் விரும்பும் எல்லாம் பொருளும் தனக்குத் திருமாலின் திருவடிகளே.*

"தோட்டம் இல்லவள் ஆத்தொழு ஓடை
துடவை யும்கிண றும்இவை எல்லாம்
வாட்டம் இன்றியுன் பொன்னடிக் கீழே
வளைப்ப கம்வகுத் துக்கொண்டிருந்தேன்"(437)

*என்பது அப்பாசுரத்தின் கருத்தாகும்.*

அடியார்களின் இயல்பு

*திருமாலுக்குத் தொண்டு செய்வதற்குத்தக்க அடி யார்களையே தான் சேர்த்துக் கொள்வதாகவும் இறைவன்பால் ஈடுபடாதவர்களைத் தங்கள் குழுவி*

*விருந்து ஒதுக்கி விடுவதாகவும் பெரியாழ்வார் உரைக்கின்றார்.*

"கூழாட்பட்டு நின்றீர்களை
யெங்கள் குழுவினில் புகுதலொட்டோம்" (3)

*என்று சோற்றுக்காக அடிமைப்பட்டிருப்பவர்களைக் குழுவிலிருந்து இவர் ஒதுக்குகிறார். இதனைத் தொடர்ந்து ஏழு தலைமுறையாக வைணவத் தொடர்பிருக்க வேண்டும் என்று சொல்ல வந்தவர். 'ஏழாட்காலும் பழிப்பிலோம்' (பா. 3) என்றார். அடியார் குடும்பம் எக்காலத்தும் பழிக்கக் கூடாததாய் இருத்தல் வேண்டும். வைணவர்கள் வழிபாட்டைக் ஒருங்கு கூடிக் கோஷ்டியாக வணங்கும் மனப்பாங்குடையவர்கள் ஆதலின் 'ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து (4) குழாம் புகுந்து கூடுமனமுடன் அடியார்கள் கலந்து கொள்ள வேண்டும் என்பர். இவ்வாறு இவர் அடியார்களை ஒன்று திரட்டுகின்றார்.*

## திருநாமமுரைப்பதன் நன்மை

*திருமாலின் திருநாமங்களாக வழங்குவன கேசவன், புருடோத்தமன், கிளர் சோதி குறளன் என்பன. இப்பெயரைப் பேசுவார் அடியார்கள் 'எந்தம்மை விற்கவும் பெறுவார்கள்' (369) என்று திருமால் திருநாம முரைப்பாரின் பெருமையைப் பெரியாழ்வார் பேசுகின்றார். வாழ்நாள் முழுமையும் கேசவா, புருடோத்தமா, கேடிலீ என்று பேசுவார் எய்தும் பெருமை பேசுவான் புகில் நம்பரமன்றே' (371) 'ஆசை வாய்ச் சென்ற' திருமொழி திருமால் திருநாமம் ஓதுவதன் பெருமையையும் பேற்றையும் பேசுகிறது. எல்லாப் பாசுரங்களிலும் 'சாவு நெருங்கிய போதும் முதுமையிலும் நாராயண நாமத்தை நவிலாதீர்; அதற்கு முன்னரே நவிலுங்கள்' என்று பெரியாழ்வார் வலியுறுத்துகிறார். இதன் உட்கருத்து நாள்தோறும் தெய்வத் திருநாமத்தைச் செப்புங்கள் என்பதாகும்.*

"வாயினால் நமோ நாரணா வென்று
மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி
போயினாற் பின்னை யித்திசைக் கென்றும்
பிணை கொடுக்கிலும் போக வொட்டாரே" (372)

*நாராயண நாமத்தைச் சொன்னால் அவர்கள் உறுதியாகப் பரமபதம் போய்ச் சேருவார்கள். பின்னர் பூவுலகிற்கு வந்து போகட்டும் என்று சொல்லிப் போனவர்களை அழைத்தாலும் பிணை கொடுத்தாலும் பரமபதத்தில் உள்ளவர்கள் இந்த அடியவர்களை ஒரு நாளும் மண்ணுலகிற்கு விடமாட்டார்கள். திருநாமம் ஓதிப் பெறும் பயன் நிலையானது, மாறாதது; மாற்ற முடியாதது; அந்த அளவுக்குத் திருநாம ஓசை பயன் விளைக்கக் கூடியது; வலிமையானது.*

## பிள்ளைகளுக்குத் தெய்வப் பெயரிடுக

*திருமாலின் வெவ்வேறு பெயர்களை ஒவ்வொரு தாய்மாரும் தங்கள் பிள்ளைகளுக்கு இட வேண்டும். திருமால் பெயரைச் சொல்லவோ நினைக்கவோ நேரமில்லாதவர்கள் கூடத் தங்கள் பிள்ளைகளுக்குத் திருமால் பெயரையிட்டு அப்பெயரைச் சொல்லி அழைக்கலாம். அதனால் பேறு அடையலாம் என்று திருமால் திருநாமத்தைச் சொல்ல எளிய வழிகாட்டுகிறார் பெரியாழ்வார். தெய்வப் பெயர் கூட்டி அப்பெயரை அழைத்தால் அந்தத் தாய் நரகம் புகமாட்டாள். திரௌபதியின் துயிலைத் துச்சாதனன் உரித்தபோது உதவியது கோவிந்தன் நாமமே. இதனை முமுட்சுப்படி "அவன் தூரஸ்தனானாலும் இது கிட்டி நின்று உதவும் திரௌபதிக்கு ஆபத்திலே புடைவை சுரந்தது திருநாம மிறே" (15, 16) என்று விளக்கும். திருமாலின் திருநாமத்தை எப்படி வேண்டுமானாலும் சொல்லலாம். இதனை முமுட்சுப் படி,*

"சொல்லும் சிரமம் ஒழியச் சொன்
னாலும் தன் லவ ரூபம் கெட நில்லாது" (17)

என்று புலப்படுத்தும். சிசுபாலன் கேட்பார் செவிசுடு கீழ்மையான வசவுகளை வையமியல்பினன்; அவனுக்கு இறப்புக் காலத்தில் கண்ணபிரான் தன் அழகைக் காட்டித் தன்னளவில் பகையை மாற்றியருளினான் (353) இதனை

"பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன் றன்னை
அலவலைமை தவிர்த்த அழகன் அலங்காரன் மலை"
(353)

என்ற பகுதியால் உணர்த்துகிறார். இவ்வாறு, எவ்வாறு திருநாமத்தைச் சொன்னாலும் பயனுண்டு என்று காட்டுகிறார் ஆழ்வார். திருநாமத்தைச் சொல்லு வதுடன் பிறவழிகளிலும் திருமாலை வழிபடுவது மிக இன்றியமையாதது.

தெய்வ வழிபாடு மனம், வாக்கு, மெய் ஆகிய மூன்றையும் எம் பெருமானிடம் ஈடுபடுத்துவதாக அமைகிறது. உள்ளம் இறைவனையே நாடவேண்டும்; வாக்கு அவனைப் பற்றியதாக இருக்க வேண்டும். நாக்கு அவனைக் கூறவேண்டும். எம்பெருமான் திருமந்திரத்தை உரைக்கவும் அவனைத் துதிக்கவும் வேண்டும். ஆனால் மனிதனுக்கு வாய்ந்த நாக்கு உண்ணும் பொருளை உண்டு சுவை அறிந்து அதில் மூழ்கிக் கிடக்கிறது. நாக்கைப் புறம்பே போகவிடாது அடக்கிப் பகவான் நாமங்களைக் கூறவேண்டும். குற்றம் நிறைந்த சொற்களாயினும் அதை எம்பெருமான் நன்மை தருவனவாக ஏற்றுக் கொள்வான்; வழிபடு வோன் தான் தடுமாறி இறைவன்மேல் குற்றமுள்ள சொற்களைப் பேசினாலும் திருமால் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

"வாக்குத் தூய்மை இலாமையி னாலே மாதவா
உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்
நாக்கு நின்னையல் லால்அறி யாதுநான ஞ்சுவன்
என்வச மன்று

மூர்க்குப் பேசுகின் றான்இவ னென்று
முனிவா யேலுமென் நாவினுக்கு ஆற்றேன்
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர் கார ணாகரு
ளக்கொடியானே" (433)

*தன்னுடைய இழிநிலையை உணர்ந்து தம்பால் சொல்லுறுதியும் மனவுறுதியுமின்மையும் கண்டு வருந்தி ஆழ்வார் அஞ்சுகிறார். மூர்க்கன் பேசுகின்றேன் என்று என்னைப் புறக்கணிக்காது நான் கூறுவதையும் ஏற்றிடுக என்று வேண்டுகிறார் ஆழ்வார். திருமால் பெயரே சிறந்தது என்பர் பெரியாழ்வார். இவர். தம்முடைய பாசுரங்களில் திருமால் பெயரைத்தான் சொல்ல வேண்டும் என்கிறார். 'நன்மை தீமைகள் ஒன்றும் அறியேன் நாரணாவென்னும் இத்தனை யல்லால்' (435) என்றும் 'ஓவாதே நமோ நாரணா என்பன்' (435) என்றும் எம்பெருமான் பெயரையன்றி வேறு பெயர் இவருக்குத் தெரியாதாம்; அதனையும் விடாது விளம்புகிறாராம், நமோ நாரணா என்று பெயர் சொல்லாத நாளும் மலர் கொண்டு வணங்காத நாளும் தனக்குப் பட்டினிநாள் என்பர், (438) பெரியாழ்வார். தெய்வத்திருப் பெயரைச் சொன்னால் தான் தமக்கு நிறைவு என்றும் அதுவே வாழ்ந்தநாள் என்றும் அதுவே போதும் என்றும் இவர் கருதுகிறார்.*

## திருமால் பெயரே சிறந்தது

*திருமால் பெயரையிடாது மானிடர் பெயரை இடுவது பெருமைக்குரியவர் தம் பெயர் வைத்தமைக் காகக் கொடுக்கின்ற ஆடைக்கும் காசுக்கும் ஆசைப் பட்டதாகும். அதற்கெல்லாம் ஆசைப்படாது கேசவன் என்றும் சிரிதரன் என்றும் தெய்வப் பெயரிட்டு நரகம் புகுதலைத் தவிருங்கள் என்பர் பெரியாழ்வார். (381, 382) பிச்சை புக்காகிலும் எம்பிரான் திருநாமம் வைத்தல் வேண்டும் (383) மானிட சாதியில் தோன்றிற் றோர் மானிடச் சாதியை மானிட சாதியின் பேரிட் டால் மறுமைக்கில்லை (384) மாதவா, கோவிந்தா,*

*தாமோதரா என்று தெய்வப் பெயரிட்டால் நற்பேறுகிட்டும். இவ்வாறு பெரியாழ்வார் 'சீரணிமால் திருநாமமே இடத்தேற்றுகிறார் (390) இவ்வாறு திருமாலின் திருநாமத்தையிட்டு அவனை எக்காலத் தும் நெஞ்சில் நினைத்திருக்கவும் நற்பேறடையவும் ஆழ்வார் வழிகாட்டுகிறார். திருமால் பெயரை இகழ்ச்சியாகவும் புகழ்ச்சியாகவும் சொன்னாலும் பேறுகிட்டும்; அறிந்து சொன்னாலும் அறியாமல் சொன்னாலும் பேறுகிடைக்கும். இவ்வாறு திருநாம முரைத்தலாகிய வழிபாட்டு மரபைப் பெரியாழ்வார் திருமொழி எடுத்தியம்புகிறது.*

## எப்போதும் காத்தருள்க

*திருமாலின் திருநாமத்தை ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும் என்று பெரியாழ்வார் வலியுறுத்துகின்றார். திருவரங்கத்தரவணைப் பள்ளியான் கசேந்திராழ் வானுக்கு அருள் செய்தமையைத் தொண்டர்கள் கண்டனர். இதனால் தொண்டர்கள் தங்களுக்குத் தகுதியில்லை என்றாலும் 'எய்ப்பென்னை வந்து நலியும் போது அங்கு ஏதுநான் உன்னை நினைக்கமாட்டேன்; அப்போதைக்கு இப்போதே சொல்லிவைத்தேன். (423) என்று எம்பெருமான் தன்னைக் காக்க ஆழ்வார் வேண்டுகிறார். இதே கருத்தை 'ஆமிடத்யேுன்னைச் சொல்லிவைத்தேன்' (424) என்றும் 'சொல்லலாம் போதே உன் நாமம் எல்லாம் சொல்லினேன் என்னைக் குறிக் கொண்டென்றும் அல்லற்படா வண்ணம் காக்க வேண்டும்' (425) என்றும் 'ஐயவினி என்னைக் காக்க வேண்டும்' (427) என்றும் 'எண்ண லாம் போதே உன்நாமம் எல்லாம். எண்ணினேன் என்னைக்குறிக் கொண்டென்றும் அண்ணலே நீ என்னைக் காக்க வேண்டும்' (428) என்றும் தான் திருநாமத்தைச் சொல்வதையும் சாகும் போது தன்னால் சொல்ல முடியாத நிலையையும் கூறித் தன்னைக் காக்க வேண்டுகிறார். முன்னேற்பாடாகப்*

*பெரியாழ்வார், திருமாலை வேண்டி வைத்துக் கொள்ளும் அழகே தனியழகு.*

*ஒருவனுக்கு ஆபத்துவரும்போதுதான் தெய்வப் பெயரைச் சொல்லி அழைப்பான்; அவ்வாறு அழைக்காவிட்டாலும் திருமால் தன்னடியார்க்குத் தொண்டர்களுக்கு உதவ வேண்டிய நேரம் வரும் போது அறிந்து உதவுவான். நாளைக்குத் தேவையான வற்றை இன்றைக்கே நாம் திரட்டி வைத்துக் கொள்ளுவது போன்று திருமாலின் திருநாமத்தை இப்போதே சொல்லிப் பிற்காலத்துக்காகப் புண்ணியத்தைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பர் ஆழ்வார். தொண்டனைக் காக்க வேண்டிய போது அவன் திருநாமத்தைச் சொல்லி அழைக்கா விட்டாலும் திருமால் எழுந்தருளிக் காக்க வரவேண் டும் என்பது உட்கருத்து; அவ்வண்ணம் வருவான் என்பது திண்ணமான எண்ணம்.*

## வழிபாடும் வணங்குலும்

*தெய்வத் திருநாமத்தைச் சொல்லி வழிபடுவது போல அடியார்கள் திருமாலின் திருவடிகளைப் பணிந்தும் தொழுதும் விழுந்தும் வணங்கியும் வழிபடு வர். இந்த வழிபாட்டு மரபு தனிமனித வழிபாட்டிலும் திருக்கோயில் வழிபாட்டிலும் நடைமுறையில் இருந்தது; இருக்கின்றது.*

*அடியார்கள் ஆண்டவனுக்குக் காணிக்கையாகப் பொருள்களைப் படைப்பர். அவரவரீட்டிய பொருளை அவரவர் கொண்டுவந்து செலுத்துவர். தொண்டரும் மக்களும் காணிக்கை செலுத்தும்இச்செயல் இறை வனுக்குத் தொண்டர் அடியுறையிட்டு வணங்குவ தாய்ப் பின்னர் உணவு படைப்பதாக வளர்ந்தது. இதனை அழகர் மலையில் பாய்கின்ற சிலம்பாற்றின் மீது ஆழ்வார் ஏற்றி யுரைக்கின்றார். இவர் மக்களின் பண்பை ஆற்றின் மீதேற்றிக் காட்டுகிறார்.*

"ஈட்டிய பல்பொருள்கள் எம்பிரானுக் கடியுறையென்று
ஓட்டருந் தன் சிலம்பாறுடை மாலிருஞ் சோலையதே"
(358)

*என்பது பெரியாழ்வார் திருமொழி. சிலம்பாறு 'எம்பிரானுக்கடியுறை' என்று கூறித் திருமாலின் திருவடிகளில் பாய்வதாக ஆழ்வார் அமைக்கின்றார். தொண்டர்கள் தாம் தேடிய பல பொருள்களையும் எம்பெருமானுக்குக் காணிக்கையாக்கும் மரபைக் கவிமரபாக ஆழ்வார் ஆற்றின் மீதேற்றிப் பேசுகின்றார்.*

*இன்றும் அழகருக்கு மக்கள் தங்கள் நிலங்களில் விளைந்த தானியங்கள், பழங்கள், பயறுகள், வீடுகளில் ஆக்கள், ஈன்ற காளைகள், கிடாரிகள் போன்றவற்றைக் காணிக்கையாகச் செலுத்துகின்றனர். மண்ணின் விளைவு மாலுக்குக் காணிக்கையாகிறது.*

## கை தொழுது வணங்கல்

*வழிபாட்டைக் காட்டுகின்ற செயல் கைகளைக் கூப்பி வணங்கலாகும். தலை தாழ்த்தல், உடலை வளைத்தல், கைகூப்புதல், திருநாமத்தைக் கூறுதல் ஆகியன வழிபாட்டுக்குரிய அடையாளங்கள்.*

*திருவரங்கத்தம்மான், பக்தர்களும் பகவர்களும் பழமொழி வாய் முனிவர்களும், சித்தர்களும் தொழு திறைஞ்சத்திசை திசை விளக்காக நிற்கின்றான் (417) இவர்கள் எல்லாம் அவனை அஞ்சலித்து வணங்கு கின்றனர். 'தொழுதிறைஞ்ச' என்ற தொடர் வழிபாடு செய்யும் மெய்ப்பாட்டைக் காட்டுகின்றது. வயிச்சிர வணன் (குபேரன்) கண்ணனாகிய குழந்தைக்கு ஐம்படையையும் ஆரத்தையும் கொடுத்துத் தொழுது வனாய் நின்றான் (48) குழந்தைக் கண்ணனைக் குபேரன் தொழுவது ஈண்டுரைக்கப் படுகிறது. தெய்வத்தையும் சான்றோரையும், உயர்ந்தோரையும் இவ்வாறு வணங்குவது மரபு, வேறொரு பாசுரத்திலும் கை கூப்பித் தொழுதல் உரைக்கப்படுகிறது. பெரியாழ் வார் கருந்தடம் முகில் வண்ணனைக் கைதொழுதலை,*

"கருந்தட முகில் வண்ணனைக்கடைக்
கொண்டு கை தொழும் பக்தர்கள்
இந்தவூரில் இருக்கும் மானிட ரெத்தவங்கள்
செய்தார் கொலோ" (366)

*என்றியம்புவர். திருமாலைத் தொழுகின்றமையைக் 'கை தொழும்' என்றார். இதனால் கை இரண்டையும் சேர்த்துக் கும்பிடுதல் பக்தர் இயல்பென்று அறிய முடிகிறது. இத்தகைய அடியார் வாழும் திவ்விய தேசத்தில் வாழுவதற்குப் பல தவங்கள் புரிய வேண்டும் என்று திவ்விய தேசத்தையும் அடியாரையும் பாசுரம் சிறப்பிக்கிறது. திருமாலைத் தொண்டர்கள் 'வாயினால் நமோ நாரணா' என்று கூப்பிட வேண்டும்; அவ்வாறு சொல்லும் போது 'மத்தகத்திடைக் கைகளைக் கூப்பி' வணங்குவர் (366) என்றார். தலை மீது கையைக் கூப்பித் திருநாமத்தைச் சொல்லி வழிபடுதலை இதனால் அறிய முடிகிறது.*

*நாரதர் திருவரங்கத்தை வழிபாடு செய்கிறார். அதனைப் பெரியாழ்வார் 'சேமமுடை நாரதனார் சென்று சென்று துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்' (416) என்று அவர் தோத்திரம் பண்ணி வணங்குதலைக் கூறுவர். இதன் மூலம் சிறந்த ஞானியும் முனிவருமான நாரதர் திருவரங்கப் பெரிய பெருமாளைத் துதிப் பாடல்கள் சொல்லி வழிபடும் மரபு புலனாகிறது. 'அநுசந்தித்துத் துதித்தலை (369) இன்னோரிடத்தும் ஆழ்வார் காட்டுகிறார். அவன் வாய்த்த மறையோர் வணங்க இமையவர்/ ஏத்த (115) நிற்கின்றான். மறையோரும் தேவரும் வழிபடுதலை இப்பாசுரத்தால் அறிய முடிகிறது. இவற்றால் வாயினால் துதி சொல்லி வழிபடுகின்ற உண்மை வெளிப்படுகிறது.*

## மூலமந்திரம் சொல்லல்

*கண்ணனை அந்திக் காப்பிடுதற்கு அழைப்பதாகப் பாடுகின்ற பெரியாழ்வார், 'உன்மேன் சொல்லார*

வாழ்த்தி நின்றேத்திச் சொப்படக் காப்பிட வாராய்' (196) என்பர். ஆழ்வார் சொல் நிறையும்படி நின்று தோத்திரம் செய்து மங்களாசாசநம் செய்கிறார். "கண்ணுறக்க மதாவதன் முன்னம்/ மூலமாகிய ஒற்றை எழுத்தை மூன்று மாத்திரை உள்ளெழ வாங்கி" (374) என்று ஓம் என்னும் மூலமந்திரத்தைச் சொன்னால் விண்ணுலகம் கிட்டும். இங்கு வழிபாட்டில் மந்திரம் கூறி வைகுண்டம் பெற வழிகாட்டுகிறார், ஆழ்வார். இவர் மூலமந்திரத்தைச் சொல்லும் முறையைக் கூறும் அழகே தனி.

## பிறந்த நாளில் நீராட்டல்

கண்ணபிரான் பிறந்த திருவோண நாளன்று அவனுக்கு நீராட்ட வேண்டும் என்று தாய் விரும்பு கிறாள். அதனை 'நீ பிறந்த திருவோணம் இன்று நீ நீராட வேண்டும்' (153) என்று பாசுரம் பேசும். இதனையடுத்துக் 'காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்திற் பூரித்து வைத்தேன்' (154) என்பர் ஆழ்வார். இன்னும் திருமால் திருக்கோயில்களில் எம்பெரு மானுக்குத் திருமஞ்சனம் செய்யக்காய்ச்சின நீரே பயன் படுத்தப்படுகிறது. பெரியாழ்வார் பாசுரத்தை ஒட்டித் திருமால் பிறந்த நட்சத்திரத்தன்று காய்ச்சிய நீரில் நீராட்டுவது குறிக்கத்தக்கது.

## தொண்டரை வணங்குதல்

வைணவ சமயம் தொண்டர்களுக்குப் பெருஞ் சிறப்புக் கொடுத்துப் போற்றுவது. வைணவ பாகவதர் களைக் கண்டால் வைணவர்கள் பணிந்து வணங்குவர். திருக்கோட்டியூர் நரசிம்மனை நவின்றேத்துவார்களைக் கண்டால், இவரிவர் எம்பிரான் தன் சின்னங்கள் என்று சொல்லி ஆசை தீர்வேன் (369) என்பர் பெரியாழ்வார். திருமாலடியார்களைத் திருமாலின் கருவிகளாகக் கருதிப்போற்றும் மரபு இப்பாசுரவழியில் உருவானதாகும். பாகவதர் சேவை, பகவத் சேவையி

னும் அரிது. குலசேகர ஆழ்வாரும் 'மெய்யடியார்கள் தம் ஈட்டங் கண்டிடக் கூடுமேல் அது காணும் கண்பயனாவதே' என்று பாடுவர்.

இங்குக் கை கூப்பித் தொழுதல், வணங்குதல் ஆகியவற்றுடன் தலை தாழ்த்தித் தண்டனிட்டு வணங்குதலும் கூறப்படுகிறது.

## உள்ளுறைப் பொருள்

திருவரங்கத்தை மருதவளம் தோன்ற ஆழ்வார்,

"உரம் பெற்ற மலர்க்கமலம் உல களந்த சேவடிபோல்
உயர்ந்து காட்ட
வரம்புற்ற கதிர்ச் செந்நெல் தாள் சாய்த்துத் தலை
வணங்கும் தண்ணரங்கமே" (419)

என்பர். தாமரைமலர் உயர்ந்து நிற்கின்றது; 'வரம்புற்ற கதிர்ச் செந்நெல் தாள் சாய்த்துத் தலை வணங்குகிறது. (419) இயற்கையாகத் திருவரங்கத்தில் விளையும் செந்நெற் கதிரும் திருவரங்கப் பெருமானை வணங்குவதாக ஆழ்வார் உள்ளுறை அமைக்கிறார். இதன் மூலம் தேவர் முதலானார் வந்து காலை நீட்டித் தலைவணங்கித் தண்டனிட்டுக் கிடக்குமாற்றை உணர்த்துகிறார். இவ்வாறு வியாக்கியானம் செய்வது, காலை நீட்டித் தலை வணங்கி அடியார்கள் வழிபடும் வழிபடு பழக்கத்தை அடியொற்றியதாகும். வழிபடு தலைப் பேசுகின்ற ஆழ்வார், மலரிட்டு வணங்கும் மரபையும் பாசுரங்களில் சுட்டுகின்றார்.

## கண்ணனும் மலர்களும்

ஆழ்வார்கள் பாசுரங்களில் பாடியவற்றையும் செய்த வற்றையும் வைணவச் சான்றோர்கள் திருக்கோயில் களில் நடத்தி வருமியல்பினர். ஆழ்வார்கள் கூறும் வழிபாட்டு மரபுகளை வைணவக் கோயில்களில் காணமுடிகிறது. பெரியாழ்வார் கண்ணனாகிய குழந்தைக்கு அழகு செய்வதாகவும் உணவுகள்

படைப்பதாகவும் உரைக்கிறார். 'ஆநிரைமேய்க்க' (2:7) என்ற பத்தில் பகவானுக்குச் சமர்ப்பிக்க வேண்டிய எட்டு வகையான மலர்கள் சொல்லப்படுகின்றன. இம் மலர்களைக் கண்ணன் அணிந்து அருள வேண்டும் என்று அழைக்கிறாள் யசோதையாகிய பெரியாழ்வார். இத்திருமொழியின் மூலம் கண்ணனுக்கு உகந்த மலர்கள் இன்னவை என்று உணர்த்தப் படுகின்றது.

பெரியாழ்வார் சூட்டிட விரும்பும் மலர்கள் செண்பகப் பூ (2:7:1) 'மருவி மணங்கமழ்கின்ற மல்லிகைப்பூ' (ஷ:2) 'பச்சைத்தமனகத்தோடு (மரிக் கொழுந்து) பாதிரிப்பூ (ஷ:3), 'தெள்ளிய நீரிலெழுந்த செங்கழு நீர்ப்பூ (ஷை:5) புன்னைப்பூ (ஷை: 6) குருகத்திப்பூ (ஷை:7) இருவாட்சிப்பூ (கைஷ:8) கருமுகைப்பூ (இருவாச்சிப்பூ; ஷை 9) என்பனவுமாகும். இறுதிப் பாசுரத்தில் இம்மலர்களை எண்ணி எண் பகர்பூவும்' என்று ஆழ்வாருரைப்பர். இவர் செங்காந் தள் (244) பூவையும் குறிப்பர்.

பூக்களைச் சொல்லும் ஒவ்வொரு பாசுரத்திலும் ஒரு திவ்விய தேசத்தையும் சொல்லி ஆழ்வார் அநுபவிக் கிறார். திருவரங்கம்- மல்லிகைப்பூ, திருவேங்கடம்- பச்சைத்தமனகமும் (மரிக் கொழுந்து) பாதிரிப்பூவும், குடந்தை- குருக்கத்திப்பூ, திருவரங்கம்- இருவாட் சிப்பூ; இவ்வாறு பெரியாழ்வார் எந்தப் பெருமானுக்கு எந்த மலர் உகந்ததோ அதனைக் கண்டு அந்த மலரைச் சுட்டுகிறார். பிற ஆழ்வார்கள், மலர்களைத் தொடர்பு படுத்தி மங்களாசாசநம் செய்திலர். இவரே இவ்வண்ணம் இயம்புகிறார்.

காட்டுக்குப் போய்க் கன்றுகள் மேய்த்து வருகின்ற தாமோதரன் 'கார்க்கோடல் பூச்சூடி' (246) வருகிறான். கண்ணன் பசுக்களை மேய்த்து விட்டுப் பல பூக்களைச் சூடி வருகிறான். வலக்காதின் மேல் தோன்றிப் பூவணிந்து மல்லிகை வனமாலை மௌவல் மாலை/ சிலிங்காரத்தால் குழல் தாழவிட்டு' (262) என்பதாலும்

*கண்ணன் மலர்சூடுவதை அறிய முடிகிறது. இந்தக் குறிப்புகள் திருக்கோயில் வழிபாட்டுடன் தொடர்பு கொண்டவை இல்லை. ஆழ்வார் கண்ணனுடன் இணைத்துப் பூக்களைச் சொல்லியதால் இவை திருமால் உகந்த மலர்களாக அணிவிக்கத்தக்கன வாகின்றன. பூக்களை அணிவிப்பது போல அவற்றை அவன் திருவடிகளிலிடு வதுமுண்டு. இம்மலர்களைக் கோயில் வழிபாட்டிற்கும் பயன்படுத்தல் பொருந்தும்.*

## வழிபாடும் மலரும்

*திருக்கோயில் எழுந்தருளிய தெய்வத்தைப் பக்தி யாகிய பூவிட்டு வணங்கவேண்டும். இதனைக் 'கோவில மைத்து மாதவனென்னும் தெய்வத்தை நாட்டி... பூவிட வல்லார்க்கு யமதூதரால் அச்சமில்லை' (373) என்பதால் புலனாகும். கருவறைத் தெய்வத்திற்கு வழிபாடு நிகழும் போது பக்தியுடன் மலரிடும் மரபு வெளிப்படுகிறது.*

## வேதம் ஓதி மலரிடல்

*திருமாலை வணங்குகிற நாளே உண்டு உயிர்த்து வாழும் நாள்; அவன் பெயர் சொல்லாமல்" இருக்கு எசுர்சாம வேதங்களைச் சொல்லிக் கொண்டு நாள் மலரிடாது, திருவடிகளை வணங்கா நாள்கள் பட்டினி நாள்கள்; அவை பயனற்ற நாள்கள். இதனை 'இருக்கு எசுசாம வேதம் நாள் மலர் கொண்டு" (438) என்று பாசுரம் நவிலும். இந்த அடியால், ரிக்எசுர், சாமம் என்கிற வேதங்களைச் சொல்லிக்கொண்டு அன்றன் றலர்ந்த மலர்களை எடுத்துக் கொண்டு திருமாலின் திருவடிகளை வழிபடுதலை அறியலாம். இங்கு நான்கு வேதங்களில் ஒன்றாக அதர்வண வேதம் கூறப்பட வில்லை; மூன்று வேதம் ஓதலே பேசப்படுகிறது.*

## மலர் மகளனுப்பிய மாலை

*திருமகள் குழந்தைக் கண்ணனுக்கு மாலைகள் அனுப்பியதைக் "கானார் நறுந்துழாய் கை செய்த கண்ணியும் வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின்*

வாசிகையும் தேனார் மலர்மேல் திருமங்கை போத்தந் தாள்" (5() என்று ஆழ்வார் பேசுவர். காட்டிலுண்டான நறுமணம் மிக்க துளசியால் தொடுத்த மாலையையும் சுவர்க்க லோகத்திலுள்ள செழுஞ்சோலைக் கற்பகப் பூக்களால் தொடுக்கப்பட்ட திருநெற்றி மாலையையும் திருமகள் கண்ணனுக்கு வழங்கினாள். இதன் மூலம் தெய்வத்திற்கு மாலை அணிவிக்கும் மரபு தெரிகிறது.

## மூன்று வேளை வழிபாடு

வழிபாடு எததனை வேளை நிகழ்ந்தது என்பதும் ஆராயத்தக்கது. திருவெள்ளறையில் எழுந்தருளிய பெருமாளுக்குக் கண்ணெச்சில் வராதபடி காப்பிட வேண்டும் என்று கருதி அவனைப் பெரியாழ் வார் காப்பிட அழைக்கிறார். திருவெள்ளறையில் எழுந் தருளிய பெருமானைக் கண்ணனாக்கி ஆழ்வார் பாடு கின்றார். ஆழ்வார் திருவந்திக் காப்பிடும் நேரத்து, இந்திரன், பிரமன், ருத்ரன் முதலியவர்களும் தேவர் களும் எல்லாரும் சிறந்த மந்திர புஷ்பங்களைக் கொண்டு தொலைவுமில்லாமலும் அருகில் இல்லா மலும் இடைப்பட்ட தூரத்தில் வந்து மறைந்து நின்று வழிபடுகின்றனர். இந்த நேரம் அந்தியம் போது. இவ்வாறு பாடுவதனால், மாலைக்கால வழிபாடு மந்திரம், மலர்கள் கொண்டு செய்வதாக அறிந்து கொள்ள முடிகிறது.

"இந்திரனோடு பிரமனீசன் இமையவர் எல்லாம்
மந்திரமா மலர் கொண்டு மறைந்துவராய் வந்துநின்றார்
(192)

என்பதன் மூலம் மேலே கூறிய கருத்தை அறிந்து கொள்ள முடிகிறது. மாலைக் கால வழிபாட்டை மட்டும் பாடியவர் இன்னொரு பாசுரத்தில் இப்போது வழிபாடு நடப்பதாக நவிலுகிறார். 'முப்போதும் வானவரேத்தும் முனிவர்கள் வெள்ளறை நின்றாய்' (194) என்பது பாசுரப் பகுதி. மாலைக்கால வழிபாடும்

மூன்றுவேளை வானவர் வழிபடுதலும் ஈண்டு உரைக்கப்படுகின்றன. இவ்விரு குறிப்புகளும் திருவெள்ளறையொடு தொடர்புடையனவாகும்.

திருக்கோட்டியூரில் வாழுகின்ற மறையோர்கள் "குருந்தம் ஒன்றொசித்தா னொடும் சென்று கூடியாடி விழாச் செய்து/ திருந்து நான்மறையோர் இராப்பகல் ஏத்தி" (366) வாழ்கின்றனர். இதனால் இரவுபகல் ஆகிய இருவேளையும் வழிபடுதல் இயம்பப்படுகிறது.

மலைவழிபாடு

திருக்கோயிலிலுள்ள தெய்வங்களை வலம் வந்து வழிபடுமாறு திவ்விய தேசங்களாகத் திகழ்கின்ற மலையையும் வழிபடல் மரபாகும். தென்னாட்டுக்குச் சிறப்புத் தரும் மலைகள் இரண்டு; அவையாவன திருமாலிருஞ்சோலை மலையும், திருவேங்கட மலையு மாம். அடியார்கள் அழகர்மலையை அநுபவிப்பதாக இழிந்து 'அங்கு எழுந்தருளியிருக்கின்ற அழகரைக் காட்டிலும் அம்மலைதானே ப்ராப்யம், என்று அநுசந்தித்து அத்திருமலையினுடைய வைபவத்தை வகைவகையாகப் பேசிப் பெரியாழ்வார் மகிழ்கிறார். இதுபோல், நம்மாழ்வார் திருவாய் மொழியில் 'கிளரொளியிளமை' என்றும் திருமங்கையாழ்வார் 'முந்துற வுரைக்கேன்' என்ற திருமொழியிலும் அழகர்மலையை அனுபவிப்பர். இம்மலையில் எல்லாக் காலத்திலும் ஓரிடம் தப்பாமல் மலை எங்கும் பல்லாண்டு பல்லாண்டு என்று மங்கள ஓசை— மங்களாசாசநகோஷம்— ஒலிக்கும். இதனை

"எல்லா விடத்திலு மெங்கும் பரந்து பல்லாண்டொலி
செல்வா நிற்குஞ் சீர்த்தென் றிருமாலிருஞ்
சோலையே" (339)

என்று திருமொழிபாடும். இம்மலை எக்காலமும் சென்று சேவித்திருக்கும் அடியாரைக் கொடிய பாவவழியில் இருந்து நீக்கும் மலையாகும் (340)

இவ்வண்ணம் மலையை வழிபடுதலையும் வழிபடுதலின் பயனையும் பாசுரங்கள் உணர்த்துகின்றன. அழகர் மலையைத் தெய்வமாக்கி அதனை வழிபடுக என்பர். இம்மலை தேவர்களுக்கும் நல் முனிவர்களுக்கும் ஆபத்துக் காலத்துக்கு நினைத்துச் சேவித்திருப்பதாகும். *(343)* திருமலையே வேண்டுங் கால் உதவும் மலையாகும். ஆதலின் அது தெய்வமலை. திருமாலைக் காட்டிலும் அவன் வாழும் திவ்விய தேசமே அடியார்களுக்குப் பெரும் பேறு தரவல்லது; இத்திருப்பதிகளில் வாழுகின்ற பெருமானை வணங்கிட ஒருபத்துப் பாசுரங்களில் ஆழ்வார் அறிவுறுத்துகின்றார். *(391—401)* திருமலையை வணங்கினாலே திருமாலை வணங்கியதாகும்.

இறைவன் எழுந்தருளிய கோயிலையும் மலையையும் வலம் வருவது உலக இயற்கை. பெரியாழ்வார், அழகர் மலையை "நாடு நகரமுந் தீவினை தீர்க்கலுற்று, தெளித்து வலஞ்செய்யுந் தீர்த்தமுடைத் திருமாலிருஞ் சோலை" *(454)* என்பர். உலகத்தாரனைவரும் திரண்டு தம்முடைய பாவங்களையெல்லாம் தொலைத்துக் கொள்ள விரும்பிப் பேராரவாரம் செய்து கொண்டு திருமாலிருஞ்சோலையிலுள்ள சிலம்பாறு முதலிய பல தீர்த்தங்களை வலம் வருவர். இவ்வாறு மலையை வலம் வருகின்ற கிரிவல மரபைப் பெரியாழ்வார் உணர்த்துகிறார். இன்றும் சைவவைணவத் தொண்டர்கள் முழுநிலா அன்று கிரிவலம் வருவதை ஈண்டு நினைக்க வேண்டும்.

திருமாலை உள்ளத்திலிருத்திக் கை கூப்பித் தலை தாழ்த்தித் தரையில் உடல்படிய வணங்க வேண்டும்; திருமாலை வணங்குமாறு அவன் எழுந்தருளிய திருமலையையும் வலம்வந்து வணங்குதல் வழிபாட்டில் உகந்ததாகும். தெய்வ வழிபாட்டில் மனிதன் தான் உண்டி அருந்துமாறு தெய்வத்திற்கும் பல்வகை உணவுகளை ஆக்கிப் படைத்து மகிழ்கின்றான். வழிபாட்டில்

உணவும் தனிமுதன்மை பெறுகின்றது; அதிலும் திருமால் கோயில்களில் தெய்வத்துக்குப் படைக்கும் உணவு வகைகள் பல திறத்தன; சுவைமிக்கன.

பல்லாண்டு பாடுகின்ற பெரியாழ்வார் அரவணையில் பள்ளி கொண்ட திருமால், தமக்கு என்ன என்ன அருளிக் கருணை செய்தான் என்றுரைக்கின்றார்.

"நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமு
மத்தாணிச் சேவகமும்
கையடைக் காயும் கழுத்துக்குப் பூணொடு
காதுக்குக் குண்டலமும்
மெய்யிட நல்லதோர் சாந்தமுந் தந்தென்னை
வெள்ளு யிராக்கவல்ல
பையுடை நாகப் பகைக்கொடி யானுக்குப்
பல்லாண்டு கூறுவனே" (8)

என்பது பாசுரம், திருமால் தனக்குப் பலவற்றைக் கொடுத்தருள் இருக்கின்றான். நெய் நிறைந்த பிரசாதம், அத்தாணிச் சேவகம், அடைக்காய், கழுத்துப்பூண், காதுக்குக் குண்டலம், சந்தனம் ஆகியன திருமால் வழங்கியவை. இவற்றையெல்லாம் வழங்கித் திருமால் ஆழ்வாரைச் சாத்விகனாக்கி (வெள்ளுயிர்) விட்டான். திருமால் வழிபாட்டில் நெய்ச்சோறு, கையடைக்காய், சந்தனம் ஆகிய் பொருள்கள் பயன்படுத்தப்பட்டன என்றும் அவற்றை அடியார்கள் பெற்றனர். என்றும் இப்பாசுரத்தால் உய்த்துணர முடிகிறது. அடியார் படைத்தவற்றை இறைவன் உண்டு மிஞ்சியவற்றை அவர்களுக்கு அளிக்கின்றான். இவற்றையே அடுத்த பாசுரத்தில் 'உடுத்துக் களைந்த நின் பீதக வாடை உடுத்துக் கலந்த துண்டு/ தொடுத்ததுழாய் மலர் சூடிக் களைந்தன சூடுமித் தொண்டர்களோம் (9) என்றுரைப்பர். திருமாலுக்கு வழிபடுவோர் பீதகஆடை அணிவிக்கின்றனர். அவனுக்குக் கலத்தில் அமுது படைக்கின்றனர். துழாய் மாலைகளைச் சூட்டுகின்றனர். திருமால் சூடியவை அனைத்தும் அடியார்க்குப்

பிரசாதமாகத் திரும்பக் கொடுக்கப் பெறுகின்றன. இவற்றை அடியார்கள் பெற்றுப் பயன்படுத்துகின்றனர். திருமாலுக்குப் படைத்தவை அனைத்தும் அடியார் களுக்குப் பிரசாதமாகக் கிடைக்கின்றன.

கண்ணன் செய்யும் குறும்புகளையும் தீம்புகளையும் பாடவந்த ஆழ்வார் ஆய்மகள் ஒருத்தி வீட்டில் போய் அவள் நோன்புக்கு உணவாகச் சமைத்துள்ளவற்றை யடங்கலும் வாரி விழுங்கி விட்டுக் கண்ணன் வந்துவிட்டான் என்று சொல்லோவியம் ஆக்குகிறார்.

> "செந்நெ லரிசி சிறுப ருப்புச்
> செய்த அக் காரம் நறுநெய் பாலால்
> பன்னிரண் டுதிரு வோண மட்டேன்
> பண்டு மிப்பிள் ளைபரி சறிவன்" (208)

செந்நெலரிசியும் (காப்பரிசி), சிறுபயற்றம் பருப்பும், நறு நெய்யும் பாலும் ஆகிய உணவுப் பொருள்கள் உரைக்கப்படுகின்றன. இவை திருவோண விரதத்தில் படைக்கப்பட்டவை. இவ்விரதம் ஏறத்தாழப் பத்துத் திங்கள் நடைபெறுகின்றது. திருமாலுக்குப் படைப்பன வற்றைக் கண்ணன் உண்டு விட்டான் என்று இடைப்பெண் வந்து யசோதையிடமுரைக்கின்றாள். உரியவனே உண்டான் என்பதை அந்த ஆய்ச்சியால் உணர்ந்து கொள்ளமுடிய வில்லை.

இன்னொரு பாசுரத்தில் பெரியாழ்வார் கருப்புக் கட்டிப்பாகுடன் சேர்ந்த லட்டு என்னும் இனிப்பையும் சீடையையும் கார் எள்ளுருண்டையையும் கலத்தி லிட்டுத் தன் வீட்டில் இடைக்குல நங்கை வைத்திருந் தாள் என்று பாடுகிறார். கண்ணன் அந்த வீட்டுக்குள் புகுந்து அவற்றை உண்டு விட்டான் (210) இதன் மூலம் இலட்டு, சீடை, எள்ளுருண்டை ஆகிய உணவுப் பொருள்கள் திருமாலுக்கு உகந்தவை என்று அறிய முடிகிறது. திருவேங்கடத் திருப்பதியில் இலட்டு, புகழ்

*பெற்ற பிரசாதமாக விளங்குகிறது. இது திருவேங் கடவன் உகந்ததாகும்.*

*ஆய்ச்சேரியில் ஒன்றும் வைக்கமுடியாதபடி எல்லாப் பண்டங்களையும், களவு கண்டான், கண்ணன். ஒருத்தி வீட்டிலே "கும்மாயத்தொடு வெண்ணெயும் விழுங்கிக்குடத்தயிர் சாய்த்துப் பருகி" (225) வந்தான். கும்மாயம் என்னும் குழையச் சமைத்த பருப்பு இனிப்பிட்டுச் சுவைபடச் செய்யப்படும். இதனை 'ஆடிக் கூழ்' என்பர் செட்டி நாட்டார். பல்வேறு வகையான தின்பண்டங்களைக் கண்ணன் தின்று முடித்துவிட்டான் என்பதன்மூலம் ஆழ்வார் பல்வேறு நைவேத்தியப் பொருள்களைப் பேசுகிறார். திருக்குடந்தை ஆராவமுதனுக்கு இதுநாள்தோறும் படைக்கப்படுகிறது.*

## பிறருக்குரியதை உகந்தது

*ஆயர்கள் இந்திரனுக்குப் படைத்த உணவைக் கண்ணன் உண்டான். 'கோவலரிந்திரற்கு/ காட்டிய சோறும் கறியும் தயிரும் கலந்துடன் உண்டாய்' (251) என்று பொது நிலையில் இப்பாசுர அடி உரைக்கின்றது. இந்நிகழ்ச்சியைச் சொல்ல வரும்போது*

"அட்டுக்குவி சோற்றுப் பருப்பதமும்
தயிர்வாவியு நெய்யளறு மடங்க" (264)

*என்று சோற்றையும் பிறவற்றையும் இவர் பகர்வர், இந்திரனுக்குச் சோறு வண்டி வண்டியாகக் குவிந்து கிடந்தது; மலையில் ஓடைகளும் சேணுகளும் இருக்கு மாறு சோற்றுத்திரளில் தொட்டியாகக் கட்டி அதில் தயிர்த்திரளை ஓடையாகவும் நெய்ப் பெருக்கைச் சேறாகவும் ஆயர்வைத்திருந்தனர். இந்திரனுக்குரிய உணவையும் வழிபாட்டையும் கண்ணன் ஏற்று உண்டான்.*

*இந்திரனுக்குரிய பூசையைப் போலக் கண்ணனின் திருவோணத் திருவிழாக் கொண்டாட்டத்திலும் உணவு*

*வகைகள் உரைக்கப் பெறுகின்றன.(மங்கல நிகழ்ச்சி) செய்யக் கறியும் கலத்தரிசியும் ஆக்கி வைத்தேன் (252) என்பர் ஆழ்வார்; யசோதை கறி, அமுதுப்படி ஆகிய வற்றைப் பாத்திரங்களில் சேர்த்து வைத்திருக்கிறாள். இவற்றால் வழிபாட்டில் இடம் பெறும் பொருள்கள் அறியப்பெறுகின்றன.*

*கண்ணன் உணவுகளை உண்பதில் ஆர்வங் காட்டுமாறு கனிகளை உண்பதிலும் மிகுந்த ஆர்வ முடையவன். ஆய்மகள் ஒருத்தியின் வளையலைக் கழற்றி அதனைக் கொடுத்து, 'நல்லன நாவற் பழங்கள்' பெற்றான். (211) இதன் மூலம் நாவற் பழங்களும் கண்ணனுக்குப் படையல் பொருளாகக் கோயில் வழிபாட்டில் கொள்ளப்பெறுகின்றன.*

*பெரியாழ்வார், திருமாலுக்குரிய உணவுகளாகப் பூசையில் படைப்பனவற்றைப் பேசவில்லை. கண்ணன் ஆய்ச்சேரியில் உண்டு திரிந்தனவற்றையே பாசுரங் களில் கூறுகிறார். இவை திருமாலுக்குரிய நைவேத் தியங்களாக அமைகின்றன.*

உயிர்ப்பலி– அந்திப்பலி

*பெரியாழ்வார் திருமாலுக்குரிய உணவுவகைகளைச் சொன்னாலும் சிறு தெய்வங்களுக்குரிய மரபுகளையும் பாசுரங்களில் குறிப்பர். இஃது அந்திப்பலி பற்றியதாகும். 'அந்திப்பலி' பற்றிய குறிப்பொன்றையும், திருமொழியுரைக்கிறது. திருமாலிரும் சோலைமலை யைப் பாடுங்கால்*

"சிந்தப் புடைத்துச் செங்குருதி கொண்டு பூதங்கள்
அந்திப் பலிகொடுத் தாவத் தனஞ்செய் யுப்பன்மலை"
(346)

*என்பர். குருதி கொண்டு அந்திப் பொழுதிலே பலிகொடுத்து ஆபத்துத் துணையாகுமிடம் அழகர் மலையாகும். வைணவப் பூதங்கள், நாத்திகர்களைக் கண்டால் அவர்கள் உடலுறுப்புகளை அடித்துச்சிதற*

அடிக்குந்தகையன. அந்தப் பூதங்கள் தம்முடைய சாதிக்குத் தக்கபடி தாம் இரத்தத்தைப் பருகும்போது அதனை அழகருக்கு ஆராதனமாகச் சமர்ப்பித்துப் பருகின. வைணவ விரோதிகளைப் பூதங்கள் ஒறுப்பதை உயிர்ப்பலி இடுகின்ற அந்திப் பலியாக ஆழ்வார் காட்டுகின்றார். இதனால் பூதங்களுக்கு உயிர்ப்பலி யிடும் மரபு அறியப்படுகின்றது. ஈண்டு திருமால் வழிபாட்டை உயர்த்துமாறு பூதங்கள் பலியுண்ணுதலும் பேசப்படுகின்றது. திருமால் வழிபாட்டுடன் அக்காலத்தில் சிறு தெய்வ வழிபாடும் இருந்தமை யைப் பெரியாழ்வார் பாடுகிறார். அழகர்மலையில் பதினெட்டாம்படிக் கருப்பர் வழிபாடு இன்று நிகழ்தலும் இதனை வலியுறுத்தும்.

சிறுதெய்வ வழிபாட்டைக் கூறும் ஆசிரியர் பிதுர் களின் சிராத்தத்தில் பிதுருக்களாகிய தேவதைகளுக்குச் சோற்றுருண்டையிடுவர் என்று கூறுகிறார். மக்கள் பிசாசுக்களுக்கு நீருடன் கூடிய சோற்றைப் பலி கொடுப்பர். இவை பெரியாழ்வார் காலத்தில் வழக்கி லிருந்த மன்பதை மரபு. இந்த உணவைக் கண்ணன் ஓடி ஓடித் தின்கின்றான். இதனை,

> "பிண்டத் திரளையும் பேய்க்கிட்ட நீர்ச்சோறும்
> உண்டற்கு வேண்டி நீ யோடித் திரியாதே" (168)

என்று பெரியாழ்வார் சுட்டுவர். இவற்றில் சிறுதெய்வங்களுக்கு உயிர்ப்பலியிடல், பிதிர்களுக்குப் பிண்டம் போடல், பேய்களுக்குப் பலிச்சோறிடல் ஆகிய சிறுதெய்வ வழிபாட்டு மரபுகள் தெரிகின்றன.

## முளைப் போடல்

திருக்கோயில்களில் நித்திய பூசை நிகழுமாறு நைமித்திக பூசையும் நடைபெறும். பெரியாழ்வார் திருக்கோயில்களில் நடக்கின்ற பல நிகழ்ச்சிகளைத் திருப்பல்லாண்டிலும் திருமொழியிலும் உரைக்கின் றார். திருப்பல்லாண்டில் 'மண்ணும் மணமுங்கொண்

*மின்' (3) என்று அங்குரார்ப்பணத்திற்குப் புழுதிமண் சுமப்பதைச் சுட்டுகிறார். இதனை "முளைப்போடுதல்" என்பர். முளைப் போடுதல் இல்லாத எந்தவிழாவும் உயர்ந்ததாகாது. பெருந்திரு விழாக்களில் முளைப் போடுவது தான் முதற்சடங்காகும். மணங் கொள்ளு வது என்பது அந்த விழாவில் அபிமானங் கொண்டிருப் பது. திருவிழாவுக்குரிய பணிகளில் ஈடுபட்டுக் காப்புக்கட்டி விழா முடியும் வரை ஊரை விட்டுப் போகாதிருப்பதாகும். "முற்காலத்தில் அடிமை யோலை எழுதும் போது மண்ணுக்கும் மனத்துக்கும் உரியேனாகக் கடவேன் என்றெழுதுவது வழக்கமாம்" என்பர் பிரதிவாதி பயங்கரம்— அண்ணங்கராசாரியர். திருக்கோவில் விழாவில் முளைப் போடல் என்னும் கிரியை இருப்பது இதனால் தெரியவரும். இது வழிபாட்டில் இன்றியமையாத ஒன்றாகும்.*

*திருக்கோயில்களில் திருமால் பிறந்த நட்சத்திரத் தன்று விழாக் கொண்டாடுகின்றனர். திருவோணத் திருவிழாக் கண்ணனுக்குக் கொண்டாடுவர். திருவோண நட்சத்திரத்திற்கு ஏழுநாள் முன்னதாக– விசாக நட்சத்திரத்தன்று- பெண்களை யழைத்துப முளைப் போட்டு (அங்குரார்ப்பணம்) விழாவுக்குக் கால்கோள் இடுகின்றமையைப் பின்வரும் பாசுரம் புலப்படுத்தும்.*

"திண்ணார் வெண்சங்கு டையாய் திருநாள்
திருவோணம் இன்றேழா நாள்முன்
பண்ணேர் மொழியாரைக் கூவி முளையட்டிப்
பல்லாண்டு கூறுவித்தேன்" (252)

*என்று திருவிழாவுக்கு அங்குரார்ப்பணம் செய் வதைக் கூறுகிறார். இன்றும் எல்லாத் திருக்கோயில் களிலும் முளைப் போட்டுத் திருவிழாக் கொண்டாடு வதுதான் மரபு. எந்தச் சமயச் சடங்காயினும் அங்குரார்ப்பணமின்றிச் சிறப்புப்பெறாது. திரு விழாவுக்கு ஏழுநாள் முன்னர் முளைப் போடும் சடங்கு தொடங்குகிறது.*

## விழா ஆடம்பரம்

*கண்ணன் ஏழுநாள் தன்தாயை விட்டுப் பிரியாதிருந்தான்; பின் பண்டு போலக் காட்டுக்குப் போய்க் கன்றுகாலி மேய்த்துத் திருவாய்ப்பாடி மீண்டான். அவன் திரும்பி வந்தகாட்சி திருவிழாப் பவனி போன்று விளங்கியது. திருக்கோயிலில் திருவிழா நாயகர் வருங்கால் நிகழும் உபசாரங்களைப் போல் கன்று மேய்த்து வரும் கண்ணனும் ஆரவாரத்துடன் எழுந்தருளுகின்றான். இது திருக்கோயில் திருவிழாவில் தெய்வம் பவனியாக எழுந்தருளி வரும் போதுள்ள வழிபாட்டு மரபாகப் பிற்காலத்தில் கொள்ளப் பட்டிருக்கிறது.*

*எல்லா இடங்களிலும் பலவகையான மயிற் பீலியாலான குடைகள் நிறைந்திருக்கின்றன. இவர்கள் காட்டில் விழுந்து கிடக்கும் மயில் தோகைகள் கொண்டு அமைந்த குடைகளைப் பிடித்திருக்கின்றனர். இவற்றுடன் தண்ணுமை (உருமி, உடுக்கை, மத்தளம்) ஒரு தந்தியையுடைய வாத்திய விசேடம், புல்லாங்குழல் ஆகியவற்றின் கீதங்களும் எங்கும் ஒலிக்கின்றன. பெரிய விசிறிகளுமுண்டு. இவ்வண்ணம் பெரிய ஆடம்பரத் துடன் கண்ணன் வருகின்றான். (254) கண்ணன் மயிற்பீலிக் குடையில் வருதலும் (258) (259, 260) ஆடல்பாடலுடன் வருதலும் பல பாசுரங்களில் பேசப்படுகின்றன. 'பாடவும் ஆடவும் கண்டேன்' (258, 259) குழலூதி இசைபாடிக் குனித்துத் (260) தொண்டர் சூழ ஆய்ப்பாடிக்கு வருகின்றான். இங்குக் கூறப்படு வன, திருக்கோயில் திருவிழா மரபில் பின்பற்றப்படு பவை.*

## கண்ணெச்சில் கழித்தல்

*திருவெள்ளறைத் திருமாலுக்கு அந்திக் காப்பிட மறையோர் உள்ளனர். புருஷசூக்தம் முதலிய ருக்குகளைச் சொல்லிக் கொண்டு தீர்த்தத்தைச் சங்கு*

களிலே கொணர்ந்து எழில் மறையோர் (பிராமணர்கள்) வந்து நிற்கிறார்கள். (200) 'திருஷ்டி கழித்தல்' என்னும் சடங்கைப் புனையும் பெரியாழ்வார் 'இருக்கு ஓதநீர் நிறைந்த சடங்குடன் மறையவர் வந்தனர். என்பர். மந்திரம், சங்கு, என்பனவற்றுடன் மறையவரும் வழிபாட்டில் இடம் பெறுவதை அறியமுடிகிறது.

திருமால் திருக்கோயில்களில் எம்பெருமான் திருவீதிகளில் புறப்பாடு கண்டருளியதும், திருக் கோயில் வாயிலில் திருஷ்டிதோஷம் (கண்ணெச்சில்) படாமலிருக்கத் திருவந்திக் காப்பிடுவர். கருப்பூரம் ஏற்றி ஆரத்தி, நீர் ஆலத்தி, புதிய துணியைக் கிழித்துச் சுற்றிப் போடுதல் முதலியன செய்யப்பெறும். உலகியலில் குழந்தைகளுக்குத் திட்டி (திருஷ்டி) கழிப்பர். சிறந்த சாதனை நிகழ்த்தியவர்க்கும் திட்டி கழிப்பர். இங்குப் பெரியாழ்வார் திருவெள்ளறைப் பெம்மானுக்குத் திட்டி கழிக்கின்றார். விளக்கையேற்றி மாலையில் திருஷ்டி கழிப்பதை 'உருக்காட்டும் அந்தி விளக்கு இன்று ஒளிகொள்ள ஏற்றுகேன் வாராய்' (200) என்ற அடியால் அறியமுடிகிறது. இதனால் வழி பாட்டில் திருவிளக்கு இடம் பெற்றமை புலப்படும். வைணவத்திருக்கோயில்களில் இன்றும் திருவிழாக் களில் இந்நிகழ்ச்சியிடம் பெறுகிறது.

### ஸ்ரீ சடகோபன் சாதித்தலும் பாசுரமும்

பெருமாள் திருக்கோயில்களில், தெய்வ தெரிசனம் முடிந்து தீர்த்தப் பிரசாதம் பிரசாதித்த பின்னர் ஸ்ரீ சடகோபன் சாத்துவது மரபு. இந்நிகழ்ச்சி நடக்கும் போது பெரியாழ்வார் பாசுரத்தைத் தொண்டர்கள் ஓதுவர். இப்பாசுரத்தில் பெரியாழ்வார் எம்பெருமான் தன்னை நாடிவந்து தன் திருவடிகளைத் தன் மீது பொறித்தமையை உரைப்பர்.

பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்
திருப்பொலிந்த சேவடியென் சென்னியின்மேல்
பொறித்தாய்

மருப்பொசித்தாய் மல்லடர்த்தாய் என்றென்றுன்
வாசகமே
உருப்பொலிந்த நாவினேனை உனக்குரித்
தாக்கினையே" (469)

பாண்டியன் மாமேருமலையில் கயல் இலச்சினையைப் பொறித்தது போலத் திருமால் ஆழ்வார் தலை மீது இலச்சினையிட்டார். பாண்டியர் குலபதிகயல் பொறித்த இடமாகிய பருப்பதத்தை உவமை கூறியதால் ஒரு முயற்சியும் செய்திலர் என்பது போதரும். அதனால் இப்பாசுரம் திருமால் கோயில் வழிபாட்டில் இடம் பெறுகிறது.

பகவத்ஸந்நிதிகளில் ஸ்ரீ சடகோபன் சாதிக்கும் போது இப்பாசுரத்தை அநுசந்திப்பது சம்பிரதாயம். இவ்வண்ணம் பெரியாழ்வார் பாசுரம் திருக்கோயில் வழிபாட்டில் தனி இடம் பெறுகின்றது. பாசுரத்தின் ஆழ்ந்த பொருளை உணர்ந்து திருக்கோயில் வழிபாட்டில் அடியார்கள் பயன் படுத்தியுள்ளனர்.

## பெரியாழ்வார் பேரன்பு

திருமாலைச் சரணடைவது மிக உயர்ந்த நெறியாகும். ஆயர்களும் ஆனிரைகளும், மழை பெய்தபோது மழையின் கனத்தால் கதறிக் கூப்பிட்டு 'எம்மைச் சரண்' (266) என்று கண்ணனிடம் சரணடைந்தனர். திருமாலை நம்பி அவனுக்கே அடிமையாகி அவனையே இன்பமாகக் கொண்டு அவனைச் சரணடைதலே சரணாகதியாகும். ஆயரும் பிறரும் கண்ணனிடம் சரணடைவதை ஈண்டுக் காணமுடிகிறது. வைணவத்தின் உயிர்க் கொள்கையான சரணாகதியைப் பெரியாழ்வார் வலியுறுத்துகிறார்.

பெரியாழ்வார் தம்முடைய பாசுரங்களில் திருமாலைக் கண்ணனாகவும் இராமனாகவும் பரமபத நாதனாகவும் அனுபவித்துக் களிக்கின்றார்; அவனைப் பல்வேறு வகையாகக் கண்டு மகிழ்ந்தாலும், அவனையே சரணடைகின்றார் பெரியாழ்வார்

'உடலுருகி வாய் திறந்து மடுத்துன்னை நிறைத்துக் கொண்டேன்' (466) என்று எம்பெருமான் காட்சியைப் பாடுகின்றார். நினைதொறும் சொல்லுந்தொறும் நெஞ்சு இடிந்து உகும். நம்மாழ்வார் 'ஆராவமுதே' அடியேனுடலம் நின்பாலன்பாயே, நீராயலைந்து கரையவுருக்குகின்ற நெடுமாலே என்பர். பெரியாழ்வார் திருவுள்ள முழுமையும் அவ்வமுதம் பரவிநிற்கும். 'சென்னியோங்கு' என்னும் திருமொழியில்

அனந்தன்பாலும் கருடன்பாலும்
ஐதுநொய்தாக வைத்துஎன்
மனந்தன்னுள்ளே வந்துவைகி
வாழச்செய்தாய் எம்பிரான்
நினைந்தென்னுள்ளே நின்றுநெக்குக்
கண்கள் அசும் பொழுக
நினைந்திருந்தே சிரமந்தீர்ந்தேன்
நேமி நெடியவனே. (470)

எம்பெருமான் தன் அந்தரங்க நித்தியசூரிகள் எல்லாரிடத்தும் இருந்த அன்பைக் குறைத்து அவ்வன்பு முழுமையும் தன்பக்கலிலே அமைந்தருளிய பேரன்பை இப்பாசுரத்தின் மூலம் பெரியாழ்வார் வெளிக் காட்டுகிறார்.

## முத்திரையிடுதல்

பெரியாழ்வார் தாம் திருமாலடியார் என்பதை உணர்த்த வேண்டும் என்பதால் உள்ள உணர்வைப் போல உடலிலும் குறிகளிருக்க வேண்டும் என்று கருதிக் குறிகளிடவேண்டுகிறார். திருமாலடியார்கள், எக்காலத்தும் திருமாலையே நினைத்தும் சொல்லியும் கும்பிட்டுமிருப்பர்; இத்தகைய மெய்யடியார்கள் தங்களின் தோள்களில் சங்கு சக்கர முத்திரையைப் பதித்துக்கொள்ளுவர். மந்தரப்பூர்வமாக ஹோமஞ் செய்த அக்நியில் காய்ச்சப்பட்ட சங்கு சக்கரங்களின் பொறிகளை (அடையாளங்களை)ப் புஜங்களில் அணிந்து கொள்வது ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயம்.

*(பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரியர் ப 37) தொண்டர்களின் இயல்பைச் சொல்லவந்த பெரியாழ்வார்,*

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி
  திகழ்திருச் சக்கரத்தின்
கோயிற் பொறியாலே யொற்றுண்டு நின்று
  குடிகுடி யாட்செய்கின்றோம். (7)

*என்று சங்குசக்கர முத்திரையிட்டுக் கொள்ளு தலைக் கூறுகின்றார். அவ்வாறு தான் வாழ்ந்தமையை ஆழ்வார் பேசுகின்றார்.*

*திருமால் பிரமகுருவாகி அடியார் நெஞ்சம் புகுந்து சென்னியில் பாத விலச்சினையிட்டார். (450) அடியார்கள் திருமாலுக்குப் பணி செய்திருக்கும் வாய்ப்புப் பெற்றனர்; அவனை விடுத்து 'இனிப்போய் ஒருவன்/றனக்குப் பணிந்து, கடைத்தலை போய் நிற்பது திருமாலின் மேன்மைக்கு இழிவாம்' (455) இவ்வண்ணம் இப்பெரியார் திருமாலுக்கே எல்லாக்காலத்தும் அடிமை பூண்டிருக்க விரும்புகின்றார்.*

உபதேசம் பெற்று முத்திரை பெறுதல்

*திருமால் ஞான குருவாக வந்து தனக்கு உபதேசம் செய்து நெஞ்சிற் புகுந்து தலையில் திருப்பாத முத்திரை வைத்தான் என்பர் பெரியாழ்வார். திருமால் தனக்கு அருள் செய்த திறத்தை இவ்வாறு பேசுகின்றார்.*

ஏதங்கள் ஆயின எல்லாம்
  இறங்க விடுவித்து, என் உள்ளே
பீதக வாடைப் பிரானார்
  பிரம குருவாகி, வந்து
போதில் கமலவன் னெஞ்சம்
  புகுந்துமென் சென்னித் திடரில்
பாத விலச்சினை வைத்தார்
  பண்டன்று பட்டினங் காப்பே" (450)

*இப்பாசுரத்தில், திருமால் பீதக வாடைப் பிரானார் பிரம குருவாகி ஆழ்வார் நெஞ்சில் புகுந்தான். தோளுக்குத் திருவாழியிலச்சினையிட்டது போலத் தலைக்குத் திருவடியிலச்சினையிட்டான். ஆழ்வார் திருமாலை வணங்கித் தான் அடைந்த பேற்றைக் கூறுகின்றார். திருமொழியின் இறுதியில்.*

"பருப்பதத்துக் கயல்பொறித்த பாண்டியர் குலபதிபோல்
திருப்பொலிந்த சேவடியென் சென்னியின்
மேற்பொறித் தாய்" **(469)**

*என்றார் ஆழ்வார். இத்திருப்பாசுரம் திருக்கோயில் வழிபாட்டில் இடம் பெறுவது. பகவான் சந்நிதிகளில் ஸ்ரீ சடகோபன் சாதிக்கும்போது இப்பாசுரத்தை அநுசந்திப்பது சம்பிரதாயம்.*

*திருவேங்கடப் பெருமானை நோக்கிப் பெரியாழ்வார் 'என்னையும் என்னுடைமையையும் உன்சக்கரப் பொறியொற்றிக் கொண்டு' (463) அருள் புரிந்திடுக என்று வேண்டுகிறார். இங்குச் சக்கரத்தால் முத்திரை யிடுவது கூறப்படுகிறது. திருப்பல்லாண்டிலும் (7) சக்கரப் பொறியாலே முத்திரையிடுக என்றார். வேறு பாசுரங்களில் தலைமீது இலச்சினையிடுக என்று விட்டுணு சித்தர் விளம்புகிறார்.*

*திருமால் வழிபாட்டில்தான் செய்வதாகவும் பிறர் செய்வதாகவும் பெரியாழ்வார் ஆங்கு ஆங்கே பாசுரங்களில் சிலவற்றைக் குறிக்கிறார். அவற்றை எளிமையாகவும் மனிதவாழ்க்கை ஒட்டிய வகையிலும் ஆழ்வார் பாடுகிறார்.*

## தொகுப்புரை

*திருமாலையே முழுமுதற் பொருளாகக் கொண்டு பெரியாழ்வார் பாடுகிறார். திருமாலை நெஞ்சில் வைத்து மகிழும் ஆழ்வார், நாராயணன் கிருபையா லேயே தான் அவனை வணங்குவதாய்ப் பாடுகிறார்.*

திருமாலை வழிபடு கடவுளாக ஏற்ற ஆழ்வார் அவனைத் தெய்வம் என்றும் அவன் திருக் கோயிலில் எழுந்தருளியிருக்கின்றான் என்றும் இயம்புவர். கோயிலையும் கோயிலில் தெய்வம் வைப்பதையும் (373) பாசுரம் பேசுகின்றது. திருமால் அடியார்களுக்கு அத்தாணி மண்டபத்தில் எழுந்தருளிக் காட்சி தருகின் றான். திருக்கோயிலில் வாழ்ந்த அடியார்கள் தங்களை 'வைட்டணவன்' என்று சொல்லிக் கொள்வதில் பெருமை பெற்றனர். இவ்வாறு கோயிலையும் கோயிலில் எழுந்தருளிய தெய்வத்தை யும் அடியாரை யும் திவ்விய பிரபந்தப் பாசுரங்கள் கூறுகின்றன.

ஆழ்வார்கள் தெய்வத்தை நினைப்பதும் தெய்வத் திருநாமங்களைச் சொல்லுவதும் தெய்வ வழிபாட்டில் தலைமையானவை என்பர். தெய்வப் பெயர் ஆயிரமுண்டு; ஆயிரம் திருநாமங்களில் நாராயண நாமமே சிறந்தது. இதனை எக்காலத்தும் சொல்லி இணையிலாப் பேற்றை எய்த வேண்டும். வழிபாட்டில் மனத்தை ஒருமைப்படுத்தவும் திருமாலை நினைக்கவும் திருநாம சங்கீர்த்தனம் மிக இன்றியமையாதது.

பெரியாழ்வார் திருக்கோயில் வழிபாட்டுமரபை மிகுதியாகப் பேசவில்லை; பாசுரங்களிடையே ஆங் காங்கே ஆழ்வார் சுட்டிப் பேசுகிறார். சில வழிபாட்டு மரபுகளைச் சிலம்பாறு கொண்டும் செந்நெற் கதிர்கள் கொண்டும் ஆழ்வாருணர்த்துகிறார். திருமாலைக் கை கூப்பித் தொழுதலையும் சொல்லார வாய்விட்டுத் துதித்துத் தொழுதலையும் காலை நீட்டித் தலை வணங்கித் தண்டனிட்டுக் கிடத்தலையும் பாசுரங்கள் விழுந்து வணங்கும் மரபுகளாகக் காட்டுகின்றன. வழிபாட்டில் மலர்களு மிடம் பெற்றிருந்தன. மூன்று வேளை வழிபாடு நடைபெற்றது. தெய்வத்தை வலம் வருதல் போல் தெய்வம் வீற்றிருக்கும் மலையையும் அடியார்கள் வலம் வந்தனர்.

பெரியாழ்வார் திருமொழியில் கண்ணன் உண்டதாகப் பல தின்பண்டங்கள் பேசப்படுகின்றன. இவை திருக்கோயிலில் திருமாலுக்குப் படைக்கப் பட்டவை அல்ல; ஆயினும் இவை கண்ணன் உகந்த உணவுப் பொருள்கள் என்பது திண்ணம். ஒருபாசுரத்தில் (346) பூதங்கள் குருதிப்பலி உண்பதையும் பெரியாழ்வார் பாடுகிறார். திருமால் வழிபாட்டுக்குக் கட்டுப்பட்டதாகச் சிறுதெய்வ வழிபாட்டை இங்கே ஆழ்வார் வெளிப்படுத்துகிறார்.

திருமாலுக்குக் கொண்டாடும் திருவிழாக்கள் பற்றிய குறிப்பில், முளைப்போடுதல் (3, 252) குறிக்கப் பெறுகிறது. இன்றும் இஃது எல்லாக் கோயில்களிலும் காணப்படும் மரபாகும். எங்காவது தெய்வம் எழுந்தருளி உலா வரும்போது இன்னிசைக் கருவிகள் முழங்கல், குடைபிடித்தல், ஆடல்பாடல் இசைத்தல் போன்ற பல்வகை ஆடம்பரங்களுடன் கண்ணன் உலாவருதலைப் பெரியாழ்வார் பாசுரங்களில் புனைந்து காட்டுகிறார். இது திருவிழாப் பவனிக்கு முன் மாதிரியாக அமைந்திருக்கிறது. கண்ணெச்சில் என்னும் கண்திருஷ்டி கழிப்பது திருமால்கோயில் திருவிழாக்களில் மட்டுமே உள்ள வழக்கம், இதனைப் பெரியாழ்வார் திருமொழி வலியுறுத்துகிறது. இவர் திருமால் தன்னொடு ஐக்கியமாகி விட்டதாகப் பாடுகிறார்.

தான் வைணவன் என்று உறுதிப்பாடு பெறத் தன்னுடலில் சங்கு சக்கர முத்திரையிட வேண்டும் என்பது இவர் விருப்பம். இவர் பாசுரங்கொண்டு இன்று வைணவர்கள் தங்கள் உடலில் முத்திரையிட்டுக் கொண்டு மகிழ்கின்றனர். பெரியாழ்வார் இனிமையாகவும் எளிமையாகவும் வைணவ உண்மைகளையும் திருமாலின் சிறப்புகளையும் வழிபாட்டு மரபுகளையும் உணர்த்துகிறார்.

# ஆண்டாளின் வழிபாட்டு மரபு

## ஆண்டாளும் ஆயர்பாடியும்

*பாண்டிய நாட்டு ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிறந்தவர் ஆண்டாள்; இவர் பெரியாழ்வாரால் வளர்க்கப் பெற்றமையால் 'ஆழ்வார் திருமகளார் எனப்போற்றப் பெற்றார். இவரைக் கோதையார் என்றும் சூடிக்கொடுத்த நாச்சியார் என்றும் கொண்டாடுவர். இவர் அருளிச் செய்த பிரபந்தங்கள் திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்பன. இவ்விரு பிரபந்தங்களிலும் ஆண்டாள் திருமாலை நேரடியாகத் துதித்திலர். அவனைக் கணவனாக அடைய வேண்டும் என்று அவர் செய்த நோன்புகளும் நோன்பு முயற்சிகளும் திருப்பாவையிலும் நாச்சியார் திரு மொழியிலும் விவரிக்கப் பெறுகின்றன. ஆண்டாள் தானே நாயகியாக வேண்டும் என்னும் கருத்துடன் அரங்கனை ஆராதித்து அவனை நாயகனாக அடைந்துய்யும் பேறுபெற்றார். இவருடைய பாசுரங்கள் அகப்பொருட் சார்புடன் தனித்தன்மையுடையனவாக விளங்குகின்றன.*

*ஆண்டாள் தான் வாழ்ந்த ஸ்ரீவில்லிபுத்தூரையே ஆயர்பாடியாகவும் தம்மை இடைச் சிறுமியாகவும் தோழியரை ஆய்க் கன்னியராகவும் அவ்வூரிலுள்ள வடபத்ரசாயியின் திருக்கோயிலை நந்தகோபன் மாளிகையாகவும் அக்கோயிலில் எழுந்தருளியுள்ள பெருமானைக் கண்ணனாகவும் கற்பிதவுண்மை களாக்கி இடைப் பேச்சும் இடைநடையும் இயல்பாகக் கைவரப்பெற்று மானசீகத்தால் தாமும் ஆய்ப்பாடிப்*

பாவை நோன்பிற் பங்கு கொண்டு திருப்பாசுரங்களை இவர் பாடியுள்ளார்.

ஆழ்வார்கள் நாயகநாயகி பாவத்தில் பாசுரங்கள் பாடினாலும் ஆண்டாள் ஒருத்தியே அரங்கனை அடைய நோன்பிருப்பதாகவும் காமனையும் சாமனையும் வேண்டுவதாகவும் பாடியிருக்கிறார். இதன் மூலம் சிறு தெய்வங்களை நோக்கி நோன்பிருக்கும் பழக்கத்தையும் முறையையும் அறிந்து கொள்ள இயலுகின்றது. திருப்பாவை, பெண்களில் பலர் கூடி நோன்பு நோற்பதையும் நாச்சியார் திருமொழி தனி ஒரு பெண் நோன்பு மேற்கொண்டு வழிபடுவதையும் பேசுகின்றது. திருமாலைக் கணவனாக அடைய வேண்டும் என்ற நோக்கத்தில் ஆண்டாள் பாடியமையால், அவனை வழிபாடு செய்யும் மரபுகள் பாசுரங்களில் விரிவாகப் பாடப்பட்டில.

## நோன்புக்கு முன்

ஏதேனும் ஒரு குறிக்கோள் கருதி மக்கள் நோன்பை மேற்கொள்ளுவர். ஆண்டாள் திருமாலைக் கணவனாக அடையக் கருதி நோன்பு மேற்கொள்ளுகிறாள். நோன்பு தைத்திங்களில் வீட்டில் தொடங்கப் பெறுகிறது. நோன்பு செய்யும் இடத்தை (474)த் தூய்மை செய்து அங்கு மண்டலமிட்டு (மேடைகட்டி) நோன்புக் களத்தை அமைப்பர். இது மாசித்திங்கள் நிகழ்ச்சி. நோன்பின் தொடக்கத்தில் வீட்டில் முன்புறம் தெருவில் நுண்மணலைப் பரப்பித் தூய்மை செய்வது உலகியல். 'ஐயநுண்மணற் கொண்டு தெருவணிந்து' (504) 'வெள்ளை நுண்மணற் கொண்டு தெருவணிந்து' (505) என்பன மேற்கூறிய உண்மையை எண்பிக்கும்.

## ஆண்டாள் பாடிய புதுமை

மன்மதனும் அவன் தம்பி சாமனும் சிறுதெய்வங்கள்; இவர்கள் மூவரான தேவர்க்குக்

*கட்டுப் பட்டவர்கள். இங்கு ஆண்டாள், திருமாலை மணந்து கொள்ளத் திருமாலுக்குக் கட்டுப்பட்ட சிறுதேவரான மன்மதனையும் அவன் தம்பி சாமனையும் நோக்கி நோன்பிருக்கிறார். இதனால் திருமாலைப் பாடவேண்டிய— தொழ வேண்டிய— ஆண்டாள் காமனையும் சாமனையும் பாடவும் தொழவும் நேரிடுகிறது. ஆண்டாள் திருமாலை நோக்கி நேரடியாகத் தன்னை மனைவியாக ஏற்றுக் கொள் என்று பாடமுடியாது; இவ்வாறு ஒரு பெண்ணால் சொல்லமுடியாது; அவருடைய அச்சமும் நாணமும் இவ்வாறு கூறுவதைத் தடுத்துவிடும்; ஆகலின் ஒரு கன்னி காளை ஒருவனை நோக்கி மணந்து கொள்ள வேண்டுவதாகப் பாடாது, காதற் கடவுளான காமனையும் அவன் தம்பி சாமனையும் நோக்கி நோன்பிருந்து தன் விருப்பத்தை வெளிப்படுத்திப் பாடுகிறாள். ஏனைய பிரபந்தங்களில் (மதுரகவி யாழ்வார் தவிர) திருமாலே தலைமைப்பாடு பொருளாக விளங்க ஆண்டாள் பாசுரங்களில் திருமாலை அடைதற்குரிய நோன்புகள் முதன்மை பெற்று விடுகின்றன. இது புதுமைப்போக்கு.*

### புதுவெள்ளத்தில் நீராடல்

*காமனை நோக்கி நோன்பு மேற்கொள்ளும் போதும் ஆண்டாள் 'வெள்வரைப்பதன் முன்னம் துறை படிந்து' (505) என்று கிழக்கு வெளுக்கும் முன்னர் நீராடுதலை வலியுறுத்துகிறாள். தெய்வங்களைக் குறித்து நோன்போ வழிபாடோ மேற்கொள்ளும் போது நீராடித் தொடங்கல் இன்றியமையாதது. நாச்சியார் திருமொழி, மார்கழித்திங்களில் நிகழும் பாவை நோன்பின் தொடர்ச்சியாகப் பாடப்பட்டிருக்கிறது. இத்தகைய நோன்பை அல்லது வழிபாட்டை மேற்கொள்ளும் போது நோன்பு செய்வார் மேற்கொள்ள வேண்டிய நெறிகளைத் திருப்பாவையே விளக்கமாக விளம்புகிறது.*

திருப்பாவை நீராடலை மிக மிகுதியாக விவரிப்பதால் நாச்சியார் திருமொழி அதனைப் பேசவில்லை.

தெய்வ வழிபாட்டில் புறந்தூய்மை நீரான் அமையும். பாவை நோன்பைத் தொடங்கும் கோதை மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள் (பௌர்ணமி) என்று சொல்லித் தீர்த்தமாடப் பெண்களைத் திரட்டுகின்றாள். பாவை அமைத்துக் கொண்டு கிரிசை (கிரியைகள்) செய்வது நோன்பின் தொடக்கமாகும். நோன்பு மேற்கொள்ளுங் காலை நெய், பால், உண்ணாராகி நாட்காலே நீராடிக் கண்ணுக்கு மையெழுதாது குழலுக்கு மலரிட்டு முடியாது மகளிர் விரதமாக இருக்கின்றனர். அவர்கள் செய்யத்தகாதன செய்யாது கோட் சொற் கூறாதிருக்க வேண்டும். 'ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி' (475) ச் செய்ய வேண்டும். நினைத்ததை அடையவும் தெய்வத்தை வழிபடவும் நோன்பிருப்பதன் மூலம் ஆண்டாள் தெய்வ நம்பிக்கையை வளர்க்கின்றார்.

நோன்பைத் தொடங்குதற்கு நீராடல் அல்லது தீர்த்தமாடல் தலையாய சடங்காகும். தீர்த்த மாடற்கு நீர் நிலைகளிலும் ஆறுகளிலும் புது வெள்ளம் பொங்கியிருத்தல் வேண்டும். அதனை விழைந்த ஆண்டாள் மார்கழித் திங்களில் தொண்டர்களும் மக்களும் நீராடிட

"ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல்
வாழ வுலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்" (477)

என்று வேண்டி மழை பெய்யக் கோருகிறார். திருப்பாவைப் பாடல்கள் மழைபெய்ய வேண்டு தலைப் புனைவுகளுடன் பாடுகின்றன. அதனைத் தொடர்ந்து மகளிர் கூட்டமாக நீராடப் போதலும் ஒருவரையொருவர் துயிலிலிருந்து எழுப்புதலும் பாசுரங்களில் கூறப்படுகின்றன.

## கோதையும் கோயிலும்

*ஆண்டாள், திருப்பாவையில் ஆங்காங்கே கோயிலைப் பற்றிச் சுட்டுகின்றார். 'புள்ளரையன் கோயில்' (6) என்றும் அங்கு வெண்சங்கு ஒலிக்கின்றது என்றும் ஆண்டாள் விடியலைப் புனைகுவர், மலர்கள் மலர்தல் போன்ற விடிகாலை நிகழ்ச்சிகளைப் புனைய வந்த ஆசிரியர்*

"செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்" (14)

*என்று பாடுவர். காவிப்பொடியில் தோய்த்த ஆடைகளையும் வெண்மையான பற்களையுமுடைய தவத்தவர். சங்கு ஒலித்தலை உரைப்பர்.*

"நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில்
காப்பானே: கொடித் தோன்றுந் தோரண
வாசல் காப்பானே; மணிக்கதவந்தாள் திறவாய்....."(16)

*இதன்கண் கோயில் காப்பவன், தோரணவாசல் காப்பவன் என்று இருவர் காவலராகின்றனர். அவர்களை நோக்கிக் கண்ணனைக் காணக் கதவைத் திறக்க வேண்டுகிறாள், ஆண்டாள்*

*இன்னொரு பாசுரத்தில் கண்ணன் திருக்கோயிலிருந்து (கருவறை) மண்டபத்திற்குப் போந்து திருமால் வந்து காரியம் ஆராய்ந்தருள வேண்டும் என்பது கூறப்படுகிறது.*

"போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா;
உன்கோயில் நின் றிங்ஙனே போந்தருளித்
கோப்புடைய
சீரிய சிங்காசனத் திருந்து யாம்வந்த காரிய
மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்" (23)

*இவ்வாறு கருவறையிலிருந்து திருமால் கொலு மண்டபத்துக்கு வந்து அடியார்க்குச் சேவை சாதிப்பது*

இன்றும் பெருமாள் கோயில்களில் நிகழும் நிகழ்ச்சி யாகும். இதனைப் பெரியாழ்வாரும் பாடுகின்றார்.

பேரெழுதி

ஆண்டாள் காலத்தில், திருக்கோயில்கள் கட்டப்பட்டுக் கோயில்களில் வழிபாடு நன்கு நிகழ்ந்தன; கோயில்களில் வழிபாட்டு மரபுகள் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டன. வழிபாட்டில் தெய்வ வடிவை எழுந்தருளச்செய்து வணங்குவது மரபு; தெய்வங்களின் உருவத்தை ஓவியமாக எழுதிக் கோயில்களில் வழிபடுதலுமுண்டு. மணிமேகலைக் காப்பியத்தாலும் இந்த உண்மையை அறிய முடிகின்றது. மாணிக்கக் கங்கைபாயும் கதிர்காமத்தில் திரைச்சீலை ஓவிய மாகவே முருகன் காட்சி தருகின்றான். நாச்சியார் திருமொழியில்

'கடல் வண்ணன் என்பதோர் பேரெழுதி' (505)

'வேங்கட வாணன் என்பதோர் பேரெழுதி' (506)

'கோவிந்த னென்பதோர் பேரெழுதி' (506)

'சுவரிற் புராணநின் பேரெழுதி' (507)

என்று வருவனவற்றிற்குத் திருமால் திருநாமத்தை அம்பில் எழுதியும் நெஞ்சில் எழுதியும் என்று பொருள் உரைப்பர். இப்பாசுரக் குறிப்புகளால் தெய்வப் பெயர்களை எழுதி வழிபடும் பழக்கமுண்மை தெரியவரும். 'சுவரில் நின் பேரெழுதி' என்பது சுவரில் எழுதுவதாகும். இங்கு உருவத்தை எழுதினார்களா சொற்களை எழுதினார்களா என்பது தெரியவில்லை. வியாக்கியானங்கள் 'பெயரை எழுதி' என்றே உரைக்கின்றன. 'எழுதியது' என்பதற்குத் தெய்வ உருவங்களை ஓவியமாகச் சுவரில் எழுதி என்று பொருள் கொள்ளுவது சாலும். மன்மதன் உருவத்தை எழுதுவதுடன் அவனுடைய கொடியாகிய சுறவத்தையும் குதிரைகளையும் சாமரம் வீசுகின்ற

பெண்களையும் வில்லாகிய கரும்பையும் எழுதிவைத் திருப்பதாக நாச்சியார் திருமொழி நவிலுகின்றது. இக்குறிப்புகளால் தெய்வத்தை ஓவியமாக எழுதி வழிபடலும் உண்டு என்று கருத வேண்டியுள்ளது.

## திருநாமம் செப்பல்

கோயில் என்றும் வழிபாடு என்றும் நோன்பு என்றும் பாவைப் பாடல்களில் கோதை பாடினாலும் திருமாலின் திருநாமத்தைச் சொல்லுவதையும் பாசுரங்களில் வலியுறுத்தியிருக்கிறார். திருமாலின் பெயர்கள் பலவற்றைச் சொல்லி வாயாரக் கற்றோம்; அந்த ஓசை துயிலும் பெண்ணுக்குக் கேட்க வில்லையா? என்று திருப்பள்ளியெழுச்சி செய்யும் பெண்கள் தூங்கும் பெண்களைக் கேட்பதாகக் கோதை பாடுகின்றார். இவ்வாறு இறைவன் திருநாமத்தை வழிபாட்டிலும் பிறவேளைகளிலும் உரைப்பது இறைவனை அடைய இனிய வழியாகும்.

தெய்வ வழிபாட்டில் தெய்வத் திருநாமத்தைச் சொல்லித் தொண்டர்கள் ஒன்றுபட்டு உள்ளம் உருகுவர். பலரும் ஒருங்கு கூடித் தெய்வத் திருநாமத்தைச் சொல்லி மனத்தை ஒருமைப்படுத்தி ஒன்றுபடுவது சமயச் சான்றோர் கண்ட முறையாகும். தெய்வப் பெயர்/ திருநாமம் இறைவனை விடச்சிறந்தது. நாமத்தைச் சொல்லி ஜெபம் செய்வது பூசையில் ஒரு கூறாகும். திருமங்கை யாழ்வார் 'எங்கள் மால் இறைவன் நாமம் ஏத்தி நான் உய்ந்த வாறே' *(1435)* என்று பாடுவது ஆண்டாள் நெறி தழுவியதேயாகும். ஆண்டாள்

"மாமாயன் மாதவன் வைகுந்த னென்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்" (பா:9)

என்று தெய்வத்திருப்பெயரைச் சொல்லிச் சொல்லித் தொண்டர்கள் உய்தி பெறுவதைச் சுட்டுகிறார்.

இன்னொரு பாசுரத்திலும் ஆண்டாள் திரு நாமத்தைச் சொல்லிக் கண்ணனை அழைக்கின்றாள். 'கோவிந்தா, என்று அறியாத பிள்ளைகளோம் அன்பினால், உன்றன்னைச்/ சிறுபேரழைத்தனவும் சீறியருளாதே' (28) என்பர் ஆண்டாள். திருமாலைப் பல்வேறு பெயர்களால் விண்ணவரும் மண்ணவரும் அழைக்கின்றனர். அவற்றுள் ஒரு பெயரைச் சொல்லிப் பாவை நோன்பு மேற்கொண்ட மகளிர் அழைத்தனர். அவனோ அந்தப் பெயர் 'என் பெருமையைக் காட்டாத சிறுபெயர்; என்று சொல்லிக் கண்ணன் சினம் தோன்ற நின்றான். இவ்வாறு கற்பனை செய்து ஆண்டாள் 'திருமாலே சீற்றங்கொள்ளாதே' என்று பாசுரத்தில் அமைதிப்படுத்துகின்றாள். திருமால் பெருமையை விளக்குதற்கு அவனுடைய பெயர்கள் போதியதாக இல்லை; அந்தப் பெயர்களைச் சொல்லித் திருமாலை அழைத்தால் அவனுக்குச் சினம் பிறக்கும் என்றும் ஆண்டாள் கற்பனை செய்கிறார்.

## மலரிட்டு வழிபடல்

தெய்வத்தை நிறுவி அல்லது எழுதி வழிபாடு செய்யும் போது பல சடங்குகள் நிகழும். திருக்கோயிலில் தெய்வத்திற்குச் செய்யும் பூசை விரிவான பல அங்கங்களையுடையது. பூசையில் மலர்களை இட்டும் அணிவித்தும் தமிழர் வழிபாடு செய்குவர். ஆழ்வார்கள் திருமாலுக்குப் பூவிட்டுப் பூசை நடைபெறுதலைப் பேசுகின்றனர். ஆண்டாள் 'தூ யோமாய் வந்து தூ மலர் தூவித் தொழுது வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க' (பா: 5) என்பர். தாமோதரனை மலர்தூவி வழிபடலும் வாயால் புகழ்ந்து பாடலும் மனத்தால் நினைத்தலும் இங்குச் சுட்டப்படுகின்றன. இந்த வழிபாட்டால் போயபிழையும் இனிச்செய்யும் பிழையும் தீயினில் தூசாகி விடும் என்பது திண்ணம்.

*திருப்பாவையில் மலர்களையிட்டு வழிபடுதலைப் பாடிய ஆண்டாள், நாச்சியார் திருமொழியிலும் மலரிட்டு மூன்று வேளை வழிபடுதலைக் கூறுகிறார்.*

"மத்தநன் னறுமலர் முருக்கமலர்
கொண்டுமுப் போதுமுன் னடிவணங்கி" (506)

*என்ற அடியால் நல்ல மணமிக்க மலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு மூன்று காலங்களிலும் திருமாலை வணங்குதலை அறியமுடிகிறது. இரண்டு சந்தியும் ஓர் உச்சிப் பொழுதும் பூசை நிகழ்வதாக இப்பாசுரம் பேசுகிறது. இன்னொரு பாசுரத்திலும் ஆண்டாள்,*

"தொழுது முப்போது முன்னடி வணங்கித்
தூ மலர் தூ ய்த்தொழு தேத்துகின் றேன்" (512)

*என்றுரைப்பர். மலர்களையிட்டு வணங்கித் தொழுகின்றேன் என்று பாடுகின்ற ஆண்டாள் மாலை தொடுத்துத் திருமாலுக்கு அணிவிப்பேன் என்று பாசுரங்களில் சுட்டவில்லை.*

திருவமுது படைத்தல்

*திருக்கோயில் வழிபாட்டில், கடவுளுக்கு உணவாக்கிப் படைப்பது மரபு; தமிழகக் கோயில்களில் இதற்கென்று தனியே மடைப்பள்ளி இருக்கும். திருக்கோயிற் பூசையில் தெய்வத்திற்குத் திருவமுது படைத்துப் பூசை செய்தல் மரபு. நாச்சியார் திருமொழியிலுள்ள ஒன்பதாம் பதிகத்தில் அழகருக்குத் தான் படைப்பனவற்றைப் பகருகிறார்.*

நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்குநான்
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து பராவி
வைத்தேன்
நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்
ஏறு திருவுடையான் இன்றுவந்திவை
கொள்ளுங்கொலோ! (592)

*கண்ணனுக்கு விருப்பமான வெண்ணெயும் அக்கார அடிசிலும் ஆண்டாள் படைப்பதாகக் கூறுகிறாள். இதனை யேற்றுச் சோலைமலையழகர் ஆண்டாள் மனத்தே வந்து நித்தியவாசம் செய்தால், இவற்றை விடக்கூடுதலாக ஆராதனம் செய்வதாயும் அடிமை பூண்டு இருப்பதாயும் ஆண்டாளுரைக்கின்றாள். அதனைக் கூறும் பகுதி.*

"இன்று வந்தித்தனையும் அமுது செய்திடப் பெறில்நான்
ஒன்று நூ றாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளும்
செய்வன்" (593)

*என்று அழகர்மலை நம்பியிடம் கோதையார் வேண்டுகிறாள்.*

*திருப்பாவையில் கூடாரை வெல்லுஞ் சீர்க்கோவிந்தனை வேண்டி அவன் அணிந்தவற்றையும் நப்பின்னை அணிந்தவற்றையும் தாங்கள் அணிந்து கொள்வோம் என்றும் பாற்சோற்றைப் படைத்து உண்போம் என்றும் கோதையார் பாடுகின்றாள்.*

"கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா, உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடுபுகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடையுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்" (27)

*இப்பாசுரத்திற்கு வியாக்கியானம் செய்வோர், கண்ணனுக்கு அணிவித்தவற்றையே ஆண்டாள் அணிய விரும்பியதாகவும் கண்ணனுக்குப் படைத்தவற்றையே உண்ண விரும்பியதாகவும் பொருள் செய்குவர். இதனைத் திருமொழியிலுள்ள பதின் மூன்றாம் பதிகத்திலும் காணமுடிகிறது. (627—636)*

தெய்வங்களுக்கு ஆராதனம் செய்யும்போது உடைகளும் உணவுகளும் படைக்கும் மரபைத் திருப்பாவை பேசுகிறது. காதல் மனமுடைய கோதையார், கணவனுக்கு மனைவி அடிசிலாக்கி யிடுவது போல் உணவு படைப்பதிலார்வம் உள்ளமையை வெளிப்படுத்துகிறார்.

## பிரசாதம் பெறல்

ஆண்டாள் (பதின்மூன்றாம் பதிகத்தில்) தான் கண்ணன் மீது கொண்ட காதல் தீர்ந்து விடுதற்கு 'அச்சுதன் அணிபொருட் கொண்டு நோய் அவலம் தணிமின். என்று கண்ணனுடைய திவ்விய பிரசாதங் களிலே ஏதேனும் ஒன்றைப்பெற விரும்புகிறாள். தெய்வமாக நின்று அருள் செய்யும் கண்ணன் அணிந்த ஆடை, மார்வணிந்தவனமாலை. அமுதவாயி லூறிய நீர், பெருமாளூதிவருகின்ற குழலின் துளைவாய்நீர், அவன் நடந்து சென்ற மண்ணின்துகள், ஆகியவற்றைப் பிரசாதமாகக் கேட்கிறாள் கோதை நாச்சியார். திருக்கோயில் வழிபாட்டில் ஆண்டவனின் பிரசாதங்களாக ஆடை, மாலை ஆகியன இன்றும் வழங்கப் படுகின்றன. திருவேங்கடமலையில் ஆடை கள் தொண்டருக்கு இன்றும் வழங்கப்படுகின்றன.

## இறைவன் எச்சில் மிச்சம்

ஆண்டாள் திருமாலைக் கணவனாக வரித்தமை யால் அவனுடைய வாய் எச்சில், பொடி ஆகிய வற்றையும் வேண்டி நிற்கிறார். காதல் மீதூரப்பெற்று ஆண்டாள் கண்ணனொடு ஒன்றிட விழைகின்ற விருப்பத்தையே பாசுரங்களில் பேசுகிறாள். அவன் மார்பொடு தன் முலைகளைச் சேர்த்து அமுக்கிக் கட்டுங்கள் என்றுரைக்கிறாள்.

"குற்றமற்ற முலைதன்னைக் குமரன் கோலப்—
பணைத்தோளோடு
அற்றகுற்ற மவைதீர அணைய வமுக்கிக் கட்டீரே"(633)

*என்று கண்ணனொடு ஒன்றுதலை ஆழ்வார் விழைகின்றார். அடுத்த பாசுரத்தில்*

"கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக்
கிழங்கோடு
அள்ளிப் பறித்திட்டவன் மார்வி லெறிந்து
என்னழலைத் தீர்வேனே" (634)

*என்பர். மார்பை வேரொடுபறித்து எறிந்து என்காமச் சூட்டைத் தணித்துக் கொள்வேன் என்றார், ஆண்டாள்; தான் படும்பாட்டை யெல்லாம் முலையைப் பெற்று எம்பெருமானும் படவேண்டும் என்பது ஆண்டாள் கருத்து; இம்முலைகளால் ஆண் டாள் படும் பாட்டைப் பெண்ணின் வருத்தமறியாத பெருமானான அவனும்படவேண்டும் என்பதும் இம்முலைகள் அவன் மார்வில் ஏறி அவனைக் கும்மிக் குமைக்க வேண்டும் என்பதும் ஆண்டாள் நினைப்பு. திருமால் கன்னியாகித்துயருற வேண்டும் என்பது அவள் விழைவு.*

## மன்மதனுக்குக் காணிக்கை

*மன்மதனை வணங்குகின்ற ஆண்டாள், தான் அவனுக்கு இன்ன இன்ன பொருள்களைப் படைப்பேன் என்று பேசுகிறாள். 'காயுடை நெல்லொடு கரும் (பு) அமைத்துக் கட்டியரிசி, அவல் அமைத்து '(510) என்பது திருமொழி. நெல், கரும்பு, கரும்புக்கட்டி, பச்சரிசி, அவல் ஆகியன மன்மதனுக்குப் படைக்கப் படுகின்றன. திருமாலுக்கு மிகுதியான உணவுகளைச் சொன்னவர் மன்மதனுக்கு நெருப்பில் வேகாதன வானவற்றையே உரைக்கின்றார்.*

## சங்கல்பம் செய்தல்

*நோன்பை மேற்கொள்ளும் ஆண்டாள் தான் கண்ணனையே மணக்க வேண்டும் என்று உறுதி*

*செய்து கொண்டு (சங்கல்பம்) நோன்பைத் தொடங்கு கிறாள். நோன்புகளிலும் வழிபாடுகளிலும் சமயச் சடங்குகளிலும் 'சங்கற்பித்தல்' இன்றியமை யாதது. சடங்கைத் தொடங்கும் போது அச்சடங்கினை எந்த நோக்கத்திற்காகச் செய்கின்றோம் என்று உறுதி செய்வது சங்கற்பித்தலாகும். ஆண்டாள் இளமை முதலே தான் திருவேங்கடவனுக்கே என்று உறுதி செய்து கொண்டிருந்தாள். 'துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுது வைத்தேன்' (507) என்பது பாசுரப்பகுதி. இங்கு உறுதி செய்வது திருமாலுக்கு ஆதலின் ஆண்டாள் 'தொழுது' என்று வணக்கத்தையும் சேர்த்துச் செப்பினார்.*

## நோன்பும் மறையவரும்

*நாலாயிர திவ்வியப் பிரபந்த பாசுரங்களில் ஆண்டாள் தான் நோற்பதைச் சொல்ல வந்த போது வழிபாடுகள் பற்றிக் குறிப்பர். நோன்பு நோற்பதைச் சொல்லும் போது.*

"வாயுடை மறையவர் மந்திரத்தால்
மன்மத னேஉன்னை வணங்குகின்றேன்" (7)

*என்று தான் வழிபாடு செய்யும் போது மறையவர் மந்திரங்கள் சொல்லுவதாக நாச்சியார் திருமொழி நவிலுகிறது. நோன்பு வழிபாட்டில், மந்திரங்கள் செய் வதற்கும் பூசை செய்வதற்கும் பெண்களுக்கு உரிமை யில்லை. அதனால் மறையவரிடம்பெறு கின்றனர்; மறையவரை வைத்து நோன்பு நிகழ்கிறது.*

*இதனை இன்னொரு பாசுரத்திலும் ஆண்டாள் அறைகுவர். வானவர்க்கு என்று மறையவர் வேள்வியில் கொடுத்த அவி உணவைக் காட்டில் திரிகின்ற நரிபுகுந்து காலால் மிதித்தும் மோந்தும் திரிவது போல் திருமாலுக்குரிய தன்னை மானிடவர்க் கென்று பேசுகின்றனரே என்று கோதை வருந்துகிறாள்.*

*கண்ணனைக் கணவனாக அடைய அவள் நோன்பு நோற்கும் போது 'காயா வண்ணனை மணக்க ஒத்து வல்லார்களைக் கொண்டு பங்குனிநாள் திருந்தவே நோற்கின்றேன். (509) என்று பாடுகிறாள் ஆண்டாள். வேதம் வல்லார்களைக் கொண்டு மந்திரங்கள் சொல்லிப் பங்குனி நாளில் நோன்பு செய்யப் பெறுகிறது. மகளிருக்கு மந்திரம் சொல்லி நோன்போ வழிபாடோ செய்ய அக்காலத்தில் வாய்ப்புத் தரப்பட வில்லை; அதனால் இடையில் மறையவர்கள் இருந்து வேத மந்திரங்கள் ஓதுகின்றனர். ஆண்டாள் பாசுரங்களில் வழிபாட்டு மரபில் வேதம் வல்ல அந்தணர்கள் பங்கு பெறுதலைக் காண முடிகிறது. திருக்கோயில் தெய்வ வழிபாட்டில் அந்தணர்கள் நின்று மந்திரங்கள் ஓதியதாகக் குறிப்பில்லை. வழிபாட்டு மரபுகளைப் பேசும் ஆண்டாள் கண்ணன் தன்னைக் கண்களால் நோக்கி அருள வேண்டும் என்று வேண்டுகிறாள். இதுதான் வழிபாட்டில் பெரும் பயனாகும்.*

## அருளி நோக்குக

*கண்ணனைக் கன்னியர்கள் வணங்கும் போது "போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாக" வேண்டுகின்றனர். அவர்கள் நோன்பு நோற்ற காலத்தே 'செங்கண் சிறுச் சிறிதே யெம்மேல் விழியாவோ?' (திலலை) என்றும் கேட்கின்றனர். கண்ணன் பார்வை தன்மீதுபட வேண்டும் என்பதே ஆண்டாள் போன்ற அடியார்களின் நோக்கம் ஆகும். காமனை வேண்டும் போதும் ஆண்டாள் கண்ணன் தன்னை நோக்க வேண்டும் என்றும் நவிலுகின்றாள்.*

"கருவுடை முகில் வண்ணன் காயா வண்ணன்
கருவிளைபோல் வண்ணன் கமல வண்ணத்
திருவுடை முகத்தினில் திருக்கண்களால்
திருந்தவே நோக்கெனக் கருளு கண்டாய்" (509)

*என்று கண்ணன் தன்னை நோக்கியருள வேண்டும் என்றுரைக்கின்றாள். தொண்டர்கள் எக்காலத்தும் தெய்வத் திருப்பார்வை தம்மீது விழும் என்று காத்துக் கொண்டிருப்பர்; அந்த விருப்பத்தையே ஆண்டாள் இங்குரைக்கின்றாள். கடவுள்கண் திறந்து பார்த்தால் அதற்கு ஈடு இணையில்லை.*

## மயக்கும் முகத்தழகு

*கண்ணணின் அழகும் அடியாரைக்கவருவதாகும். 'நாமமாயிரம்' என்ற பகுதியில் கண்ணன் சிற்றில் சிதைப்பதாகவும் அவனைச் சிற்றில் சிதையேல் என்று ஆண்டாள் வேண்டுவதாகவும் கண்ணனை நோக்கிப் பாடுகிறார்; இப்பகுதியில் மன்மதனை நோக்கிப் பாடுவதில்லை. சிற்றில் சிதைக்க வருகின்ற கண்ணனைப் பெண்கள் கண்டு மயங்கி நிற்கின்றனர்.*

"பெய்யுமாமுகில் போல்வண்ணா; உன்றன்
பேச்சும் செய்கையும் எங்களை
மையலேற்றி மயக்க உன்முகம் மாயம்
மந்திரந்தான் கொலோ?" (517)

*கண்ணனின் பணிவு கலந்த அன்புப் பேச்சும் கள்ளக் குழைச்சல்களும் பெண்களை மயக்குகின்றன. கன்னியரை மயக்கும் கண்ணன் முகம் சுக்குப் பொடியோ? இங்ஙனம் கண்ணன் முகத்தழகில் மயங்கி மங்கையர் தடுமாறுகின்றனர். அடுத்த பாசுரத்தில், சிற்றிலை அழிக்கும் கண்ணனை நோக்கி ஆண்டாள் 'சிற்றிலை அழிப்பதால் கோபமில்லை என்றும் கண்ணன் சிற்றிலழகைக் கண்டு மகிழாது அழிப்பதால் அவன் கண்படைத்த பயனைப் பெற்றிலேனே என்றும் கருத்தமைய ஆண்டாள் உரைக்கின்றாள். ஆண்டாள் கண்ணன் மீது ஈடுபட்டு அவனழகில் மயங்கி நிற்கின்றாள். ஒரு தெய்வத்தின் மீது ஏற்படும் அன்பின் நெருக்கம் அத்தெய்வத்தை வழிபடச் செய்யும் தகைமையது. தெய்வத்தை நினைப்பதும் பேசுவதும்*

*பணிவதும் வழிபாடாகும். ஆண்டாள் வெவ்வேறு வகையாகக் கண்ணனை அனுபவித்து மயங்குகிறாள்; அவளுடைய அளவிறந்த ஆழ்ந்த ஈடுபாடே அவளை அவனைக் கணவனாகக் கருதத் தூண்டி விட்டு விட்டது.*

## அன்பும் ஆராய்ந்தருளலும்

*மாவாய் பிளந்து மல்லரை யழித்த கண்ணனைத் திருப்பாவை 'தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்/ ஆவாவென் (று) ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்' (481) என்று வேண்டுகிறது. கண்ணனை உள்ளன்போடு சேவிப்போரின் குறைகளை அவன் களைவான் என்பதை ஆண்டாள் பாசுரத்தில் புலப்படுத்துகிறார்.*

*கண்ணனை வணங்குவதிலும் போற்றுவதிலும் தான் பெரியாழ்வாராகிய விட்டுசித்தரைப் போன்றவள் என்று ஆண்டாள் உரைக்கிறாள். அதே பாசுரத்தில் யார் யார் கண்ணனை விரும்புகிறார்களோ அவர்களைக் கண்ணன் விரும்புவான் என்று கோதை தெளிவுபடுத்துகிறாள்.*

“செம்மையுடைய திருவரங்கர் தாம் பணித்த
மெய்ம்மைப் பெருவார்த்தை விட்டுசித்தர் கேட்டிருப்பர்
தம்மையுகப் பாரைத் தாமுகப்ப ரென்னுஞ் சொல்
தம்மிடையே பொய்யானால் சாதிப்பாராரினியே” **(616)**

*இதில் 'தம்மை யுகப்பாரைத் தாமுகப்பர்' என்பது கண்ணனின் இயல்பைக் காட்டுவது. ஒருவருக்கு இன்னொருவர் மீது பற்றிருந்தால் தான் உறவு தொடரும்;' அன்புப் பயிரும் செழிக்கும்; கோதை நாச்சியார் கண்ணனை உகப்பதால் அவனும் அவளை உகப்பவனாகின்றான். இதே கருத்தை 'ஆவல் அன்பு டையார் தம் மனத்தன்றி மேவலன்' (541) என்று தொண்டர்களின் அன்புளத்தை ஆண்டாள் உரைக்கின் றாள்.*

வழியடிமை

*ஆண்டாளும் அவள் தோழிமாரும் கண்ணனுக்கே தொண்டராவதாக உறுதி கொண்டிருக்கின்றனர். தெய்வ வழிபாட்டில் உறுதிப்பாடு இன்றியமையாதது திருப்பாவையில்,*

"எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோம் உனக்கேநாம் ஆட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்" (29)

*என்று தன்னுடைய மாறாப் பற்றை ஆண்டாள் புலப்படுத்துகிறாள்; வழிவழியாகத் திருமாலுக்கு அடிமை பூண்டு வரும் குடும்பம் ஆதலின் அவனுக்கே ஆட்செய்ய அவள் விழைகின்றாள்; பிறபொருள்களை விரும்புவதைத் தடுக்க வேண்டும் என்று வேண்டு கிறாள். ஆண்டாள் தான் திருமாலுக்கு மெய்யடி யாராக வாழ வேண்டும் என்பதை இதன் மூலம் வெளிப்படுத்துகிறாள்.*

வழிபாட்டைக் கடந்த காதல்

*திருமாலை வழிபடுதல், திருமாலைக் கண்குளிரக் காணல் ஆகியன தெய்வ பக்தியை வளர்ப்பன; தெய்வத்தோடு இரண்டறக் கலக்க விரும்பும் தொண்டர், தெய்வ நினைப்பாக இருந்தும் தெய்வப் பெயரைச் சொல்லியும் தெய்வத்தைச் சார்வர்; அவர்களுக்கு எல்லாமே தெய்வம். கோதை நாச்சியார் திருமாலைப் பிறரைப்போல வழிபடு தெய்வமாக்காது, வாழ்வுதரும் கணவனாக்காது—காதலனாகக் காண்கிறாள். காதலன் காதலியைக் காப்பவனாதலின் இந்த நாயக— நாயகி பாவம், தெய்வம் தொண்டர் உறவாக விளங்குகிறது; இரண்டும் ஒரு தன்மைய, வில்லிப்புத்தூரிலே வாழும் ஆண்டாள், கண்ணன் இருக்குமிடத்திற்குத் தன்னைக் கொண்டு சேர்க்குமாறு வேண்டுகிறாள். 'மதுரைப் புறத்தென்னையுய்த்திடுமின்'*

(617) என்றும் 'ஆய்ப்பாடிக்கே உய்த்திடுமின்' (618) என்றும் 'நந்தகோ பாலன் கடைத்தலைக்கே நள்ளிருட்கண் என்னை உய்த்திடுமின்' (619) என்றும் கண்ணன் இருக்குமிடங்களையெல்லாம் சொல்லி அங்குத் தன்னைச் சேர்க்குமாறு பாடுகிறாள். இவ்வாறே யமுனை, பொய்கை என்று கண்ணனுக் குரிமையுள்ள நீர் நிலைகளையும் சொல்லி அவன் தன்னைக் கொண்டு சேருங்கள் என்று வேண்டுகிறாள். ஆண்டாள் கண்ணனொடு ஒன்று தலையே விழைந்து பாடுகிறாள்; அவனைத் தனிமுதற்பொருளாக்கித்தான் தொண்டனாக அவனை வழிபடுதலைப் பாடிலள்.

## ஆய்ச்சியர் சிந்தைக்குழகனார்

காதல் நெறி தழுவிப்பாடும் கோதை நாச்சியார், கண்ணனை எவ்வாறு வழிபடல் வேண்டும் என்றோ பிறவாறோ பாடவில்லை. எவ்வாறாயினும் கண்ணனைத் தான் சேர வேண்டும் என்ற குறிக்கோளையே பாசுரங்களில் வலியுறுத்துகிறார். தொண்டர்கள் வைகுந்தப் பேறு அடைய விரும்பி அடைவதை ஆண்டாள் கண்ணனை மணவாளனாக அடைவதாகப் புனைகின்றார். காதலனைக் காதலி நாடலும் கடவுளைத் தொண்டன் தொழுது பணிதலும் இடைவிடாத அன்பு நெருக்கத்தால் விளைவன வேயாகும். அதனாலேயே 'எம் அழகனார் அணி ஆய்ச்சியர் சிந்தையுள் குழகனார், (543) என்று கூறினார்.

## தொகுப்புரை

திருப்பாவையில் மார்கழி நோன்பும் அதன் தொடர்ச்சியாக நாச்சியார் திருமொழியில் காமன் நோன்பும் கண்ணனைக் கணவனாக அடையப்பாடப் படுகின்றன; இது வழிபாட்டையும் கைங்கரியத்தையும் கடந்து வளர்ந்த நிலையைப் பாடுகிறது; இதனால்

ஆண்டாள் கண்ணனைப் போற்றுவதாகவோ வழிபடு வதாகவோ பாடவாய்ப்பில்லாமல் போய் விட்டது. ஆண்டாளும் தோழியரும் ஒருங்கூடி நோன்பு மேற்கொள்ளலையும் மரபுகளையும் திருப்பாவை உரைக்கின்றது. நாச்சியார் திருமொழியில் ஆண்டாள் தனியே நின்று கணவனை அடைய நோன்பு மேற் கொள்ளுகின்றாள். இரண்டு பிரபந்தங்களும் மார்கழி, தை, மாசி, பங்குனி (6) ஆகிய திங்கள்களைச் சுட்டு கின்றன.

ஆண்டாள் விட்டுசித்தர் மகளாகித் திருமாலை அடைய விரும்பியமையால் அவள் கடவுள் வழிபாட்டு மரபுகளில் கருத்துச் செலுத்திலள். அதனால் அவள் பாசுரங்களில்தெய்வக் காதல் மரபுகளே பயிலுகின்றன. தெய்வ வழிபாட்டு மரபுகள் இடம் பெற்றில. ஆண்டாள் தன்னுடைய காதலையே பேசுவதால், தனிநிலையிலேயே பாசுரங்களைப் பாடியிருக்கிறார். நாச்சியார் திருமொழியின் ஆறாம் பதிகம் ஆண்டா ளின் திருமணச்சடங்குகளை விவரிக்கிறது. (556, 566) இவற்றைப் போலத் தெய்வ வழிபாட்டு முறைகள் அனைத்தையும் ஆண்டாள் முறைப்படுத்திக் கூறவில்லை.

# திருமழிசையாழ்வார்காட்டும் வழிபாட்டு மரபு

தொண்டை நாட்டில் திருமழிசை என்ற ஊரில் பிறந்தவர் திருமழிசையாழ்வார்; இவரைப் பக்திசாரர் என்பர். இளமையிலேயே பரஞான முதிர்ச்சி பெற்றுப் பரமயோகியாகத் திருமழிசையாழ்வார் திகழ்ந்தார். இவர் வாழ்வின் முடிவில், கும்பகோணத்திற்குச் சென்று அங்கு யோகத்தில் எழுந்தருளியிருக்கும் காலத்தில்தான் நான்முகன் திருவந்தாதி, திருச்சந்த விருத்தம் என்னும் இரண்டு பிரபந்தங்களும் யோகத்தின் பயனாக வெளிவந்தன. யாப்பருங் கலவிருத்திகாரார் 'குடமூக்கிற்பகவர்' என்று சுட்டுவது இவரையே ஆகும். இந்த உரை நூலில் திருச்சந்த விருத்தம் 'வாசு தேவனார் சிந்தம்' என்று சுட்டப்படு கிறது. திருமழிசையாழ்வார் தான் பாடிய பாசுரங்களில் திருமாலையே முதன்மைப்படுத்திப் பாடுகிறார்; அவ்வாறு பாடும்போது திருமாலுக்கு விண்ணவரும் மண்ணவரும் செய்யும் வழிபாட்டையும் ஆங்காங்கே இடைமடுத்துரைக்கின்றார். திருமழிசையாழ்வாரின் இரு நூல்களாலும் அறியப்பெறும் திருக்கோயில் வழிபாட்டு மரபினையும் தனி அடியார் செய்யும் வழிபாட்டு மரபினையும் இக்கட்டுரை விளக்குகிறது.

## தெய்வமும் திருக்கோயிலும்

திருமழிசை யாழ்வார் வானவர்க்கு மருந்தளித்த வள்ளலாகிய திருமாலே தெய்வம் என்றும் அப்

பெருமானையே 'நான் மதிப்பன்' (88) என்றும் 'சீர் மிகுந்த நின்னலாலொர் தெய்வம் நான் மதிப்பனே' (89) என்றும் திருச்சந்தவிருத்தத்தில் குறிப்பர். நான்முகன் திருவந்தாதியில்

"கல்லா தவர்இலங்கை கட்டழித்த காகுத்தன்
அல்லால் ஒருதெய்வம் யானிலேன்" (53)

என்று பாடுவர். திருமழிசையாழ்வார், உண்மைத் தத்துவம் இன்னதென அறிய முயன்று, சைவம், பௌத்தம் எனப் பல மதங்களையும் ஆராய்ந்து முடிவில் ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று தெளிந்தார். இந்த உண்மையையே மேற்காட்டிய பாசுரங்கள் புலப்படுத்துகின்றன. திருமழிசை யார்திருமால் ஒருவனையே தான் வழிபடும் கடவுளாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

## மூர்த்தி தலம் தீர்த்தம்

திருமாலைத் தெய்வமாக ஏற்றுக் கொண்ட திருமழிசை யாழ்வார், திருவரங்கத்தைக் 'கோயில்' என்று கொண்டாடுவார்.

பரந்துபொன்நி ரந்துநுந்தி
வந்தலைக்கும் வார்புனல்
அரங்க மென்பர் நான்முகத்
தயன்பணிந்த கோயிலே (51)

என்றும் "வாணனாயிரம் கரங்கழித்த ஆதிமால்./ பீடுகோயில் கூடு நீரரங்க மென்ற பேரதே" (53) என்றும் வருவன இங்குச் சான்றுகளாம். நான்முகன் வணங்கிய திருக்கோயில் என்றும் எண்திசைக் கணங்களும் இறைஞ்சித் தீர்த்தமாடுகின்ற நீர்பாயு மிடம் திரு வரங்கம் என்றும் ஆழ்வார் அறைகுவர். மேற்காட்டிய வற்றால் தெய்வம், கோயில், புனித நீராடல் என்பன திருமழிசையாழ்வார் காலத்தில் வழக்கிலிருந்தமை புலனாகும். தெய்வம், திருக்கோயில், தீர்த்தம் ஆகியன

*வழிபாட்டுக்கு இன்றியமையாதவை; அடியார்க்கு உகந்தவை; ஆண்டவனைக் காணவும் அடையவும் வேண்டியவை. அவற்றைச் சொல்லி ஆழ்வார் வழிபாட்டை வலியுறுத்துகிறார்.*

## தெய்வத்திருமுன் தீபம் எரிதல்

*தெய்வக்காட்சியே, ஒளிப்பிழம்பாக ஒளிருவதாகும்; தெய்வத்தைக் கண்டு வணங்கத் திருவிளக்கு வேண்டுவதாகும். தெய்வத்திருமுன் திருவிளக்கு எக்காலத்தும் ஒளிவீசும்; இதனால் மன்னர்களும் பிறரும் திருக்கோயில்களுக்குத் தூண்டாமணி விளக்குகளும் நுந்தாவிளக்குகளும் எரியக் கொடை நல்கினர். திருமழிசையாழ்வார் திருவேங்கடமலையை மங்களாசாசனம் செய்யும் போது, யானையைக் கொண்டு விளக்கு ஒளி தெய்வத்தின்முன் சுடரு தலைப் புனைகிறார். யானையொன்று வேங்கட மலையில் நிற்கின்றது; அந்த யானை வானத்து நிலவைத் தும்பிக்கையால் பிடித்துக் திருவேங்கட முடையானுக்கு மங்களதீபமாக ஏற்ற முயலுகின்றது. இதன்மூலம் ஆழ்வார், திருவேங்கடமுடையான் திருமுன்னர் திருவிளக்கு ஏற்றி வழிபடும் மரபை உணர்த்துகிறார்.*

*திருவேங்கடமுடையானுக்கு நிலவைப் பிடித்து விளக்கேற்ற முயலும் யானையைப் பிடிக்க வேடர்கள் சூழ்கின்றனர்; குறவர்களோ வில்லை வளைக்கின்றனர்; இத்தகைய மலையை நாட்டிலுள்ளார் அனைவரும் சுற்றிவந்து (பிரதட்சணம்) ஆடினால் நலமாகும். இதனை*

வைப்பன் மணிவிளக்கா மாமதியை மாலுக்கென்
றெப்பொழுதும் கைநீட்டும் யானையை எப்பாடும்
வேடுவளைக் கக்குறவர் வில்லெடுக்கும் வேங்கடமே
நாடுவளைத் தாடுதுமேல் நன்று (46)

*என்ற பாசுரம் வெளிப்படுத்துகிறது. தெய்வத்திருமுன் திருவிளக்கேற்றும் மரபு. கிரிவலம் வரும் மரபு இரண்டும் நான்முகன் திருவந்தாதியால் புலப்படுகிறது.*

## திருநாமம் சொல்லி வணங்குதல்

*தெய்வ வழிபாட்டில் திருவிளக்கு ஒளிவீசத் தெய்வத்தைக் கூவி அழைக்க வேண்டும். தெய்வத்தை எவ்வாறு அழைப்பது? தெய்வத்தின் திருநாமத்தைச் சொல்லி அழைப்பதே பெருஞ்சிறப்பு. திருமாலடிய வர்கள், திருமால் பெயரைச் சொல்லியே உய்தி பெறுவர்.*

செவிக்கு இன்ப மாவதுவும் செங்கண்மால் நாமம்
புவிக்கும் புவியதுவே கண்டீர் (69)

*இதனால் திருமாலின் திருநாமம் செவிக்கு இன்பமாகவும் உலகத்தாரைத் தாங்கிக் காக்கும் இடமாகவும் விளங்குவதை அறிய முடிகிறது. இதனைத் திருச்சந்த விருத்தத்தில்*

"கருக்கலந்த காளமேக
மேனியா நின்பெயர்
உருக்கலந்தொ ழிவிலாது
ரைக்குமாறு ரைசெயே" (103)

*என்று திருமழிசையாழ்வார் உரைப்பர். அந்தாதியின் இன்னொரு பாசுரத்தில் திருமாலின் திருநாமத்தைக் கூறுவதே அனைவர்க்கும் வாய்ப்பேச்சாகக் கடவது என்பர் ஆழ்வார்.*

"பிறக் கடைந்த பெருமான் திருநாமம்
கூறுவதே யாவர்க்கும் கூற்று" (49)

*இதன் மூலம் பேசுவார் பேச்செல்லாம் திருமாலின் திருநாமமே ஆதல் வேண்டும் என்பர் திருமழிசை யாழ்வார்.*

இறைவன் பெயரைச் சொல்லி வணங்குவதே திருமாலை வணங்குதற்குரிய வழியாகும். திருமால் பெயரைச் சொல்லும் ஆழ்வார்தான் சீலமில்லாச் சிறியேனாயினும் தன்னைத் திருமால் புறக்கணிக்கக் கூடாது என்றும் குற்றமுடையவர் என்று ஒதுக்கக் கூடாது என்றும் வேண்டுகின்றார். கசக்கின்ற வேம்பு கறியாகச் சமைத்து உண்ணற்குரியது; அதுபோலக் குற்றமுடையவர்களையும் திருமால் புறக்கணிக்காது ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது திருமழிசை யாழ்வார் துணிவு.

## மலரிட்டு வணங்குதல்

தெய்வத்தை வணங்குவோர் தெய்வப் பெயரைச் சொல்லி அவனைப் பணிவது போல அவன் திருவடிகளில் மலரை இட்டும் வணங்குவர். திருமாலுக்குப் 'போதுஆன இட்டிறைஞ்சி ஏத்து மின்; சொல்லுவதே சூது" (64) என்று நான்முகன் திருவந்தாதி யுரைக்கின்றது. மலர்தூவித் திருநாமம் சொல்ல வேண்டும் என்ற வழிபாட்டு மரபு இதனால் புலனாகும். இன்னொரு பாசுரத்தில் 'வேங்கடத்தான் பால் திருந்த வைத்தாரே பன்மலர்கள் மேல்திருந்த வாழ்வார்' (90) என்பர் திருமழிசையாழ்வார்.

பலரும் மலரிட்டு வணங்கலைக் கூறிய திருமழிசை யாழ்வார், சிவனும் நான்முகனும் திருமாலின் திருவடி களில் மலரை இட்டு வணங்குவதாகக் கூறுகின்றார்.

"தமராவார் யாவர்க்கும் தாமரை மேலாற்கும்
அமரர்க்கும் ஆடரவார்த் தாற்கும்– அமரர்கள்
தாள் தாமரை மலர்களிட் டிறைஞ்சி மால்வண்ணன்
தாள்தா மரை அடைவோம் என்று" (91)

இப்பாசுரம், திருமாலுக்குத் தாமரை மலர்களை இட்டு வணங்குதலைத் தெற்றெனக் கூறுகின்றது.

மார்க்கண்டன் போல வாழ்வு

*மலரிட்டு மாலவனை வணங்கில் அடியார்க்குக் கிட்டும் பேறு யாது? மலரிட்டு வணங்குவோர், மார்க்கண்டனைப் போல நிறைந்த ஆயுள் எய்துவர் என்பது திண்ணம்.*

"பலதேவர் ஏத்தப் படிகடந்தான் பாதம்
மலர்ஏற விட்டிறைஞ்சி வாழ்த்த– வலராகில்
மாற்கண்டன் கண்ட வகையே வருங்கண்டீர்
நீற்கண்டன் கண்டநிலை" (53)

*என்பது பாசுரம். மார்க்கண்டன் சாவாமையும் மூவாமையும் பெற்றவாறு திருமாலுக்கு மலரிட்டு வணங்குவோரும் நிறை ஆயுள் எய்துவர். மலர் இட்டுத் திருமாலை வணங்குதலையும் அவ்வாறு வணங்கு வதன் பயனையும் உரைத்த திருமழிசையாழ்வார், 'தாரகலம் சேவடி' (27.3) என்று மலர்களால் அர்ச்சிக்கப் பெற்ற பாதம் என்று தெரிவிப்பர். இவ்வாறு மலர்தூவி வணங்கலைத் திருமழிசையாழ்வார் பாசுரங்களில் ஆங்காங்கே வலியுறுத்துகிறார்.*

சிவன் வணங்கும் திருமால்

*திருமழிசையாழ்வார், திருமாலையே முழுமுதற் பொருளாகக் கொண்டாராதலின், அவர் திருமாலைச் சிவபெருமான் மலரிட்டு வணங்குவதாகப் பாடுகிறார். பின்வரும் பாசுரம், சிவபெருமான் பூக்கொண்டு வணங்கித் துதித்தலைக் கூறுகிறது.*

"நாக்கொண்டு மானிடம் பாடேன் நலமாகத்
தீக்கொண்ட செஞ்சடையான் சென்று என்றும்
பூக்கொண்டு
வல்லவா றேத்த மகிழாத வைகுந்தச்
செல்வனார் சேவடிமேல் பாட்டு" (75)

*சிவபெருமான் திருமாலை வணங்குவதாகத் திருமழிசையாழ்வார் பிறபாசுரங்களிலும் எடுத்தியம்பு கின்றார்.*

கடிக்கமல நான்முகனும் கண்மூன்றத் தானும்
அடிக்கமலம் இட்டேத்தும் அங்கு (42)

*என்ற பகுதி தாமரை மலர்களையிட்டு வணங்கு தலைப் பேசுகிறது. இங்குக் கண் மூன்றுடைய சிவனுடன் நான் முகனும் வணங்குவதாகத் திருமழிசை யாழ்வார் செப்புகிறார். நான்முகனாலும் சிவபெரு மானாலும் நன்கு துதிக்க முடியாதவன் திருமால்; அவன் தேவாதி தேவன், அவனைச் சிவபெருமான் மலரிட்டு ஏத்துதலை*

"அலர்ந்த அலர்கள் இட்டு ஏத்தும் ஈசனும்" (82.2)

*என்று அந்தாதி அறைகின்றது. திருச்சந்த விருத்தத்தில் "தாதுலாவு கொன்றை மாலை துன்னு செஞ்சடைச் சிவன் வணங்குகின்ற பாதன் திருமால்" (9) என்று சிவன் திருமாலை வணங்கலைக் குறிப்பதைக் காணமுடியும்; ஆனால் மலரிடல் இதில் சுட்டப்படவில்லை.*

## வேங்கடத்தை விழுந்து வணங்கல்

*அன்படியார்கள், நான்முகன், சிவபெருமான் என்று பலரும் திருமாலை வழிபட்டதைக் கூறிய திருமழிசை யாழ்வார், திருவேங்கடமலை வானோர்க்கும் மண்ணோர்க்கும் நிதியமாகத் திகழும் என்ற கருத்தினர். இதனைச் சொல்லவந்த ஆழ்வார், அவர்கள் செய்த வழிபாட்டையும் சுட்டுகின்றார்.*

"புரிந்து மலரிட்டுப் புண்டரிகப் பாதம்
பரிந்து படுகாடு நிற்ப– தெரிந்தெங்கும்
தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடமே
வானோர்க்கும் மண்ணோர்க்கும் வைப்பு" (45)

*இதன்கண் விருப்பத்துடன் அடியார் மலரிடுதல் சொல்லப் பெறுகின்றது; ஆனால் இடப்படும் மலர் என்னமலர் என்ற குறிப்பில்லை. திருமாலை வழிபட்ட தொண்டர்களின் நிலையைத் திருமழிசையாழ்வார் ஒருவமை மூலம் உணர்த்துகின்றார். வெட்டித் தள்ளப் பட்ட மரங்கள் அசையாது ஆடாது அந்த இடத்திலே கிடப்பது போலத் திருமாலின் தாமரைத் திருவடிகளில் தொண்டர்கள் கிடக்கின்றனர். இதனைப் 'பாதம் பரிந்து படுகாடு நிற்ப' என்று பாசுரம் பேசுகின்றது. ஆழ்வார், பெருமான் திருவடிகளில் வீழ்ந்து வணங்குதலை உவமை வழி உணர்த்துகின்றார்.*

## கைகூப்பித் தலை தாழ்த்தி வழிபடல்

*பூக்கொண்டு வணங்கலையும், விழுந்து வணங்கலை யும் பாசுரங்களில் பேசிய திருமழிசையாழ்வார், இருகை கூப்பித் தலைதாழ்த்தித் தண் மலரிட்டு வணங்கல் வேண்டும் என்பர். "வண்கை கூப்பி மதித்து மகுடம் தாழ்த்தித் தண் மலரால் வணங்குமின்கள்" (11) என்பது நான்முகன் திருவந்தாதி. கைகூப்புதலும் மகுடம் தாழ்த்தலும் மலரிடுதலும் வழிபாட்டை முழுமையாக்காது; இவற்றுடன் உள்ளத்தை உருக்கும் வாழ்த்து மொழிகளை வாய் உரைக்க வேண்டும்; அவனைக் கண்கள் கண்டிட வேண்டும். எல்லாப் புலன்களும் கருவிகளும் ஒருங்கியைந்து திருமாலை வணங்கிட வேண்டும். இதுதான் அவர் கூறும் வழிபாட்டு மரபு.*

## வேத மந்திரம்

*திருமழிசையாழ்வார் பல்வேறு வகையாகத் திருமாலை வழிபடலைப் பேசுமாறு வேதமந்திரத்தால் வழிபடலையும் அந்தாதியில் உரைக்கின்றார்.*

"குறைகொண்டு நான்முகன் குண்டிகைநீர் பெய்து
மறைகொண்ட மந்திரத்தால் வாழ்த்தி—கறைகொண்ட

கண்டத்தான் சென்னிமேலேறக் கழுவினான்
அண்டத்தான் சேவடியை யாங்கு" (9)

*உலகளந்த பெருமான் திருவடியை நான் முகன் தன்கையிலுள்ள குண்டிகை நீரைப் பெய்து வேத மந்திரங்களால் வாழ்த்தி வணங்கினான். அந்நீர் சிவன் தலைமீது விழுந்தது. நான்முகனுக்கும் சிவபெரு மானுக்கும் மேலான தெய்வம் திருமால் என்று திருமழிசையாழ்வார் பாசுரங்களில் வலியுறுத்துகிறார். நீர் பெய்தலும் மந்திரங் கூறலும் இப்பாசுரத்தில் சொல்லப்பெறுகின்றன. அவர்காலத்தில் திருக்கோயில் களில் இருந்த வழிபாட்டு மரபையே திருமழிசை யாழ்வார் பிரமன் செய்வதாகப் பேசுகிறார்.*

## திருச்சுற்று வருதல்

*திருக்கோயில் சென்று கடவுளரை வணங்குகின்ற மக்கள், கடவுளை வழிபட்டு அவன் வீற்றிருக்கும் கருவறையை வலம் வருவர். வழிபாட்டு மரபில், கடவுளைக் கீழே விழுந்து வணங்குவது போலக் கருவறையை வலம் வந்து தெய்வங்களை வணங்கு தலும் வழக்கமாகும்; தெய்வம் எழுந்தருளிய திரு மலையை வணங்கலும் மரபாகும் (46) திருக்குடந் தையை மங்களாசாசனம் செய்யும் ஆழ்வார்*

"விலங்கு நூலர் வேத நாவர்
நீதியான கேள்வியார்
வலங்கொளக்கு டந்தையுள்கி
டந்தமாலு மல்லையே" (56)

*என்று வலம் வருதலை உரைக்கின்றார். பல்வேறு மக்களும் குடந்தைச் சாரங்கபாணியை வலம் வந்து வணங்குகின்றனர்.*

## சமய விருந்தும் தெய்வம் மாறலும்

*திருமழிசையாழ்வார், மன்னவரும் விண்ணவரும் தெய்வ வழிபாட்டில் பின்பற்றும் வழிபாட்டு*

மரபுகளைப் பாசுரங்களில் சுட்டிச் சொல்லுகிறார்; சில மரபுவழிக்கதைகளைக் கூறியும் அதன்வழி சில வழிபாட்டு மரபுகளையும் திருமழிசையாழ்வார் எடுத்துரைக்கின்றார். இடைச்சேரியில் திருமால் கண்ணனாகப் பிறந்திருந்தான். அப்போது சரத் காலம் வந்தது. இடையர்கள் இந்திரனை வழிபட வண்டிகளிற் சோறும் தயிரும் நெய்யும் காய்கறிகளும் பூசைப் பொருள்களும் திரட்டினர். அதுகண்ட கண்ணன், அவர்களை நோக்கிப் "பெரியோர்களே; நாமும் நம்முடைய பசுக்களும் எதனால் ஜீவிக்கிறோமோ அதற்குப் பூசை செய்வதன்றோ தகுதி; இக்கோவர்த்தன கிரியே பசுக்களுக்குப் புல்லுந் தண்ணீரும் கொடுத்துக் காப்பாற்றுகின்றது; இதனால் இப்பூசனை யனைத்தை யும் இம்மலைக்கே இடுங்கள்" என்றான். இடையர் களும் அவ்வண்ணமே செய்தனர். கண்ணபிரான் தானே ஒரு தேவதா உருவங்கொண்டு அவற்றை முற்றும் அமுது செய்தருளினான். இடையர் இந்திரனுக்கு இட்ட பூசையை மாற்றிக் கண்ணனுக்கு இட்டனர். இந்த வரலாற்றை உள்ளடக்கி,

"இமயப் பெருமலைபோல் இந்திரனார்க் கிட்ட
சமய விருந்துண்டார் காப்பார்......." (87)

என்று நான்முகன் திருவந்தாதியுரைக்கும். படையலுக்குச் சமைத்து வைத்த உணவின் அளவை 'இமயப் பெருமலை போல்' என்ற உவமை மூலம் ஆழ்வார் காட்டுகின்றார். வழக்கமான ஆராதனையை வேறுபடுத்திச் சிறப்பு விருந்து என்று காட்ட 'சமய விருந்து' என்று அடைபெய்து ஆழ்வார் பாடியுள்ளார்.

இப்பாசுரத்தால், ஒரு தெய்வத்தை வழிபட்டவர்கள், ஏதோ ஒரு காரணத்தால் இன்னொரு தெய்வத்தை வழிபடுபவர்களாக மாறிவிடுதல் உணர்த்தப் பெறுகிறது. கடவுளருக்குச் சோறு பொங்கித் தயிர், நெய், காய்கறி போன்றவற்றைப் படைக்கும்

வழக்கத்தை இந்நிகழ்ச்சியால் அறிந்து கொள்ள இயலுகின்றது. இன்றும் திருக்கோயில்களில் 'குழித்தளிகை' என்ற பெயரால் ஆராதனம் நிகழ்வது குறிக்கத்தக்கது. ஆயர் பாடியிலுள்ளவர்கள் தாங்கள் ஆக்கிய உணவை—ஆராதனத்தைத்— தாங்களே கடவுளர்க்குப் படைத்தனர் என்றும் அவற்றைக் கடவுளர் ஏற்றுக் கொண்டனர் என்றும் புலனாகிறது.

நேர்த்திக்கடன்– உயிர்ப்பலி

பல்வேறு சமயங்களும் புக்குப்பல் வகையான அனுபவங்களும் எய்திய திருமழிசையாழ்வார், சிறுதெய்வ வழிபாட்டில் உயிர்ப்பலி கொடுத்தலையும் பாசுரத்தில் சுட்டுகிறார்.

"விலைக்காட் படுவர் விசாதி யேற்றுண்பர்
தலைக்காட் பலிதிரிவர் தக்கோர்– முலைக்கால்
விடமுண்டவேந் தனையே வேறாஏத் தாதார்
கடமுண்டார் கல்லா தவர்" (52)

திருமாலைத் துதிக்காதவர் என்ன என்ன இழிநிலையை எய்துவர் என்பதைப் பாசுரத்தால் ஆழ்வார் கூறுகின்றார். திருமாலைப் பணியாதவர் அடிமையாக விலைக்கு விற்கப்படுவர்; நோயுற்று இரந்துண்பர். இத்தகைய நிலைகளுடன் சிறுதெய்வம் சென்று சேர்வர் என்றும் திருமழிசையாழ்வார் உரைக்கின்றார்.

இப்பாசுரத்தில் வருகின்ற 'தலைக்கு ஆட்பலி திரிவர்' என்ற அடி மனிதரைப் பலியிடுதலை அறைகின்றது. இதற்கு "ஒருவன் தலைக்காகத் தம் தலையை அறுப்பதாகச் சொல்லி நரபலியாகத் திரிபவர்கள்" என்று வியாக்கியானம் செய்குவர். ஒருத்தன் பிழைத்தால் அவனுக்காகத்தன் தலையை யறுத்துக் கொடுப்பதாகச் சூத்ர தெய்வங்களுக்குப் பிரார்த்தனை செய்து கொண்டு அப்படியே தலையை அரிந்து

கொடுப்பர் பலர். நேர்த்திக்கடன் செய்து உயிர்ப்பலி கொடுக்கும் வழக்கத்தைத் திருமழிசையாழ்வார் இங்கு இயம்புகிறார். திருமாலை வணங்காது பிற தெய்வங்களை வணங்கினால் உயிர்ப்பலி கொடுத்திட வேண்டும் என்று பிறதெய்வ வழிபாட்டு இழிவைத் திருமழிசையாழ்வார் செப்புகிறார். சிறுதெய்வ வழிபாட்டில் மனிதன் மனிதனுக்காகத் தன்னைப் பலியிட்டுக் கொள்ளும் நேர்த்திக் கடன் வேண்டிக் கொள்ளும் வழக்கம் வெளிப்படுகின்றது.

## சந்தியாகால வழிபாடும் குடைபிடித்தலும்

*திருமழிசை யாழ்வார் திருவேங்கடமலையையும் அங்கு நிகழும் வழிபாட்டையும் மிகுதியாகச் சிறப்பித்துப் பாடியுள்ளார். நீரோத மேனி நெடுமால் நின்றருளும் திருவேங்கடமாமலை சீரும் சிறப்பும் மிக்க பழம்பெருமை வாய்ந்த திருமலையாதலின் அங்கு நிகழும் வழிபாட்டை நான்முகன் திருவந்தாதி பாடுகிறது. திருவேங்கட மலையில் நிகழும் சந்தியாகால வழிபாட்டை*

"மங்குல்தோய் சென்னி வடவேங் கடத் தானை
கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான்– திங்கள்
சடையேற வைத்தானும் தாமரைமே லானும்
குடையேறத் தாம்குவித்துக் கொண்டு" (43)

*என்று திருமழிசையாழ்வார் பாடுகின்றார். திருக்கோயிலில் திருவந்திக் காப்பிடுதலைக் 'காப்பு அணிவான்' என்று வரும் தொடர் சுட்டுகிறது. 'கங்குல் புகுந்தார்கள்' என்பது இரவுக்கு வாசகமாயினும் இரவின் முகமான அந்திப் பொழுதைச் சொல்லுகிறது.*

*திருவந்திக் காப்பிடுதலுக்குச் சிவபெருமானும் நான்முகனும் திருமுத்துக்குடை முதலான உபகரணங் களைச் சேகரித்துக் கொண்டு திருமலைக்கு வருகின் றார்கள். திருவாராதனத்திற்கு உபகாரமான குடை*

யொன்றைச் சொன்னது—மற்றும் சாமரம் முதலிய உபகரணங்கட்கும் உபலஷணம் என்க (ப. 118) என்று திவ்வியார்த்த தீபிகை உரை கூறுகின்றது. இன்றும் திருமலையில் பூசாகாலங்களில் குடை இடம்பெறு வதும் குடையைத் தொண்டர்கள் நேர்த்திக் கடனாகச் செலுத்துவதும் இந்தப் பழைய மரபின் தொடர்ச்சியே யாகும். திருமழிசையாழ்வார் திருமலையில் நடக்கும் அந்திக் கால வழிபாட்டைப் பாடுமாறு, அவண் நிகழும் திருவோண விழாச் சிறப்பையும் குறிப்பிடுகி றார்.

## திருவிழாக் குறிப்பு

திருவோணத் திருநட்சத்திரம், திருவேங்கடமுடை யான் பிறந்தருளியது. இந்த நன்னாளில் திருவேங்கட முடையானைப் போற்றித் திருப்பல்லாண்டு பாடுகை, வேதபாராயணம் செய்கை, ஆடுகை, பாடுகை முதலானவற்றால் உண்டான நிகழ்ச்சிகளுடன் வழி பாடும் நடைபெறும். இத்தகைய கொண்டாட்ட நிகழ்ச்சி களால் திருமலையே அதிர்கிறது. கொண்டாட்டமும் மகிழ்ச்சியும் நிறைந்த திருமலையி லிருந்து வந்து தன்னுள்ளத்தில் திருமால் புகுந்து விட்டதாகத் திருமழிசையாழ்வார் பாடுகிறார். இவர் திருவோண விழாவைக் காண்பதாகப் பேசுகிறார்.

> "காணலுறுகின்றேன் கல்லருவி முத்துதிர
> ஓண விழவில் ஒலியதிர– பேணி
> வருவேங் கடவா என்னுள்ளம் புகுந்தாய்
> திருவேங் கடமதனைச் சென்று" (41)

என்பது திருவிழாப் பற்றியது. நித்திய வழிபாடே அன்றி நைமித்தக வழிபாடு நடை பெறுவதைப் பாசுரம் பகருகின்றது.

தொகுப்புரை

திருமழிசையாழ்வாரின் இரண்டு நூல்களாலும் தெய்வம் என்றால் திருமாலே என்ற அவர் துணிவு புலனாகிறது. திருவரங்கக் கோயிலைச் சுட்டும் திருமழிசையாழ்வார் திருவேங்கடத் திருக்கோயிலை விதந்து கூறிலர். திருவரங்கத்தின் தீர்த்தச் சிறப்பையும் இவர் குறிப்பால் அறிய முடிகிறது. தெய்வத்தின் முன் தீபம் ஒளிவீசல், திருநாமமுரைத்தல், மலரிட்டு வணங்கல், போன்ற வழிபாட்டு மரபுகளை இவர் பாசுரங்களால் அறிய முடிகிறது. திருமால் வழிபாடு மார்க்கண்டேயனைப் போலச் சிரஞ்சீவி வாழ்வு தருவதாகும். சிவனும் நான்முகனும் திருமாலை மலரிட்டு வணங்குகின்றனர். திருமாலை வணங்கும் போது பூக்கொண்டு தலைதாழ்த்தி வணங்குதல் வேண்டும். வழிபட்டு வாழ்த்தும் போது வேதமந்திரங் கள் ஒலித்தன. குடந்தையைப் பாடும் ஆழ்வார் திருக்கோயிலை வலம் வருதலை உரைக்கின்றார். திருமால், இந்திரனுக்குப் படைப்பதைத் தனக்குப் படைக்குமாறு ஆயருக்கு அறிவுறுத்திச் சமய விருந்துண்டான்; பலகறிகளும் சோறும் இடையர் களால் ஆக்கப் பெற்றுத் திருமாலுக்குப் படைக்கப் பெற்றது. திருமாலை வணங்காதவர், சிறு தெய்வங் களை வணங்கித் தாம் விரும்புபவரைக் காப்பாற்றத் தங்கள் தலையைக் கொடுப்பதாக நேர்ந்து கொண்டு உயிர்ப்பலி தருவர். திருவேங்கடமலையில் நிகழும் சந்தியாகால வழிபாட்டிற்குச் சிவனும் நான்முகனும் குடையை விரித்துப் பிடித்துக் கொண்டு வேண்டியன வற்றைக் கொண்டு வருகின்றனர். இவ்வண்ணம் திருமழிசையாழ்வார், தொண்டர்களும் கோயிலாரும் நிகழ்த்தும் வழிபாட்டை இலைமறை காயாகப் பாசுரங்களில் பேசி மகிழ்கின்றார்.

# தொண்டரடிப்பொடியாழ்வார் காட்டும் வழிபாட்டு மரபுகள்

திருவரங்கப் பிரியர்

திருவரங்கப் பெருமானிடத்துத் தனி ஈடுபாடுகாட்டி அப்பெருமானையே தெய்வம் என்று வணங்கி உய்ந்தவர் தொண்டரடிப் பொடியாழ்வார். இவர் திருவரங்கன் பொருட்டாகத் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்ற இரண்டையும் அருளிச் செய்துள்ளார். நாலாயிர திவ்வியப் பிரபந்தத் தொகுப்பில், இவ்விரு பிரபந்தங்களும் திருச்சந்த விருத்தத்துக்குப் பின்னும் அமலனாதி பிரானுக்கு முன்னும் வைக்கப்பட்டிருக்கின்றன. திருமாலை, திருப்பள்ளியெழுச்சியில் காணலாகும் வழிபாட்டு மரபு இங்கு விளக்கப் பெறுகின்றது.

தொண்டரடிப் பொடியாழ்வார், சோழநாட்டில் திருமண்டங்குடியில் கேட்டை நட்சத்திரத்தில் வைணவ சோழியர் ஒருவரின் மகனாகப் பிறந்தார் இவர் திருவரங்கத்துப் பெரிய பெருமாளிடம் ஈடுபட்டு அங்குள்ள நந்தவனத்தில் மாலை கட்டித் தரும் கைங்கரியத்தை மேற்கொண்டிருந்தார். விப்பிர நாராயணர் என்ற பெயர் பெற்றிருந்த இவர் தம் தொண்டாலும் அடியார்களைப் போற்றுதலாலும் தொண்டரடிப்பொடி எனும் பெயர் பெற்றார். திருவரங்கத்திலிருந்து அப்பெருமானை வணங்கிய ஆழ்வார் திருவரங்கப் பெருமானே தெய்வம் என்பதைப் பல பாசுரங்களிலும் வலியுறுத்துவதைக் காணமுடிகிறது.

## திருவரங்கத் திருமாலே தெய்வம்

*தொண்டரடிப்பொடியாழ்வார் தான்பாடிய பாசுரங்களில், திருமாலே ஒருவன் வழிபடவேண்டிய கடவுள் என்றும் அவனையன்றிப் பிற தெய்வத்தை யாரும் வணங்கலாகாது என்றும் பிறதெய்வங்களைப் பேசுவோர் 'தலையை அறுப்பதே' (8) என் போன்ற தொண்டர்களின் கருமம் என்றும் பாடுகிறார். இவ்வாறு, அரங்கத்துப் பள்ளிகொண்ட அரவணை யானே தெய்வம் அன்றி வேறுதெய்வம் இல்லை என்று உறுதி கொண்டிருக்கிறார். இதனை*

"மற்றுமோர் தெய்வ முண்டே
மதியில்லா மானி டங்காள்
உற்றபோ தன்றி நீங்கள்
ஒருவனென் றுணர மாட்டீர்
அற்றமே லொன்ற றியீர்
அவனல்லால் தெய்வ மில்லை
கற்றினம் மேய்த்த வெந்தை
கழலிணை பணிமின் நீரே" (9)

*என்ற பாசுரம் தெளிவாகக் காட்டுகிறது. ஆழ்வார் திருமாலே தெய்வம் என்பதை எடுத்துரைக்கின்றார். அடுத்த பாசுரத்தில் 'நாட்டினான் தெய்வமெங்கும் நல்லதோ ரருள் தன்னாலே' (10) என்று திருமால் எளிவந்து அருள் செய்த பண்பையும் அவன் தெய்வத் தன்மையையும் தொண்டரடிப்பொடி பாடுகிறார்.*

## சத்தியங்காண்மின்

*உலகத்தவர்கள், உறுதி ஏற்படற் பொருட்டுச் சத்தியம் செய்யுமியல்பினராவர் வஞ்சினம் கூறுமாறு தொண்டரடிப் பொடியாழ்வார் சபதம் கூறுகிறார். இவர் திருமாலே "தெய்வம்' என்பதே உறுதி; என்தலை அறுக்கப்பட்டாலும் உண்மை உரைப்பதால் நான்சாக மாட்டேன்; சத்தியங்காண்மின்" என்று உரைக்கிறார்.*

*ஆழ்வார் திருமாலே தெய்வம் என்று எடுத்த முடிவில் பொய்ம்மை இல்லை; மாற்றமில்லை என்று உறுதிப்பட இயம்புகிறார். கையிலே கத்தியை எடுத்துக் கொண்டு "திருமாலே கடவுள் என்ற என் சொற்கள் பொய்யானால் தலையை அறுத்துக் கொண்டு சாவேன்; மெய்யானால் எவ்வகை விகாரமு மற்றிருப்பேன்" என்று பேசித்தெளிவு செய்கிறார். இதனைத்*

"தலையறுப்புண்டும் சாகேன் சத்தியங் காண்மின் ஐயா
சிலையினால் இலங்கை செற்ற தேவனே
தேவ னாவான்" (78)

*என்ற அடிகள் வெளிப்படுத்துகின்றன. உலகியலில் சத்தியம் பண்ணுமாறு இவரும் திருமாலே தெய்வம்; பிறரில்லை என்று முழங்குகிறார்.*

## ஒரே தெய்வம்– அரங்கனே

*திருமாலே தெய்வம் என்பதை உணர்ந்த தொண்டரடிப் பொடியாழ்வார் "உய்யப்போம் உணர்வினார்கட்கு ஒருவன் என்று உணர்ந்த பின்னை ஐயப்பாடு அறுத்துத் தோன்றும் அழகன்" (15) என்பர். இதன் மூலம் திருமாலே தெய்வம் வேறு ஒருவரும் தெய்வமில்லை என்பதை நிலைநாட்டுகிறார். தன் மனத்தை நோக்கித் திருவரங்கனை 'ஒருவன் என்று உணர மாட்டாய்' (24) எனக்கூறி அவன் தனித்தன்மையைக் காட்டுகிறார்.*

*திருவரங்கப் பெருமானையே தன்னுடைய தெய்வமாகக் கொண்ட ஆழ்வார் "எந்தாய்; சேவியேன் உன்னையல்லால் சிக்கெனச் செங்கண் மாலே" (35) என்று பாடுகிறார். அதே பாசுரத்தில் "பாவியேன் உன்னையல்லால் பாவியேன்" (35) என்பர். திருவரங்கப் பெருமானிடத்துப் பேரீடுபாடு கொண்ட தொண்டரடிப் பொடியாழ்வார் அவனை அழைப்பதாக உன்னை 'அன்றே அழைக்கின்றேன்' (36) என்று அரங்களை அழைக்கின்றார். இதுகாறும் காட்டிய பாசுரப்*

பகுதிகளால் திருமாலையே தொண்டரடிப்பொடி யாழ்வார் தனிப்பெரும் தெய்வமாகத் துணிந்தமை புலனாகும். திருமாலைத் தனிப்பெரும் தெய்வமாகக் கொண்டபின் அவரை வணங்கிட அப்பெருமானின் திருநாமத்தை உரைப்பதே நெறி என்று தொண்டரடிப் பொடியாழ்வார் துணிகின்றார்.

## திருநாமம் செப்பும் பேறு

திருவரங்கன் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த தொண்டரடிப் பொடியாழ்வார், தெய்வப் பெயரை அடியவரும் பிறரும் சொல்லுவதே போற்றத் தக்கதும் விரும்பத்தக்கதும் ஆகும் என்ற கருத்துடையவர். தெய்வத்திருநாமத்தை இடைவிடாது சொல்லித் தொண்டர்கள் எல்லா நலமும் எய்த முடியும் என்பது சமய ஞானிகள் காட்டிய வழியாகும். எல்லாச் சமயங்களும் தெய்வப் பெயரைச் சொல்லுவதைச் சமய அடிப்படையாக வகுத்திருக்கின்றன. இதனைத் திருமாலையின் தொடக்கத்திலேயே தொண்டரடிப் பொடியாழ்வார் வெளிப் படுத்துகிறார். அவர் திருமால் பெயரைச் சொல்ல அவாவினேன் என்பதை 'நின் நாமம் கற்ற ஆவலிப்புடைமை கண்டாய்' (1) என்பர். அடுத்த பாசுரத்தில் 'அச்சுதா அமரரேறே; ஆயர்தம் கொழுந்தே' (2) என்று சொல்லும் சுவையே தனக்கு வேண்டும்; இந்திரலோகம் ஆளும் பாக்கியம் கிடைத்தாலும் வேண்டாம் என்று திருவரங்கன் திருப் பெயரைக் கூறுதலிலுள்ள ஈடுபாட்டையும் பற்றையும் காட்டுகிறார்; இந்திர லோகவாழ்வையும் புறக்கணிக் கிறார்.

## திருநாமம் கேட்க

திருவரங்கன் திருப்பெயரை ஒவ்வொருவரும் சொல்ல வேண்டும்; அடியாரும் தொண்டரும் திருநாமம் சொல்லுவதைத் தன் காதால் கேட்க வேண்டும்; பிறரும் கேட்க வேண்டும். இவ்வாறு

தெய்வப்பெயரைச் சொன்னாலும் கேட்டாலும் பாவிகளின் பாவம் பறந்தோடும்; நரகம் நணுகாது. இந்த உண்மையை உற்கலன் வரலாற்றைக் கொண்டு தொண்டரடிப் பொடியாழ்வார் வெளிப்படுத்துகிறார்.

"நமனும்முற் கலனும் பேச நரகில் நின் றார்கள் கேட்க
நரகமே சுவர்க்க மாகும் நாமங்க ளுடையநம்பி
அவனதூர் அரங்கம் என்னாது அயர்ந்து வீழ்ந்
தளிய மாந்தர்
கவலையுள் படுகின் றாரென்று அதனுக்கே கவல்கின்
றேனே" (12)

இவ்வரலாற்றைக் காட்டி, திருமால் திருநாமத்தைக் கேட்டால் நரகமே சுவர்க்கமாக மாறிவிடும் என்று ஆழ்வார் உணர்த்துகிறார். மக்கள் வாழ்வினிறுதியில் அடைய விரும்புவது சுவர்க்கப் பேறேயாகும். அப்பேற்றைத்தரும் வல்லமை திருநாமத்துக்குரிய வனான திருவரங்கப் பெருமானாலேயே இயலும். அவன் பெயரைச் சொல்லி அந்தப் பாக்கியத்தை அடைய வேண்டும் என்பது பாசுர உண்மை.

தொண்டரடிப் பொடியாழ்வார்க்கு அரங்கன் மீது அன்புள்ளது போல் அடியார்மீதும் அன்புள்ளது. அரங்கன் திருநாமத்தையோ அவன் எழுந்தருளிய திருவரங்கத்தின் பெயரையோ சொல்லாதும் கேட்காதும் உலகத்தவர் நரகில் விழுகின்றார்களே என்று அவர் கவலைப்படுகிறார். இப்பெரியார் நாவாயிலுண்டே நமோநாராயணா வென்று ஓவாதுரைக்கு முரையுண்டே', என்று இடைவிடாது திருநாமம் சொல்லலைக் கூறுகிறார். இடைவிடாது சொல்லி எல்லாப் பேறும் பெறுதல் வேண்டும். இது திருமாலை அடைய எளிய வழி. அதனை அறிந்து செயல்பட வேண்டும். தெய்வங்களின் திருநாமப் பெயரைச் சொல்லலும் கேட்டலும் எத்தகைய பேறுதரும் என்பதைப் பாசுரம் உணர்த்துகிறது.

## மனத்துள் இருத்துக

*தெய்வத்திருநாமத்தைச்சொல்லுவதும் கேட்பது மன்றி அவனை மனத்துள் வைத்துக் கொள்ளவும் வேண்டும் என்பது தொண்டரடிப் பொடியாழ்வாரின் வழிபடு மரபாகும்.*

"திருமறு மார்வ! நின்னைச்
சிந்தையுள் திகழ வைத்து
மருவிய மனத்த ராகில்
மாநிலத் துயிர்க ளெல்லாம்
வெருவரக் கொன்று சுட்டிட்
டீட்டிய வினைய ரேலும்
அருவினைப் பயன் துய்யார்
அரங்கமா நகரு ளானே: (40)

*இப்பாசுரத்தில் திருமாலை மனத்துக்குள் வைத்து வணங்க வேண்டும் என்று ஆழ்வார் விரும்புகின்றார். எக்காலத்தும் திருமாலின் திருப்பெயர் உள்ளத்தில் புழங்க வேண்டும் என்பதைச் சிந்தையுள் வைத்து மருவிய மனத்தராக வேண்டும் என்பர்.*

*திருமால் பெயரைச் சொல்லாதவர், கேளாதவர், நினைக்காதவர் ஆகியோர் "மிண்டர்" (நன்றியறி வில்லாத மூர்க்கர்) என்றும் அவர்கள் உண்ணுகின்ற சோற்றை அவர்கள் உண்ணாதபடி விலக்கி நாய்க்கு இடவேண்டும் (14) என்றும் இவர் கூறுகிறார். இவ்வண்ணம் "திருமாலை நினைத்தும் அவன் பெயரைச் சொல்லியும் கேட்டும் வழிபடுங்கள்; அடிமை புகுங்கள்" என்று திருமாலை வலியுறுத்து கின்றது. ஆண்டவன் பெயரைப் போல அவன் எழுந்தருளிய திருப்பதியின் பெயரும் மக்களின் பாவம் போக்கிப் புண்ணியம் தருமியல்பினது.*

## திருப்பதிப் பெயரைச் சொல்லுக

*தொண்டரடிப் பொடியாழ்வார் ஆறுகளுக்கு நடுவே அழகுற அமைந்த அணிதிருவரங்கத்திருத் தலத்தில்*

பேரீடுபாடுடையவர். மனிதன் ஒவ்வொருவனும் வழிபட்டுப் பேறு அடையத் திருமால் காட்டிய திவ்வியதேசம் திருவரங்கமே; இதனைக் 'காட்டினான் திருவரங்கம் உய்பவர்க் குய்யும் வண்ணம்' (2) என்று ஆழ்வார் சுட்டுவர். திருமால் சுட்டிய இடம் திருவரங்கம் என்று கூறுவது திவ்வியதேசத்தை உகப்பதற்குரிய வழியாக அமைகிறது. திருவரங்கத்துப் பெரிய பெருமாள் பெயரைச் சொன்னால் எல்லாப் பேறும் எய்தும்; அதுபோல் அவன் அடியார்க்குச் சேவை சாதிக்கும் திவ்விய தேசப் பெயரைச் சொன்னாலும் அடியார்கள் உய்தி பெறுவது உறுதியாகும். அரக்கர் கோனைச்செற்ற அரங்க நகர்ச் சேவகனார் 'மருவிய பெரியகோயில் மதிள் திருவரங்க மென்னா கருவிலே திருவிலாதீர்; காலத்தைக் கழிக்கின்றீரே (11) என்பது சிந்திக்கற்பாவது. இதன் கருத்து பரம்பரையாகத் திருமாலடியாராக மக்கள் இருத்தல் வேண்டும்; அவர்கள் பெரிய பெருமாள் கண்வளர்ந்தருளும் திருவரங்கப் பெயரைச் சொல்ல வேண்டும் என்பதாம். திருமால் பெயரைப் போலத் திவ்விய தேசப் பெயரும் நல்லருள்புரிந்து நற்பேறு நல்கும் தகையதாகும். தெய்வப் பெயரும் திருப்பதிப் பெயரும் சொல்லி வணங்கும் தன்மை, தந்தை தந்தை வழிவழி வருவதாகும்; அதனால் அது கருவிலே வாய்ப்பதாகும்.

### கோயிலிற் பள்ளிகொண்ட அழகன்

திருமாலையும் அவன் கொலுவிருக்கும் திருவரங்கத்தையும் சொல்லுக என்ற தொண்டரடிப் பொடியாழ்வார் திருவரங்கக் கோயில் பற்றிப் பாசுரங்களில் குறிப்பிடுகிறார். வழிபாட்டுக்குரிய முழு முதற்பொருளான திருவரங்கப் பெருமான் அடியார்க்கு அருளும் கோயிலைப் பாசுரங்களில் ஆழ்வார் கவினுறப் புனைகின்றார். "அரங்கமா கோயில் கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டேன்" (17)

என்று மெய்த்தெய்வம் அரங்கன் என்று அறிந் தமையை அறைகின்றார். திருவரங்கத்தில் பெரிய பெருமாளைத் தொண்டரடிப் பொடி கண்டு வணங்கியதை இக்குறிப்புக்காட்டுகிறது. அக்கோயிலில் பெரியபெருமாள் கிடந்த கோலமாகக் காட்சியளித் தலைப் 'பாம்பணைப் பள்ளி கொண்ட மாயனார்' (20) என்பர். அரங்கன் பள்ளி கொண்ட அழகைக்

"குடதிசை முடியை வைத்துக்
குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித்
தென்திசை யிலங்கை நோக்கிக்
கடல்நிறக் கடவு ளெந்தை
அரவணைத் துயிலு மாகண்டு
உடலெனக் குருகு மாலோ
என்செய்கேன் உலகத் தீரே" (19)

என்று இந்நூல் புனைகிறது. இறை உருவில் ஈடுபட்ட ஆழ்வார். திருவரங்கக் கோயிலின் பெருமையை 'அணியனார் செம்பொனாய அருவரை யனைய கோயில்' (21) என்று பாடுவர். மூர்த்தி, தலம் என்ற இரண்டின் சிறப்பையும் பாசுரங்களில் பாடி வழிபாட்டுக்குரிய களத்தை உணர்த்துகிறார், ஆழ்வார்.

திருவரங்கத் திருகோயிலைப் பாடும் திருப்பள்ளி யெழுச்சிப்பாசுரம் 'இலங்கையர் கோன் வழிபாடு செய்கோயில்' (5) என்று அக்கோயிலைச் சிறப்பிக்கிறது. இராமாயணக் கதையைத் தொடர்புபடுத்திய புராண வரலாறு இக்கோயிலுக்குத் தொண்டரடிப் பொடியாழ்வாரால் உரைக்கப் பெறுகிறது; இது திருமாலையில் சொல்லப் பட்டிலது.

## அரங்கன் அருளலும் அடியார் கண்டுருகலும்

திருவரங்கத்துப் பெரிய பெருமாளை வணங்கும் தொண்டர்களில் அன்பைப் பலபாசுரங்களில்

தொண்டரடிப் பொடியாழ்வார் காட்டுகிறார். திருமாலைக் கண்டுருகும் தொண்டர்கள் அன்பு மீதூ ரப்பெற்று விளங்குகின்றனர்; அன்பு மிக்க அடியார் களின் கண்களிலே அரங்கன் காட்சி அவர்கள் உள்ளத்தைக் கசிய வைத்துக் கண்ணீரை வரவழைக் கின்றது. அடியார்களில் சிறந்த தொண்டரடிப் பொடியாழ்வார், அரங்கனைக் கண்டு கண்ணீர் மல்கி நிற்கின்றார். அன்பு கொண்டார் தொடர்பை அவர்தம் கண்ணீர் வெளிப்படுத்துவதியற்கை யன்றோ?

"கனியிருந் தனைய செவ்வாய்க்
  கண்ணனைக் கண்ட கண்கள்
பனியரும் புதிரு மாலோ
  என்செய்கேன் பாவியேனே" (13)

தொண்டரடிப் பொடியாழ்வார் தம் அனுபவமாகக் கண்ணனைக் கண்டு கண்ணீர்விட்டு உருகியதை இப்பாசுரத்தில் உணர்த்துகின்றார். தானே அனுபவித்த தெய்வக் காட்சியின் மெய்ப்பாட்டை ஆழ்வார் தற்கூற்றாக இங்கே அனுபவிக்கிறார்.

அரங்கனைக் கண்ட கண்கள் அவன் அரவணை யில் துயிலும் அழகைக் கண்டு 'உடலெனக் குருகு மாலோ? என்று உருகுகின்றன (19); திருவரங்கத்திருக் கோயிலில் பெரிய பெருமாளைக் கண்டு நின்றமையைத் திருமாலை விவரிக்கின்றது.

திருவரங்கப் பெருமானைப் பணிந்து மகிழும் தொண்டரடிப் பொடியாழ்வார். தான் அரங்கனை ஏத்த முடியவில்லை என்றும் அரங்கனே தெய்வம் என்று எண்ணும் மனமுமில்லை என்றும் வருந்து கிறார். தொண்டரடிப் பொடியாழ்வார் தன் நெஞ்சம் இரும்பு போன்றது என்று எண்ணுகிறார். வணங்குகிற அடியவன் நெஞ்சம், நெஞ்சக்கன கல்லாகும்; வணங்கப் பெறும் இறைவன், கொடிய நெஞ்சையும் கரைய வைத்துவிடுவான். அரங்கனிடத்தில் ஈடுபடாத

*கல்நெஞ்சமுடைய கொடியனும் உருகிடுமாறு அரங் கன் அருள் வடிவாய்த் திகழ்கிறான்; கல் நெஞ்சத்து ஆழ்வாரும் அவனைக் கண்டு அனுபவிக்கின்றார். அரங்கனைத்தான் கண்டமையைக் கண்களைக் கொண்டு ஆழ்வார் காட்டுகின்றார்.*

"விரும்பிநின் றேத்த மாட்டேன்
  விதியிலேன் மதியொன் றில்லை
இரும்புபோல் வலிய நெஞ்சம்
  இறையிறை யுருகும் வண்ணம்
சுரும்பமர் சோலை சூழ்ந்த
  அரங்கமா கோயில் கொண்ட
கரும்பினைக் கண்டு கொண்டேன்
  கண்ணிணை களிக்கு மாறே" (17)

*கண்கள் களிக்குமாறு நாவுக்கு இனிமைதரும் கரும்பாக ஆழ்வார் அரங்கனைக் காண்கிறார். வழிபடாதவரையும் தன் வழிப்படுத்தி வணங்குமாறு செய்யக் கூடியவன் அரங்கப் பெருமான்; விரும்பாத வரையும் விரும்ப வைக்கும் வல்லாளன் அரங்கப் பெருமான். விதியில்லை என்றும் மதியில்லை என்றும் தன்னைப்பற்றிய குறைகளை அடுக்கிக் கொண்டு செல்லும் தொண்டரடிப்பொடி ஈற்றில் அவனைக் கண்களால் கண்டு களிப்படைந்ததாக முடிக்கிறார்.*

## ஏன் பிறந்தேன்?

*பெரியபெருமாள் பள்ளிக் கொண்ட வகை கண்டு தொண்டரடிப் பொடியாழ்வார் அப்பெருமானை எங்ஙனம் மறந்து வாழ்கேன் (23) என்று கேட்கிறார். அரங்கன் அழகுகண்டவர்களைப்படுத்தும் பாட்டாலே தான் ஆழ்வார் ஆற்றாது கலங்குகிறார். அரங்கன் அழகை அனுபவித்துக் கொண்டு அவனுக்கே ஆட்செய்ய வேண்டும் என்றும் பிறருக்குத் தொண்டு செய்யலாகாது என்றும் அரங்கனுக்கு அடித்தொண்டு செய்யாத பிறவி வீணே என்றும் தொண்டரடிப் பொடியாழ்வார் பாடும்போது "எம் பிராற் காட்*

*செய்யாதே யென்செய்வான் தோன்றினேனே"(28) என்று வினவுகின்றார். திருவரங் கனையன்றி வேறுயாரும் தனக்கு உறவில்லை என்றும் வேறு புகலன்றி அவனையே தான் அழைத்துக் கதறுவதாக வும் 'களைகண் ஆர்உளர்' (29) என்றும் வேறுவழி காட்டுவார் இல்லை என்றும் தொண்டரடிப் பொடியாழ்வார் துணிவு பெறுகிறார். திருவரங்கனே தன்னை 'ஆளுடையகோ' (30) என்றும் தாம் அரங்கனை வழிபடுகடவுளாக ஏற்றுக் கொண்ட மையை இவர் உணர்த்துகிறார். ஆழ்வார் திருவரங்கப் பெருமானைத் தரிசிப்பதிலும் திருவரங்கத்திவ்விய தேசத்தில் ஈடுபடுவதிலும் பெரிதும் ஈடுபடுகின்றார். அஃது அவருடைய வாழ்க்கைக் குறிக் கோளாகும்.*

## இனமரபு இல்லாமை

*திருவரங்கப் பெருமானிடத்து ஈடுபட்ட தொண்ட ரடிப் பொடியாழ்வார் வைணவ சோழிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் திருவரங்கப் பெருமானிடத்தில் ஈடுபட்டுத் தான் பிறந்த குடும்ப வழக்கப்படி செய்ய வேண்டிய வைதீகச் சடங்குகளை விடுத்துப் பகவத் கைங்கரியத்தில் ஈடுபட்டதைத் திருமாலையில் உரைக்கின்றார். இதனால் தான் குலமரபுச் சடங்கு களை விடுத்தமையைச் சுட்டிக் காட்டித் திருவரங் கனை வழிபடுதற்குரிய பக்குவமும் தன்பால் இல்லை என்று தன்னடக்கமாக ஆழ்வார் உரைக்கின்றார்.*

"குளித்துமூன் றனலை ஓம்பும்
குறிகொளந் தண்மை தன்னை
ஒளித்திட்டேன் என்கண் இல்லை
நின்கணும் பத்தன் அல்லேன்" (25)

*என்று வேதவேள்வி முறை வழிபாட்டை விடுத் தமையையும் திருவரங்கனிடத்திலே அன்பு காட்டி யமையையும் இப்பாசுரப் பகுதி பேசுகிறது. திருவரங்கப் பெருமானை முழுமையாக நம்பித் தொண்டரடிப் பொடியாழ்வார் அவருக்கே தொண்டரானார்.*

அந்தண்மை தன் பால் இல்லை என்றியம்பிய ஆழ்வார், தான் அரங்கனிடம் அன்பு பூண்டு, பூண்டிருக்கும் வேடமும் பொய் என்றும் நாம் திருமாலிடம் செலுத்துவது மெய்யன்பில்லை என்றும் செப்புகிறார்.

"கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்
தொண்டுக்கே கோலம் பூண்டேன்" (34)

என்பது திருமாலைப் பாசுரப்பகுதி, தொடை யொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடியாழ்வார் என்று உலகோர் கொண்டாடினாலும் தான் வேடதாரித் தொண்டன், என்று இவர் தம்மைச் சொல்லிக் கொள்ளுகிறார். இங்கு இவ்வாறு இயம்பும் இவர், திருவரங்கக் கோயில் வாயிலில் எப்போதும் கிடந்து திருவரங்கனை நினைத்து வாழ்கின்ற தொண்டர் களைப் பாராட்டித் திருவரங்கனை நோக்கி,

"மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை
மிகஉணர்ந்து
ஆம்பரி சறிந்துகொண்டு ஐம்புல னகத்த டக்கிக்
காம்புறத் தலைசிரைத்துன் கடைத்தலை யிருந்துவாழும்
சோம்பரை யுகத்தி போலும் சூழ்புன லரங்கத்தானே" (38)

என்று வினவுகின்றார். கோயில் வாயிலில் பெரியபெருமாளை எண்ணிக் கொண்டு கிடக்கும் பரம பாகவதர்களின் நிலையை ஆழ்வார் 'சோம்பர்' என்பர். பாகவதர்கள் (திருமாலை முதற்கடவுளாகக் கொண்டு வழிபடுவோர்) திருவரங்கத் தொண்டராய்ச் சித்தோபாயமான திருவரங்கப் பெருமானைச் சுவீகரித்து அவ்வெம்பெருமானுடைய அனுபவமே காலம் கழிப்பதாய்த் தமக்கு இதத்தைத் தேடிக் கொள்வதில் சோம்பியிருப்பார்கள். இத்தகை யோரையே திருவரங்கன், பரம பாகவதர் என்று கொண்டு அவர்களை விரும்புகிறான்.

## அரங்கன் விரும்பும் அடியார்

திருவரங்கன் அருள் நிறைந்தமனத் தவனாதலின் அடியாரிடத்து அன்புவைத்துக் கருணை புரிவான். திருவரங்கனுக்குச் சாதி வேற்றுமையோ பிறப்பு வேற்றுமையோ இல்லை. எந்தச் சாதியில் பிறந்தாலும் திருமாலடியாராயின் அவனைத் திருவரங்கன் புறக்கணிக்க மாட்டான். திருவரங்கன் திருவருள் பெற நால் வேதம் ஓதும் அந்தணர் குலத்தில்தான் பிறந்திருக்க வேண்டும் என்பதில்லை. அரங்கன் பாகவதர்களையே விரும்புவான்; அவர்களுக்குத் தனிச்சிறப்புண்டு.

திருமாலிடம் அன்புகொண்டால், அந்த அன்பு கொண்ட அடியாரையே திருமால் விரும்புவர் என்று இவர் வெளிப்படுத்துகிறார். பழுதிலா ஒழுகலாற்றுப் பலசதுப்பேதிமார் (நான்கு வேதங்கற்றவர்கள்) களை நோக்கித் தொண்டரடிப் பொடியாழ்வார் "இழிகுலத் தவர்களே லும்எம்மடி யார்களாகில்/ தொழுமின் நீர் கொடுமின் கொள்மின்" (42) என்று அறிவுறுத்துகிறார்: ஆழ்வார் இன வேறுபாட்டைக் களைந்து திருமாலடி யார்க்கு அறிவுறுத்துகிறார்; ஆதலால் திருவரங்கன் அடியார்க்கு அவனை வழிபடுவதில் இனவேற்றுமை இல்லை என்பது புலனாகும். கொடிய வினை பல செய்து உலகத்து உயிர்களையெல்லாம் கொன்று பாவத்தைச் சேர்த்திருந்தாலும் அவர்கள் அரங்கனைச் சிந்தையிலிருத்திய மனத்தராகில் அவர்களைக் கொடியபாவம் அணுகாது. (40) என்பது திண்ணம். இவ்வண்ணம் திருவரங்கன் வழிபாட்டைத் தொண்ட ரடிப் பொடியாழ்வார் விவரிக்கின்றார்.

## ஆழ்வாரின் தன்னடக்கம்

தம்மை மெய்யடியார் என்று தொண்டரடிப் பொடியாழ்வார் எங்கும் இயம்பிலர். திருமாலை வழிபடத் தமக்குச் சிறிதும் தகுதியில்லை என்பதாகக்

கருதுகிறார். 'தன்னை மார்க்க மொன்றறிய மாட்டா மனிசரில் துரிசனாய மூர்க்கனேன்' (32) என்றும் அரங்கனே உன்னருள் என்னும் ஆசை தன்னால் பொய்யனேன் வந்து நின்றேன் (33) என்றும் உள்ளத்தே உறையும் மாலை உள்ளுவான் உணர்வு ஒன்றில்லாக் கள்ளத்தேன்' (34) என்றும் பாசுரங்களில் தன்னுடைய தகுதியின்மையைப் புலப்படுத்துகிறார். இவர் பாவியேன் (35) என்றும் சொல்லிக் கொள்ளுகிறார். இவ்வாறு இழித்துரைத்துக் கொண்டாலும் திருமால் தமக்கும் தம்மனைய தொண்டர்க்கும் அருள் செய்வான் என்று தொண்டரடிப்பொடியாழ்வார் நம்புகிறார். அடியார்களும் ஆன்றோர்களும் ஆழ்வார் களும் தங்கள் தகுதியை எக்காலத்தும் உயர்த்திப் பேசிக் கொள்வதில்லை; அவ்வாறு பேசுவராயின் அஃது ஆணவத்தின் வெளிப்பாடாகிவிடும். தெய்வத் தின் முன்னர் தாழ்த்திக் கொண்டு வழிபடுவதே அடியார் உயர்வுக்கு வழியாகும். தாழ்நிலையில் வாழும் தம்மைப் போன்ற அடியார்களையும் வாழவைக்கும் அருளுடைமை திருவரங்கன்பால் நிறைந்துள்ளது.

## திகைப்பும் தெளிவும்

சீரிய தொண்டராய்த் திருவரங்கனை மறவாத ஆழ்வார், திருவரங்கனை வழிபட்டும் கைங்கரியம் செய்தும் வாழ்ந்தார். எனினும் அவர் தமக்குத் திருமாலைக் காணும் மார்க்கம் தெரியவில்லையே என்று கவல்கின்றார்.

"கார்த்திரள் அனைய மேனிக் கண்ணனே
உன்னைக் காணும்
மார்க்கம் ஒன்று அறியமாட்டா மனிசரில் துரிசனாய
மூர்க்கனேன் வந்துநின்றேன் மூர்க்கனேன்
மூர்க்கனேன்" (32)

எந்த வழிபாட்டு மரபையும் பின்பற்றாது, திருமாலின் முன்னே 'ஆழ்வார் வந்து நிற்பதாகக்

கூறுகிறார். தெய்வத்தை வழிபடும் போதே, அவனைக் காணவும் அடையவும் அவா மீதூர எந்த நெறியைப் பின்பற்றுவது என்ற திகைப்பு அடியார்க்கு எழுவது இயற்கையாகும். நெறியும் தெரியவில்லை. அரங்கன் மீது கொண்ட அன்புவெறியும் ஒடுங்கவில்லை. அரங்கனைக் காண வேண்டும் என்ற மூர்க்கத்தனமே மேலோங்கி நிற்கிறது. இவ்வாறு பாடிய ஆழ்வார் அவனையே உறவு என்று கொண்டாடி நிற்கிறார்.

அரங்கனையே சார்ந்த தொண்டரடிப்பொடியார், அவனைத் தன் குடும்பத்துப் பெற்றோராரக்கித் தம்மை ஒப்படைக்கிறார். 'திருவரங்கத்துள்ளோங்கும் ஒளி உளார் தாமே யன்றே தந்தையும் தாயுமாவார்' (37) என்று தொண்டரடிப்பொடியாழ்வார் அரங்கனுடன் குடும்ப உறவு பாராட்டுகிறார். அவர் தனக்குத் திருவரங்கப்பெருமான் எளியதோர் அருள் செய்தால் போதும் என்பர். தாயும் தந்தையுமான அரங்கன் தொண்டரடிப் பொடியைத் தன் பையனே என்று அழைக்கவில்லையே என்று அவர் வருந்துகிறார்.

"எளிய தோர் அருளும் அன்றே
என்திறத் தெம்பி ரானார்
அளியன்நம் பையல் என்னார்
அம்மாவோ; கொடிய வாறே" (37)

தாயும் தந்தையுமானவர், தம்மக்களை அழைக்க வேண்டும்; அந்தப்பேறு தனக்குக் கிட்டவில்லை என்று ஆழ்வார் நைகின்றார். 'உறவு மற்றொருவர் இல்லை' (29) என்று அவன் மீது கொண்ட ஆராத காதலை அறைகின்றார். தன்னைப் போல அடியார்களையும் கருதி அவர்களும் அரங்கனை வழிபட்டுய்ய ஆழ்வார் வழிகாட்டுகின்றார்.

## திருமாலடியாராக அவனை நினை

உலகில் பாவம் தருகின்ற ஊனகாரியங்களைச் செய்பவர்கள் பலர்; இத்தகைய பாவிகள் 'தேனுலாம்

துளப மாலைச் சென்னியா' (41) என்று அழைத்துத் திருவரங்கனை வணங்குவராகில், அவர்கள் செய்த பழிபாவம் தொலையும்; அவர்கள் தொண்டராவர். இவர்கள் திருவரங்கனைப் போற்றிப் பகவத் ஸ்வரூபருணர்ச்சி பெற்றமையால் போற்றத் தக்கவர் ஆகிறார்கள். இந்தத் தொண்டர்களைப் போற்று முகமாக ஆழ்வார் 'போனகம் செய்த சேடம் தருவரேல் புனித மன்றே' (41) என்று அவர்களைக் கொண்டாடுகிறார்கள். இவர்கள் அமுது செய்து மிகுந்த பிரசாதம் மற்றையோரைத் தூய்மை பெறும்படி செய்யும் பெருமையுடையதாம். அரங்கன் அடியார் எச்சிலமுதையுயர்த்துத் திருவரங்கன் நினைப்பின் சிறப்பைப் பாசுரம் வெளிப்படுத்துகின்றது.

## திருமாலைத் தொழாதார் இழிவு

வைணவத்தில் திருமாலை அனைவரும் ஒருங்கு கூடிநின்று 'கோஷ்டி' யாக வழிபடுவர். திருமாலை தொண்டர் வழிபடும் போது அவர்களுக்கிடையே சாதிவேற்றுமையோ பொருள் வேற்றுமையோ பதவி வேற்றுமையோ பார்க்கப்படுவதில்லை. இதனால் தொண்டரடிப்பொடியாழ்வார் 'எம்மடியார்களால் தொழுமின் நீர்' என்றும் கொடுமின் கொள்மின் என்றும் வலியுறுத்துகிறார். மண்பதையில் தாழ்ந்தோர் என்று கருதப் பெறுவோர், திருவரங்கன் திருப்பெயரை நினைத்தும் சொல்லியும் வாழ்வாராகில் அவர்கள் சான்றோராய்த் திருமால் தொண்டராவார்; உயர்குலத் தில் பிறந்து வேதம் ஓதிப் பெருமை பெற்ற சாதியந் தணர்களானாலும் அவர்கள் திருமாலடி யார்களைப் பழிப்பராகில் அவர்கள் ஒரு நொடியில் புலையராகி விடுவார்கள் (43) தொண்டரடிப் பொடியாழ்வார், தொண்டர் குலமே தனிக்குலமாதலைக் காட்டுகிறார். திருமாலை வணங்குவோரிடையே சாதி வேறுபாடோ திணை வேறுபாடோ இல்லை என்றும் ஒன்றுபட்டு

*வணங்கினால் பெரும் உயர்வு பெறுவர் என்றும் திருமாலை செப்புகிறது.*

## பிறசமய வெறுப்பும் ஒறுப்பும்

*தொண்டரடிப் பொடியாழ்வார் காலத்தில் வைணவ சமயத்தை இகழ்வோரும் வாழ்ந்தனர்; அவர்களைத் தொண்டரடிப் பொடியாழ்வார் 'வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள்' (8) என்று சுட்டுகிறார். இவ்வாழ்வார் "பிறசமயத்தார் பேசும் நிந்தை மொழிகளைக் கேட்பதே வியாதியாய் முடிந்து போவது உத்தமம்; அவ்வாறன்றி இகழ்ந்தவர்கள் ஓடிப் போகாமல் என் முன் நிற்பார்களாயின் அவர்கள் அஞ்சாது கொலை செய்யும் படியான வல்லமை தனக்கு வேண்டும்; இதுவே செய்யத்தக்கது" என்றும் வைணவத்தை இகழ்வோரை ஒறுக்கவும் வெறுக்கவும் அவர் முனைகின்றார்.*

"வெறுப்போடு சமணர் முண்டர்
விதியில்சாக் கியர்கள் நின்பால்
பொறுப்பரி யனகள் பேசிற்
போவதே நோய தாகிக்
குறிப்பெனக் கடையும் ஆகில்
கூடுமேல் தலையை யாங்கே
அறுப்பதே கருமங் கண்டாய்
அரங்கமா நகரு ளானே" (8)

*இப்பாசுரத்தின் மூலம் திருமாலை இகழும் பிற சமயத்தவர்களின் பேச்சு வைணவர்க்கு நோயைத் தருவதாகிறது என்பர், ஆழ்வார்; இத்தகைய இகழ்ச்சி உரைகளைப் பேசுவோர் தம் தலையை வெட்ட நெஞ்சுரம் தனக்கு வாய்க்க வேண்டும் என்பர். அருளுள்ளமும் தொண்டுக் கைங்கரியமும் வாய்த்த இந்த ஆழ்வார் அயல் சமயத்தார் குறித்துச் சீற்றம் எய்துவது குறிக்கத்தக்கது.*

## வணங்கலும் வழிபடலும்

*திருவரங்களைப் பற்றித் திருமாலையில் பலவாறு பேசிய ஆழ்வார், அப்பெருமானின் பெருமைகளைப் பேசி முடியாது என்று இயம்புவர்; அவனை வணங்குவதே செய்யத்தக்கதாகும் என்பது அவர் துணிவு. "நாம் வணங்கியிருப்பதல்லால் பேசத்தான் ஆவதுண்டோ?" (22) என்பது பாசுரப் பகுதி. வடதடமும் வைகுந்தமும் மதில் துவராபதியும் இடவகைகள் இகழ்ந்திட்டு என்பாலிட வகை கொண்டனையே என்னும் படி நித்தியவாசம் செய்பவன் திருமால் என்று சொல்லிக்கொண்டு வணங்க வேண்டும் என்பது திருமாலை காட்டும் உண்மை.*

*திருவரங்களை வணங்க வேண்டும் என்று ரைத்த ஆழ்வார், திருமாலைக் கைங்கரியம் செய்தும் வாழ்ந்தவர். அது தொடர்பான செய்திகளைப் பாசுரங்களில் பேசவில்லை. திருமாலைத்தான் வணங்கவில்லை என்பதைச் சொல்ல முற்படும் ஆழ்வார், ஒரே ஒரு பாசுரத்தில் மலரிடுதலைச் சுட்டுகின்றார்.*

"போதெல்லாம் போது கொண்டுன்
பொன்னடி புனைய மாட்டேன்
தீதிலா மொழிகள் கொண்டுன்
திருக்குணம் செப்ப மாட்டேன்" (26)

*என்று பாடினார். இதனால் ஒவ்வொரு வேளை வழிபாட்டிலும் மலர்களைத் திருவரங்கன் திருவடிகளில் இடுதலும் சூட்டலுமாகிய மரபைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.*

## விடிகாலைப் பூசை மரபு

*திருமாலையைப் போலத் திருப்பள்ளியெழுச்சி திருவரங்களைப் பாடாது, திருவரங்கனுக்குத் திருப் பள்ளியெழுச்சி பாடுவதாகின்றது. இதனால் திருமாலையைவிடத் திருப்பள்ளி யெழுச்சி திருவரங்கக்*

கோயிலின் விடியற்கால நிலையையும் வழிபாட்டு மரபையும் அறியத் துணை செய்கின்றது.

## திருப்பள்ளியெழுச்சி

தொண்டரடிப்பொடியாழ்வாரின் திருப்பள்ளி யெழுச்சி, திருமாலையைவிடக் குறைந்த எண்ணிக்கை யிலே பாசுரங்களையு டையது. இஃது அரவணையில் துயிலும் அரங்கத்தப்பனை 'அரங்கத்தம்மா பள்ளி யெழுந்தருளாயே' என்று பலகாலும் திருப்பள்ளி யுணர்த்திப் பாடுகிறது. 'தொண்டரடிப் பொடியென்னு மடியனை அளியன் என்றருளி உன்னடியார்க் காட்படுத்தாய் என்று பாகவத பரியந்தமான கைங்கரியத்தைக் கொண்டருள வேண்டுகிறார் ஆழ்வார். தொல்காப்பியரின் புறத்திணை மரபு தழு விய துயிலெடை நிலை என்ற துறையே, திருப்பள்ளி யெழுச்சியாக மலர்ந்துள்ளது. தொண்டர டிப்பொடி யாழ்வார், திருப்பள்ளி யெழுச்சிப் பிரபந்தத்தில் திருவரங்கத்து நிகழும் விடிகால வழிபாட்டைப் பற்றிய செய்திகளையே உரைக்கின்றார். திருக்கோயில்களில் ஒருநாளில் பலமுறை பூசையும் திருவாராதனமும் நிகழும்; அவற்றில் முதற்கண் செய்யப் பெறுகிற பூசைமரபு திருப்பள்ளியெழுச்சியாம், அதனால் ஆழ்வார் பாசுரங்களில் புலரியம் போதையே புனைகின்றார்.

## காலைப்புனைவும் மலர்ப்புனைவும்

இப்பாசுரங்களில் காலையில் கிழக்குத் திசையில் கதிரவன் எழுதல், மலர்கள் மலர்தல், வானவரசர்கள் வந்து கூடுதல், முரசம் கடலைபோல் முழங்குதல் ஆகியன பேசப்படுகின்றன. தொண்டரடிப்பொடியார் திருவரங்கப் பெருமாளைப் பலவாறாகப் புனைந்து பள்ளியெழுந்தருளுமாறு வேண்டுகிறார். முதல் நான்கு பாசுரங்களில் புலரிப்பொழுது பற்றிய புனைவுகளே இடம் பெற்றிருக்கின்றன. ஐந்தாம் பாசுரம், கங்குல்

போய்ப் புலரியம் போது வந்தபோது "களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த அலங்கலந்தொடையல் கொண்ட டியிணை பணிவான்" (5) அமரர்கள் புகுந்தமையைத் தெரிவிக்கிறது. தேவர்கள் மாலை கொண்டு செல்லுதல் அறியப்பெறும்.

## தேவர் குழுமி நிற்றல்

திருவரங்கப் பெருமான் பள்ளிகொண்ட கோயில் வாயிலிலே பன்னிரு ஆதித்தியர், ஏகாதச ருத்திரர், ஆறுமுகன், வசுக்கள் முதலிய தேவர்கள் வந்து நெருக்கி நிற்கின்றனர். தேவர்களுடன் அவர்களுடைய பரிவார மும் (7) வாசலில் காத்துக்கிடக்கின்றன. அவண கந்தர்வர் கூட்டம் நெருக்க வித்தியாதர்கள் நூக்க இயக்கர்கள், கூட்டத்தில் மயங்கினர். இவ்வாறு விடியற் போதிலே, திருவரங்கனைப் பள்ளியெழுந்தருளச் செய்ய அனைவரும் காத்துக் கிடக்கின்றனர்.

திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங்கள் ஒவ்வொன்றிலும் திருவரங்கப் பெருமானைத் துயிலெழுப்பிடப்பலரும் அவன் கோயில் வாயில் முன்னர் வரிசையாக நிற்கின்றனர் என்று கூறப்படுகிறது. அனைவரும் கலந்து கூட்டமாகத் 'திருவடி தொழுவான் மயங்கினர்; அந்தரம் பாரிடம் இல்லை' (6) இவ்வாறு திருமாலை வணங்கத் தேவர்கள் குழுமியிருக்கின்றனர்; அவர்கள் வாளாநில்லாது வாத்திய இசை முழங்க நிற்கின்றனர்.

## ஆடலும் பாடலும்

திருப்பள்ளியெழுச்சியின் போது, தெய்வத்திருமுன் கீத வாத்திய நிருத்தம், அல்லது 'கொட்டாட்டுப் பாட்டு' நிகழ்வதாகத் தொண்டரடிப் பொடியாழ்வார் செப்புகின்றார். திருக்கோயில்களில் நிகழும் ஒவ்வொரு வேளை வழிபாட்டிலும் கருவி இசை, பாட்டு, ஆட்டம் ஆகியன நிகழும்.

"புரவியோ டாடலும் பாடலும் தேரும்
குமரதண் டம்புகுந் தீண்டிய வெள்ளம்
அருவரை யனையநின் கோயில்" (6)

*திருப்பள்ளியெழுச்சிப் பூசையில் தேவர்கள் வந்து கோயில் முன் ஆடலொடு பாடல் நிகழ்த்தித் திருவரங்கன் காட்சிக்காகக் காத்து நிற்கின்றனர்.*

## இன்னிசை முழக்கம்

*திருப்பள்ளியெழுச்சியின் ஒன்பதாம் பாசுரம், திருவரங்கப் பெருமானுக்கு விடி காலைப் பொழுதில் இன்னிசைக் கருவிகள் ஒலிப்பதை ஆழ்வார் வெளிப்படுத்துகிறார். கின்னரர், கருடர், கெந்தர்வர் ஆகியோர் இசைக் கருவிகளை முழக்கி இன்னிசை எழுப்புகின்றனர். தண்ணுமை, ஒன்றைத் தந்தியை யுடைய எக்கம் அல்லது தாளம், மத்தளம், யாழ், குழல், முழவம் ஆகிய கருவிகள் ஒலிக்கின்றன. மாதவர், வானவர், சாரணர், இயக்கர், சித்தர், ஆகியோர் அரங்கன் திருவடிகளைத் தொழக் காத்திருக்கின்றனர். இராப்பொழுது பள்ளிகொண்ட திருவரங்கன், திருத்தொண்டர்களுக்குக் காட்சி கொடுக்க 'நாளோலக் கத்திற்கு' எழுந்தருளுமாறு ஆழ்வார் வேண்டுகின்றார்; நாளின் தொடக்கத்தில் திருவரங்கனைத் துயி லெழுப்பிக் காட்சி கொடுக்கக் கொலுமண்டபத்திற்கு வருமாறு ஆழ்வார் கூறுகிறார். திருமாலை எனும் பிரபந்தத்தில், ஆடலுடன் பாடல் முழங்குதல் பற்றிய குறிப்புக் காணப்படவில்லை. திருவரங்கன் வழி பாட்டில் இசைக் கருவிகள் இடம் பெற்றமையை இப்பாசுரம் காட்டுகிறது.*

## புலரிப்போது உபசாரங்கள்

*திருவரங்கன் பள்ளியெழுதற்குப் பலரும் காத்துக் கொண்டு நிற்பதைக் கூறிய தொண்டரடிப் பொடியாழ்வார், யார் யார் என்ன என்ன வைத்துக் கொண்டிருக்கின்றனர் என்றும் பாடலில் பாடுகிறார்.*

"வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலையொண் கண்ணாடி முதலா
எம்பெருமான் படிமக்கலம் காண்டற்கு
ஏற்பன வாயின கொண்டு நன் முனிவர்
தம்புருநாரதர் புகுந்தனரிவரோ....." (8)

*என்ற பாசுரப்பகுதி இங்கு நோக்கத்தக்கது. திருவரங்கப் பெருமானுக்குச் சமர்ப்பிப்பதற்குப் பரிமளம் மிகுந்த வாயுறையும் (அறுகம் புல்லும்) சங்கநிதிகளும் பதுமநிதிகளும் வானவர்கைகளிலே வைத்திருக்கின்றனர். காமதேனு ஒளிபொருந்திய கண்ணாடி முதலானவற்றைப் பள்ளியெழும் அரங்கன் காண்பதற்கு வைத்திருக்கின்றது. நல்முனிவராய தும்புருநாரதர் ஆகியோர் படிமக்கலங்களை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றனர். இவ்வாறு பலரும் வந்திருக்க இருள் நீங்கிப் பொழுது புலர்ந்தது. புலரிப்பொழுது வழிபாட்டில், திருவரங்கனுக்கு நடக்கின்ற வழிபாட்டு மரபுகளைத் தொண்டரடிப் பொடியாழ்வார் 'படிமைக்கலம் காண்டற்கு' என்று உரைக்கின்றார். வழிபாட்டில் பல்வேறு உபசாரங்கள் செய்ததை இதனால் உணர முடியும்.*

## மலர்த்தொண்டு செய்யும் தொண்டரடிப்பொடி

*தொண்டரடிப்பொடியாழ்வார் திருப்பள்ளி யெழுச்சிப் பாசுரங்களில், புலரியம் போதாகிய நாளின் தொடக்கமான முதலில் நடக்கும் வழிபாட்டையும் புலரியம் போதையும் புனைந்து பாடுகிறார். பள்ளியெழுச்சியின் ஈற்றுப் பாசுரத்தில் தொண்டரடிப் பொடியாழ்வார், திருவரங்கனைத்தரிசிக்கப் புலரியம் போதே வந்து காத்திருப்பதாகவும் தனக்கு அருள் செய்து ஆட்கொள்ள வேண்டும் என்றும் பாடுகிறார். 'தாமரைகள் மலர்ந்தன; கதிரவன் கடலில் தோன்றி விட்டான்; மகளிர் நீராடிச் சுரிகுழல் பிழிந்து உதறித் துகிலணிந்தனர் என்று புலரியம் போதைப்*

புனைகின்றார். இப்பாடலில் 'தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து தோன்றிய தோள் தொண்டரடிப் பொடி என்னும் அடியன் (10) என்று தன்னைப் பற்றிப் பேசுகிறார். திருவரங்கத் திருக்கோயில் வழிபாட்டில் தான் செய்த கைங்கரியத்தைத் திருத்துழாய் மாலையுடன் பூக்குடலையும் (கூடை) என்ற தொடரின் மூலம் தொண்டரடிப் பொடியாழ்வார் கூறுகிறார். இவர் திருநந்தவனத் தொண்டு செய்தார் என்பதைக் காட்டும் அகச் சான்றாக இப்பகுதி விளங்குகிறது.

## துளசி மாலைக் குறிப்பு

*திருவரங்கப் பெருமானுக்கு அணிவிக்கத் துளசி மாலை கொண்டு செல்லுதலைத் தொண்டரடிப் பொடியாழ்வாரே நவிலுகின்றார். முதலாழ்வார்களோ திருமழிசையாழ்வாரோ துளபத்தொடையைத் திருமாலுக்கு அணிவிக்கக் கொண்டு செல்லுவதாகக் கூறிலர்; அவர்கள் திருமால் துளபமாலை அணிந்து வீற்றிருப்பதாகவே பாடுகின்றனர்; அடியார்கள் மலர்களைக் கொண்டு செல்லும் போது துளப மாலையைக் கொண்டு செல்லுவதாகச் சொல்ல வில்லை.*

*திருமாலை, திருப்பள்ளியெழுச்சி என்னும் இரண்டு பிரபந்தங்களாலும் திருவரங்கத் திருக்கோயில் மரபை அறிந்து கொள்ள இயலுகிறது.*

## தொகுப்புரை

*திருமாலைப் பிரபந்தத்தால் திருவரங்கன் திருப்பெயரையும் அவன் கிடந்தருளிய திருவரங்கப் பெயரையும் சொல்லியும் நினைத்தும் உய்திபெற முடியும் என்பதும் அவனை நினைத்தாலும் வணங் கினாலும் பாவம் பறந்தோடும் என்பதும் அவனை இகழ்வோரைத் தொண்டர் ஒறுக்க வேண்டும்*

என்பதும் அவனை மலரிட்டு வணங்குக என்பதும் அறியப்பெற்றது. தூபம் தீபம் காட்டல், திருமால் திருமுன் திருவிளக்கு ஏற்றல், திருவாரதனம் படைத்தல் போன்ற வழிபாட்டு மரபுகளைத் திருமாலை தெரிவிக்க வில்லை.

திருமாலை என்ற பிரபந்தம் எந்தக் குறிப்பிட்ட காலத்து வழிபாட்டைப் பற்றியும் விதந்து பேசவில்லை. திருப்பள்ளி யெழுச்சிப் பிரபந்தம் காலை வழி பாட்டை அறிந்துகொள்ளத் துணையாகிறது. கதம்ப மாலையை வைத்துக் கொண்டு திருமாலை அடிபணிய அமரர் காத்து நிற்கின்றனர். திருவரங்கன் பள்ளி கொண்டிருந்து எழுங்காலத்தில் பல்வேறு இசைக் கருவிகளும் நடனமும் நடைபெறுகின்றன. இந்த மரபு பிற்காலச் சோழர் ஆட்சியில் திருக்கோயில்களில் பெரிய அளவில் காணப்பட்டது. இதனைத் திருமாலை சுட்டவில்லை. பள்ளியெழுந்த திருவரங்கப் பெருமானுக்குப் படிமக்கலம் காட்டுதல் முதலிய உபசாரங்கள் நடைபெறும். தொண்டரடிப் பொடியாழ்வாரே திருவரங்கனுக்குத் துளசி மாலை கட்டி வழங்கி வந்திருக்கிறார். இந்தக் குறிப்புகள் திருப்பள்ளியெழுச்சியில் மட்டுமே காணப்படுகின்றன. திருவரங்கத் திருக்கோயிலில் பள்ளிகொண்ட திருவரங்கப் பெருமான் பள்ளி எழுந்து மண்டபத்திற்கு வந்து தொண்டர்க்குக் காட்சி அளிக்கின்றான். திருப்பள்ளியெழுச்சி, கோயில் வழிபாட்டில் ஒருவேளை மட்டும் நடப்பனவற்றைப் பேசுவதால் சற்று விரிவாகத் தொண்டர் திருவரங்கனைக் காணக் காத்திருப்பதை விவரிக்கிறது; எனினும் இரண்டு பிரபந்தங்களாலும் திருவரங்கத் திருக்கோயிலில் நடைபெற்ற வழிபாடுகளை விரிவாகத் தெரிந்து கொள்ள முடியவில்லை.

# திருப்பாணாழ்வார் வழிபாட்டு மரபு

## பாணர் வாழ்வு

*பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான திருப்பாணாழ்வார், உறையூரில் பிறந்தவர்; இவர் பிறந்தது நெற்பயிரில் என்பர். இவர் வளர்ந்தது பஞ்சம சாதியான பாணர் மரபிலாகும். இப்பெரியார் தாம் சார்ந்த குலத்துக் கேற்ப யாழ்ப் பாடலில் மிக்க தேர்ச்சி பெற்றிருந்தார்; அதனால் பாணர் குலத்தலைவர் என்ற கருத்தமைய இவரைத் 'திருப்பாணர்' என்று போற்றுவர். திருவரங்கப் பெருமானுக்குப் பாடல் திருத்தொண்டு செய்ய வேண்டும் என்ற விருப்பம் திருப்பாணாழ்வாருக்கு இருந்தது. தாம் சார்ந்த குலம் தாழ்ந்த குலம் என்பதால், இவர் திருவரங்கத்துள் திருமாலைப்பாடக் காலடி எடுத்து வைத்திட அஞ்சி நின்றார். இதனால் தென்காவிரியின் தென்கரையில் திருமுகத்துறைக் கெதிரில் யாழுங்கையுமாக நின்று கொண்டு திருவரங்கனைத் திசை நோக்கித் தொழுது பாடி வாழ்ந்துவந்தார். பின் திருவரங்கன் திருவருளால் உலோகசாரங்க முனிவர் தம் திருத்தோளில் வீற்றிருந்து திருவரங்கத்தை அடைந்தார். முனிவர், திருபாணாழ்வாரைத் தன் தோள்மீது எழுந்தருளச் செய்து திருவரங்கநாதர் திருமுன்பு கொண்டு சென்று விடுத்தார். இவ்வாறு திருவரங்கப் பெருமானைத் தரிசிக்கும் பேறு பெற்றார் திருப்பாணாழ்வார்.*

## திருவரங்கன் தெரிசனம்

*திருவரங்கனைக் கண்ட திருப்பாணாழ்வார் அரங்கன் அடி முதல் தலைவரையுள்ள அவயவங்களையெல்லாம் ஒவ்வொன்றாகக் கண்டு பேருவகை அடைந்து பாடுகிறார். ஒரு பொருளைக் கண்ணாற் கண்டு அனுபவிக்க முற்படுகின்றபோது ஒவ்வொரு உறுப்பாகக் கண்டு அனுபவிப்பது உலகத்தியற்கை; இதுதான் மானிட இயல்பு. 'அமலனாதிபிரான்' என்று பத்துப் பாசுரங்களிலும் ஒவ்வொருபாசுரத்திலும் அரங்கன் அவயத்தைத் திருப்பாணவாழ்வார் அனுபவித்துப் பாடுகிறார். தெய்வ வழிபாட்டில் முதல் நிலை தெய்வத்தைக் கண்ணால் காண்பதாகும். இவர் முதற்கண் 'கமலபாதம்வந்து' (1) என்று திருவடித் தாமரை தம்மை நோக்கி வந்தமையைக் கூறினார். அடுத்த பாசுரத்தில் அரங்கனின் ஆடை ஆழ்வாரின் மனத்தைக் கவர்கிறது. 'அரைச்/ சிவந்த ஆடையின் மேல் சென்றதாமென் சிந்தையே(2) ஆடையின் அழகில் ஈடுபட்ட ஆழ்வார் அதன் அழகில் மீண்டும் ஆழ்கிறார்.*

"அந்திபோல் நிறத் தாடையு மதன்மேல்
அயனைப் படைத்த தோரெழில்
உந்திமேலதன் றோஅடி
யேனுள்ளத் தின்னுயிரே" (3)

*ஆடையும் கொப்பூழில் மலர்ந்த தாமரையில் பிரமன் இருக்கும் காட்சியும் ஆழ்வாருக்குத் தெரிகின்றன. மானிடர்களைப் போலத் தெய்வங்களுக்கும் ஆடை அணிவிக்கும் மரபை இக்குறிப்புத் தருகிறது. அடுத்து வயிற்றில் கட்டிய உதரபந்தம் உள்ளத்தில் நிற்கின்றது (4) பின் சற்று நிமிர்ந்து திருப்பாணாழ்வார் அரங்கனை நோக்கிட அரங்கன் கழுத்தில் கிடந்து மார்பில் அழகு செய்யும் ஆரம்' (5) திருப்பாணாழ்வாரை ஆட்கொண்டு கவருகிறது. மார்பழகில் மயங்கிய ஆசிரியர் கண்டத்தழகில் மனத்தைப் பறிகொடுத்து.*

"அண்ட ரண்டபகி ரண்டத்தொரு மாநிலம்
எழுமால் வரை, முற்றும்
உண்ட கண்டங்கண் டீரடி
யேனை உய்யக் கொண்டதே" (6)

என்று திருமாலின் கண்டத்தை ஆழ்வார் புனைகின்றார். சிவனுடைய நீலகண்டம் போலத் திருமாலின் கண்டமும் புகழ்ச்சிக்குரியதாகிறது.

## உள்ளங் கவர்ந்த கொள்ளை அழகு

திருவரங்கப் பெருமானை இரு கண்களால் ஆரக்கண்ட திருப்பாணாழ்வார், அரங்கனின் கண்ணழகிலும் திருமேனி அழகிலும் மனங்கொடுத்து மயங்கி நிற்கின்றார். திருவாயழகில் ஈடுபட்டு 'ஐயோ' என்று மனத்தைப் பறிகொடுத்து உணர்ச்சி வயப்படுகின்றார். "செய்ய வாய் ஐயோ" என்னைச் சிந்தை கவர்ந்ததுவே'' (7) என்பது பாசுரஅடி. திருவாய்க்கு அடையாகச் சொல்லத் தமிழில் எத்தனையோ சொற்கள் உள்ளன. அவற்றில் ஒன்றாலும் புனையாது 'ஐயோ' என்று ஓரிடைச் சொல் பெய்து வாயழகின் மாட்சிமையையும் அத்திருவாயின் அழகில் மனம் பறிகொடுத்ததையும் ஆழ்வார் அனுபவித்துரைக்கிறார். திருவரங்கனுடைய பெரிய கண்கள் என்னைப் பேதைமை செய்து விட்டன என்பது அமலனாதிப்பிரான் பிரபந்தத் துணிபு. கருத்தை உணர்த்துவது கண்ணன்றோ? அரங்கன் திருவாயழகு போலத் திருமேனி அழகும் திருப்பாணரை மயங்க வைத்தது.

"கோல மாமணி யாரமும் முத்துத் தாமமும்
முடிவில்லதோ ரெழில்
நீல மேனி ஐயோ; நிறைகொண்டதென்
நெஞ்சினையே" (9)

உடலழகை அணிகலன்களின் கவினொடு இணைத்தும் நீல நிறத்தோடும் கண்டு திருப்பாணர்

தன் நிறையைக் கொண்டது என்று கூறுகிறார். பெண்களின் கற்பை 'நிறை' என்பர். ஆனால் இங்கு இச்சொல்லை ஆழ்வார் 'மாட்சிமை' என்ற பொருளில் ஆளுகின்றார். தான் உள்ளம் பறிகொடுத்துத் திருவரங்கனால் எல்லாம் இழந்தமையை இவ்வாறு இயம்புகிறார். காணாததைக் கண்டது போலத் திருப் பாணர் திருவரங்கன் உடலுறுப்புகளை ஒவ் வொன்றாகக் கண்டு தம் கருத்தையும் மனத்தையும் பறிகொடுக்கிறார். உயர்ந்த பொருள்களைக் கண்ட ஒருவன் இழிந்த பொருள்களை நாடமாட்டான். அதனால் எக்காலத்தும் சிறந்தவனும் உயர்ந்தவனு மான திருமாலைக்கண்ட ஆழ்வார் அவனை 'அழகு' என்று பாடிப் பரவசப்படுகிறார். அமுதத்தைப் போல அவன் சாவாமையும் மூவாமையும் தரக்கூடியவன், அதனால் 'அமுதினைக் கண்ட கண்கள் மற்றொன் றினைக் காணாவே' (10) என்று திருமாலின் அருள்தரும் நிலையையும் அருட்பயனையும் சுட்டிப்பாடுகிறார். உலோக சாரங்க முனிவர் கருணையால் அரங்கன் திருமுன் சென்ற திருப்பாணாழ்வார், திருவரங்கனை முதற்கண் கண்டு தான் அனுபவித்த வகையை இவ்வாறு பாடுகிறார்.

## உள்ளம் உருக்கும் உயர் வழிபாடு

தான்பாடிய பத்துப் பாசுரங்களிலும் ஆழ்வார் திருவரங்கனை அனுபவித்து மகிழ்கிறார். மலரிட்டு விளக்கு ஏற்றி வழிபடுமாறு திருமாலைக் கண்டுருகி மகிழ்வது ஒருவகையான வழிபாடாகும். தான் பாணர் குலத்தைச் சார்ந்தமையால் திருக்கோயிலில் நடை பெறும் வழிபாட்டு மரபுகளைத் திருப்பாணாழ் வார் கண்டுணர முடியவில்லை; திருக்கோயிலுக்குள் போகும் வாய்ப்பு உலோக சாரங்க முனிவராலும் திருவரங்கன் திருக்கருணையாலும் கிட்டியமையால் ஒரே வாய்ப்பில்— முதல் வாய்ப்பில்— தான் கற்பனை யால் கண்ட அரங்கன் திருக்காட்சியை இப்போது

கண் குளிரக்கண்டு இவர் பாடுகின்றார். எங்கோ தொலைவில் நின்று யாழொடு பாட்டிசைத்துத் திருவரங்கனை மனமார வழிபட்டவர் திருப்பாணாழ் வார்; இவ்வாறு கருதுவதற்கு ஏற்பப் பாசுரங்களில் திருக்கோயிலைப் பற்றியோ அங்கு நடக்கின்ற வழிபாடுகளைப் பற்றியோ ஆழ்வார் தன் பாடல்களில் பாடிலர். திருவரங்கனைத் திருப்பாணாழ்வார் ஒருநாள் கண்டார்; உள்ளம் பறிகொடுத்தார்; அன்றே உய்திபெற்றார். இதுவே உயர்ந்த வழிபாடு. திருவரங்கப் பெருமானைக் கண்குளிரக் கண்டு மனம் நிறையப் பாடுவது உயர்ந்த வழிபாட்டின் முதற்படியாகும்.

## திவ்விய தேசமும் அடியார் பெருமையும்

*திருவரங்கத்தரங்கனை வணங்கும் திருப்பாணாழ் வார் ஒரு பாசுரத்தில் திருவரங்கத்தை "நீள் மதிளரங்கம்" (1) என்று சுட்டுவர். திருக்கோயிலுக்குள் போகும் வாய்ப்பில்லாத இவர் திருவரங்கத்தின் மதிளைக் கண்டு ஊருக்குப் புறத்தே நின்று கண்டு மதிள் சூழ்ந்த திவ்விய தேசத்தையே காண்கின்றார். அவர் கோயிலைக் கூடச் சுட்டவில்லை.*

*திருவரங்கப் பெருமான் பண்பியல்புகளை 'அமலனாதிபிரான்' என்ற முதல் பாசுரத்திலேயே 'விமலன்' என்றும் 'நிமலன்' என்றும் இயம்புகிறார் (1) வைணவ சமயம் வைணவத்தொண்டர்க்குத் தலைமை நல்கிச் சிறப்பிக்கும் தகைமையது. திருமாலடியார்க்குச் செய்யும் தொண்டே மிகமிகச் சிறந்தது. திருமால் அடியார்களுடைய குற்றங்களைக் காண்கின்ற குற்ற மில்லாதவன்; எனவே அவன் தன்னை 'அடியார்க்கு என்னை ஆட்படுத்த விமலன்' (1) என்பர்; திருவரங்கன் திருப்பாணாழ்வாரைத் தனக்கு அடிமைப்பட்டவன் என்னாது தன் தொண்டருக்கு ஆட்படுத்தவன் என்று கூறியதாகக் கூறுவது ஆழ்வாரின் தொண்டு மனப் பான்மையைக் காட்டுவதாகும். ஆழ்வார் திருவரங்கத் தரங்கன் திருவேங்கட மலையில் எழுந் தருளியவன் என்று இன்னொரு திவ்விய தேசத்தையு முரைப்பார்.*

## அரங்கன் தானேபோந்து அருள்பாலித்தமை

*திருவரங்கப் பெருமானிடம் ஈடுபட்டு வாழ்ந்த திருப்பாணாழ்வார்க்குத் திருமாலே வலிய வந்து அருள் செய்தான்; அரங்கன் தம்மைத் கடைக்கணித்து அருளியதைச் சொல்ல வந்த ஆழ்வார், தாம் மிகுதி யான பழவினையால் பற்றப்பட்டிருந்ததாகவும், அந்தப் பழவினைப் பற்றை அறுத்தவன் திருவரங்கன்; அவனே திருப்பாணாழ்வாரைத் திருவரங்கனிடத்திலே அன்புடையவனாக ஆக்கினான் என்பது இவர் கருத்து; எவருக்கும் கிட்டாத இந்த அரிய பேறு தமக்குக் கிட்டியமை கண்டு ஆழ்வார் வியப்பெய்துகிறார்; அதனால் 'நான் என்ன கோர மாதவம் செய்தேன்' (5) என்று தன்னுடைய தவப் பெருமையைச்சுட்டி வினவுகிறார். பாவங்களின் கொள்கலமாக விள்ங்கிய தன் நெஞ்சைத் திருப்பாணாழ்வார் பாவங்களை ஓட்டிவிட்டுத் திருவரங்கனுக்கு உரியதாக்கினார். திருவரங்க்னைக் கண்ணால் கண்டு மனமார வணங்கிய திருப்பாணாழ்வார் பத்தே பாசுரங்கள் பாடியமையால் திருவரங்கம் திருக்கோயில் வழிபாட்டு மரபுகளைப் பெரிதும் பாடவாய்ப்பில்லை. அவருக்கு நாள்தோறும் திருக்கோயிலுக்குள் சென்றுவரும் வாய்ப்பின்மையால் கோயில் வழிபாட்டு மரபுகள் அவர் கருத்தில் பதிந்தில.*

## திருவேங்கடச் சந்தி

*திருவரங்கத்தில் அரவணையில் பள்ளி கொண்டிருக்கும் பெருமாளைப் பாடும் திருப்பாணாழ்வார், திருவேங்கடத்தைச் சுட்டும் போது அங்கு நிகழும் வழிபாட்டைச் சுட்டுகிறார். இவர் திருவேங்கடவனைக் கண்டு வணங்கியதாக வரலாறு கூறவில்லை. முன் வாழ்ந்த ஆழ்வார்களின் பாசுரங்களின் வழி அறிந்து இவ்வாறு கூறுகிறார் என்று கொள்ள வேண்டும்.*

"மந்திபாய் வடவேங்கட மாமலை
வானவர்கள்
சந்திசெய்ய நின்றா னரங்கத் தரவின்
அணையான்" (3)

*இப்பாசுரத்தால் திருவேங்கட மலையில் தேவர்கள் சந்தி செய்கின்றனர் என்றும் பூக்களைக் கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவன் திருவேங்கடவன் என்றும் திருப்பாணாழ்வார் புலப்படுத்துகிறார். சந்தி என்பது 'ஆராதநம்' என்பர் உரையாசிரியர். இதற்கு 'வணக்கம்' என்றும் பொருள் உண்டு. இக்குறிப்பும் விரிவானதோ விளக்கமானதோ அன்று, இந்த ஒரு பாசுரமே வழிபாட்டு மரபான சந்தியை உரைக்கிறது.*

## மானச வழிபாடு

*திருப்பாணாழ்வார் திருக்கோயிலில் நடைமுறையிலிருக்கும் வழிபாட்டு மரபுகளை உற்று நோக்கும் ஆர்வமுடையவராகவோ உரிமையுடையவராகவோ இருந்திருப்பின், பாசுரங்களில் அத்தகையவற்றில் சிலவற்றையேனும் குறித்திருப்பர். பலயாண்டு திருவரங்க வாழ்வு பெற்றும் திருவரங்கனைப் பாடும் பேறு பெற்றும் நெடுங்காலமாக அவனைக் கண்ணால் கண்டுருகும் வாய்ப்பற்றவராய் இவர் வாழ்ந்திருக்கிறார் திருவரவணையில் பள்ளி கொண்ட திருவரங்கனைக் கண்ட போது உள்ளமுருகி உணர்ச்சி வயப்பட்டு அவனழகு கண்டு இவர் ஈடுபட்டுள்ளார். அரங்கன் அழகில் திளைத்து எல்லையில்லாப் பேரின்பம் எய்தி அதனையே தன்னுடைய வழிபாட்டு மரபாகப் பின் பற்றியிருக்கிறார். எல்லாவற்றையும் துறந்து அரங்கனை எண்ணும் உள்ளமமைவதிலும் வேறு உயர்ந்த வழிபாடு என்ன இருக்க முடியும்? திருப்பாணாழ்வார் தாம் துய்த்த—பின்பற்றிய—வழிபாட்டு மரபையே இங்கும் பேசுகிறார்; திருவேங்கடத்தைச் சுட்டும் போது மட்டும் தேவர்கள் சந்தி செய்தலைக் கூறுகிறார். இதுகாறும் விளக்கியவற்றால் திருப்பாணாழ்வாரின் வழிபாட்டு மரபு இறைவனைக் கண்ணாரக் கண்டு கருத்தில் இருத்தி எல்லாம் எய்துவதே என்பது விளங்கும்.*

# அன்றும் இன்றும்

## வெந்நீரும் விளக்கொளியும்

பெரியாழ்வார் பெருமாளுக்கு வெந்நீரில் திருமஞ்சனம் செய்வதாகக் குறிப்பிடுகிறார். சிவன் கோயில்களிலும் பிறகோயில்களிலும் குளிர்ந்த நீரில் அபிடேகம் செய்யப்பெறும். ஆழ்வார் கூறியாங்குத் திருவரங்கத்தில் திருமஞ்சனம் வெந்நீரிலேயே செய்யப் பெறுகிறது. இன்றும் வெந்நீரைக் காயவைத்து இளம் சூடாகச் சரிபார்த்த பின்னர் திருமஞ்சனம் நடைபெறு கிறது. இது ஆழ்வார்களின் மங்களாசாசனத்தை ஒட்டித் திருக்கோயிலில் ஏற்பட்ட நடைமுறையாகும்.

எல்லா வைணவ திவ்விய தேசங்களிலும் அங்கு அங்கு எழுந்தருளிய தெய்வங்களின் பெயர்களைத் தமிழ்ப் பெயர்களாகவே ஆழ்வார்கள் அருளிச் செய்திருக்கின்றனர். இன்றும் இந்தப் பெயர்களாலேயே அங்குள்ள மூலவரும் உற்சவரும் அழைக்கப்பெறு கின்றனர். திருமெய்யம் திருமால் 'மெய்ய மலை யாளன்' என்று கூறப்பெறுகிறான். அத்திருப்பதியில் பெருமாளை இன்றும் மெய்யர், என்றே குறிப்பிடு கின்றனர். இது வைணவம் தமிழைப் போற்றும் முறையாகும்.

தெய்வத் திருமுன்னர் திருவிளக்கு ஒளிவீசுதல் என்பது எல்லாத் கோயில்களில் உள்ள நடைமுறை பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் இதனை வலியுறுத்தினாலும் பிற ஆழ்வார் பாசுரங்களிலும்

விளக்கு ஒளிவிடும் மரபு பேசப்படுகிறது. பாசுரக் குறிப்புகளால் கருவறையில் விளக்கு எரிந்த குறிப்பை அறியமுடியவில்லை.

முதலாழ்வார் மூவரும் திருக்கோவிலூர் உலகளந்த பெருமாள் கோயில் கருவறையில் ஒன்று கூடினர் என்ற கருத்தும் அறிஞர்களிடையே உள்ளது. அங்குப்பொய்கையாழ்வாரும் பூதத்தாழ்வாரும் திருவிளக்கேற்ற பேயாழ்வார் எம்பெருமானைக் கண்டார்.

## திருவேங்கடம் – மிகையான செய்திகள்

ஆழ்வார் பாசுரங்களில் திருவேங்கடத்தில் நடக்கின்ற வழிபாடு பற்றிய குறிப்புகளே மிகுதி. அங்கு முனிவர்கள் புகை போடுவதற்காக (தூபம்) நெருப்புக் கொண்டு செல்கின்றனர் என்று முதலாழ்வார் சுட்டுகிறார்கள். அங்குத் திருஆராதனத்தோடு குடை கொண்டு செல்வதாகத் திருமழிசையாழ்வார் குறிப்பிடுகின்றார். இன்றும் திருவேங்கட மலையில் பூசாகாலங்களில் குடைகொண்டு செல்லுதலைக் காணமுடிகிறது.

இன்று திருக்கோயிலில் கற்பூரம் காட்டும் பழக்கம் உள்ளது. அதற்கு முந்திய காலங்களில் பல்வேறு நெய்களால் தீபம் ஏற்றும் பழக்கம் இருந்திருக்கிறது. ஆழ்வார்கள் எந்த எண்ணெயால் விளக்கு ஏற்ற வேண்டும் என்று கூறவில்லை. அவ்வாறு இறைவன் திருமுன்னர் தீபத்தை எடுத்து மூன்று முறை சுற்றித் தீபாராதனைக் காட்டும் பழக்கமும் பாசுரங்களில் சொல்லப்படவில்லை. இறைவழிபாடு நீராடித் தூய்மையாக செய்தல் வேண்டும் என்பதை திருவேங்கட மலையில் உள்ள யானைகளின் வாழ்க்கையைக் கொண்டு காட்டப்படுகிறது.

## நைவேத்தியம்

திருக்கோயில்களில் உணவுபடைக்கும் பழக்கத்தைப் பெரியாழ்வாரும் ஆண்டாளும் மிகத் தெளிவாகக் காட்டுகின்றனர். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாகக் கருதியமையால் அவர் பல்வேறு இனிப்புகளையும் சுவைப் பண்டங்களையும் பாசுரத்தில் குறிக்கிறார். வெண்ணெய், பால், தயிர் ஆகியவற்றோடு அப்பம், லட்டு, காப்பரிசி போன்றவற்றையும் சுட்டுகிறார். இன்றும் திருவேங்கட மலையில் பெரியாழ்வார் கருத்தை ஒட்டித் திருமாலுக்கு இலட்டு உகந்த உணவாகத் திகழ்கிறது. சோறுவகைகளில் அக்கார அடிசிலை ஆழ்வார் உரைப்பர். கும்மாயம் என்னும் பயத்தம் பருப்பின் குழைவு பெருமாளுக்குரிய ஆராதனம் ஆகும். இன்று கும்பகோணம் சாரங்கபாணிப் பெருமாள் கோயிலில் கும்மாயம ஆராதானப் பொருளாக இருக்கிறது. ஆனால் பெரியாழ்வார் இது குடந்தைத் திருக்கோயில் ஆராதனப் பொருள் என்று குறிப்பிடவில்லை. அழகர் மலையைப்பாடும் ஆண்டாள் நூறு கலங்களில் நிவேதனப் பொருளைப் படைப்பதாகப் பாடுகிறாள். இதைக்கற்ற இராமநுசர் இதில் சொல்லிய வண்ணமே அழகர்க்குப் பெரிய தடாக்களில் ஆராதனம் ஆக்கிப் படைத்தார் என்று வரலாறு கூறுகிறது. வைணவப் பெருமக்கள் பாசுரங்களில் சொல்லியவற்றைத் திவ்விய தேசக் கோயில்களில் நடைமுறைப்படுத்தினர்.

வைணவ சமயம் நாலாயிர திவ்விய பிரபந்தத்திற்குத் தலைமை கொடுத்தமையால் அதில் சொல்லப்பட்ட மரபுகள் திருக்கோயிலால் ஏற்றுக் கொள்ளப்பட்டன. ஆனால் சைவ சமயசான்றோர்களும் திருக்கோயில் களும் சைவ திருமுறைச் சிந்தனைகளை மரபுகளை முழுமையாகத் திருக்கோயில்களில் பின்பற்றவில்லை. இதனால் கோயில் விழாக்கள் கோயில் நித்திய பூசை

ஆகியவற்றில் நாலாயிரதிவ்விய பிரபந்தத்திற்குப் பேரிடம் இருப்பது போலச் சைவ திருமுறைகளுக்குக் கோயில்களில் பேரிடம் கொடுக்கப்படவில்லை.

ஆழ்வார்கள் வழிபாட்டில் முதன்மையானதும் இன்றியமையாததும் என்று வலியுறுத்துவது இறைவனுடைய பெயரைச் சொல்வதாகும். இதனைத் திருநாம சங்கீர்த்தனம் என்றும் எல்லாச் சமயத்திலும் இத்தகைய கோஷங்கள் உண்டு. இது வைணத்தில் மிகுதி. திருமாலின் திருப்பெயரைச் சொல்லுவதையே ஆழ்வார்கள் வலியுறுத்துகின்றனர். சிலைவடிவான அவ்வடிவையே ஆன்றோர்கள் வழிபட்டிருக்கின்றனர். சில பாசுரங்கள் 'பேரெழுதி' என்று குறிக்கின்றன. தெய்வப் பெயரை எழுதி வணங்கினார்களா? தெய்வ வடிவை ஓவியமாக்கி வணங்கினார்களா? என்பது புலனாகவில்லை.

ஆழ்வார்கள் பாசுரங்களில் அவர்கள் திருமாலைப் போற்றியும் புகழ்ந்தும் பாடுகின்றனர். ஆழ்வார்களின் முதன்மை நோக்கம் திருமாலைப் பாடுவது அன்றி வேறு அன்று. அவ்வாறு பாடும் போது அவர்களை அறியாமல் சில வழிபாட்டுக் குறிப்புகள் பாசுரங்களில் வந்து விடுகின்றன. அந்தக் குறிப்புகளுக்கு வியாக்கி யானம் எழுதியவர்கள் விரிவான கருத்துகளை எழுதி யிருக்கின்றனர். இவற்றை நோக்கியே சில உண்மை களை அறிந்து கொள்ள முடிகிறது. கோயில் வழி பாட்டு மரபுகளை அவர்கள் சொல்லவில்லை.